THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

30.00

பக்கங்கள் -28

வார சஞ்சிகை

ஏப்ரல் 03 - ஏப்ரல் 09, 2013

April 03 - April 09, 2013

## சர்வதேச அரசியலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை!

## ஜெனீவாவும் சுவாமியும்!



## தமிழ் மாணவர் போராட்டமும் அரசியல்வாதிகளும்!



## இந்தியாவின் இரட்டைப் போக்குத் தந்திரோபாயம்!

1717 FOLLOW US www.mobitel.lk

தேவைகளுக்கு முதலிடம் வழங்கி

பின்னர் செலுத்துங்கள்







20

Sri Lanka Telecom Mobitel

# நிஜமான சிலந்தி மனிதன்!



உக்ரைனைச் சேர்ந்த முஸ்டாங் வோன்டட் என்ற இளைஞன் கட்டிடங்களின் உச்சியில் தொங்கும் படங்கள் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஆரம்பத்தில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றிய முஸ்டாங் 'ஸ்கை வோக்கிங்' எனப்படும் அபாயகரமான சாகசங்களின் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி கட்டிடங்களில் தொங்கத் தொடங்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி உயரமான கட்டிடங்கள், கோபுரங்களிலும் ஏறி நின்று பார்ப்பவர்களை பரவசப்படுத்துகின்றார்.

இவரை நிஜ வாழ்க்கையில் ஒரு சிலந்தி மனிதர் ( spiderman) என பலர் வர்ணிக்கின்றனர்.












**இலங்கை அரசு அமெரிக்காவின் சர்வதேச உலக ஒழுங்கைப் பொறுத்தும், இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தைப் பொறுத்தும் என்ன நிலைப்பாடு எடுக்கப் போகின்றது என்பதே முதலாவது அம்சமாக விளங்கும். இதன் அடிப்படையிலேயே தீர்மானத்தில் பரிந்துரைகளின் நிறைவேற்றம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.**

# சர்வதேச அரசியலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை!

**சந்திரசேகர ஆசாத்**

இன்று உலகில் இடம்பெறும் ஒவ்வொரு அசைவும் அமெரிக்காவின் உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இடம்பெறுகின்றன. இவ்வாறே இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் சகல நடவடிக்கைகளும் இந்திய, சீன பிராந்திய மேலாதிக்கப் போட்டியின் வெளிப்பாடுகளாகவே கையாளப்படுகின்றன. இத்தகைய ஒரு சூழலிலேயே இலங்கைத் தமிழர் விவகாரத்தை ஒவ்வொரு அணிகளும் தமது நலன்களுக்கு இசைவான முறையில் பயன்படுத்த முனைகின்றன.

அண்மையில் ஜெனீவாவில் இடம்பெற்ற மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அமெரிக்காவால் இலங்கைக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்பட்ட காலகட்டத்தில் இதன் பிரதிபலிப்பு தெளிவாகவே வெளிப்பட்டது.

இத்தீர்மானம் தொடர்பாக பெரும் பரபரப்பும், பல்வேறு விதமான எதிர்பார்ப்புக்களும் இருந்தன. இந்தக் கூட்டத் தொடரில் மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆற்றிய உரையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட காத்திரமான கருத்துக்களும் இத்தகைய எதிர்பார்ப்புக்களுக்கு ஒரு காரணமாக அமைந்திருந்தன. அவரின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்காவால் ஒரு பிரேரணை விவாதத்திற்கென முன்வைக்கப்பட்டது. பின்பு அதில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் திருத்தங்கள் கியூபா, ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகளின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அந்த நாடுகள் தீர்மானத்திற்கு எதிராகவே வாக்களித்தன. அவற்றின் கோரிக்கைகளுக்கு அமைவாகத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அவை ஏன் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன என்ற கேள்வி எழுகிறது. எனினும் சர்வதேச மன்னிப்புச் சபையோ மேற்படி திருத்தங்களுக்கு இந்தியா கொடுத்த அழுத்தமே காரணம் எனக் குற்றம் சாட்டியது. இறுதி வாக்கெடுப்பில் இந்தியா தீர்மானத்தை ஆதரித்தே வாக்களித்தது. எனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்படத் திரை மறைவில் நின்று செயற்பட்டவர் யார் என்பதைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

குற்றம் சுமத்தப்படுபவனையே நீதிபதியாக்குவது போன்று இலங்கையே சுயாதீனமான முறையில் விசாரணைகளை நடத்த வேண்டுமெனவும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமெனவும் கோரிக்கை வைப்பதாக ஒரு வலுவிழந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, இத் தீர்மானம் இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைப்போக்கைப் பலவீனப்படுத்தும் வகையில் அமையும் என்ற பல்வேறு தரப்பினரின் எதிர்பார்ப்புக்களும் தவிடுபொடியாக்கப்பட்டு விட்டன.

இலங்கையுடனான அமெரிக்க, இந்திய ராஜதந்திர நகர்வின் அடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வுக்கான பாதை திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு எரித்துச் சாம்பலாக்கப்பட்டு விட்டது. அது மேலும் மேலும் இழுபடும் நிலைமையும், ஒடுக்கு முறைகள் மேலும் வலுவடையும் சூழலுமே தோன்றியுள்ளது. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு எதிராக நியாயத்தை நிலைநாட்டும் பணியும் குற்றம் சுமத்தப்பட்டவரிடமே ஒப்படைக்கப்பட்டு விட்டது.

எனினும், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் இருந்தாலும் அமெரிக்கா உடனடியாகக் கதவுகளை மூடிவிடவில்லை எனக் கூறியிருந்தார். இத்தீர்மானம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமெரிக்க, தென்னாசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் ரொபேட் ஒபிளாக் இத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட விஷயங்களை இலங்கை நடைமுறைப்படுத்தத் தவறினால் அமெரிக்காவின் அடுத்த நடவடிக்கை எப்படியிருக்கும் என இப்போது கூறிவிட முடியாது எனத் தெரிவித்துள்ளார். அதேவேளையில் இந்தியாவின் ஐ.நா பிரதிநிதி திலீப் சின்ஹா தீர்மானத்தில் குறிப்பிட்ட சுயாதீன விசாரணை என்பது சர்வதேச விசாரணையையும் குறிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். தீர்மானம் வலுவற்றதாகவும், நம்பிக்கை யளிக்கும் விதமாக இல்லாமலும், இலங்கைக்கு மேலும் வாய்ப்புக்களை வழங்கும் வகையிலும் அமைந்திருந்த போதிலும் தீர்மானத்தின் பின்னான ஊடகச் சந்திப்புகளின் போது வெளியிடப்படும் கருத்துக்கள் இலங்கை அரசை எச்சரிக்கை செய்யும் வகையில் அமைந்துள்ளமையை நாம் அவதானிக்க முடியும். அவை தீர்மானத்தில் உள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே உள்ளன போன்ற தோற்றப்பாடு தெரிகின்றது.

இத்தகைய அழுத்தங்கள் எந்த வகையில் அமையும், எந்தச் சூழலில் கடுமையாக்கப்படும் அல்லது மென்மையாக்கப்படும் என்பதெல்லாம் இலங்கை அரசின் நகர்வுகளைப் பொறுத்தே அமையும். இதில் இலங்கை அரசு அமெரிக்காவின் சர்வதேச உலக ஒழுங்கைப் பொறுத்தும், இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தைப் பொறுத்தும் என்ன நிலைப்பாடு எடுக்கப் போகின்றது என்பதே முதலாவது அம்சமாக விளங்கும். இதன் அடிப்படையிலேயே தீர்மானத்தில் பரிந்துரைகளின் நிறைவேற்றம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

அதாவது அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் தொடர்பான தீர்மானம் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இருந்தாலும் அதன் அமுலாக்கம் உலக அரசியல் ஒழுங்கில் இரண்டாம் தரமாகவே கணிக்கப்படும்.

அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ இலங்கை விவகாரத்தில் இந்தியாவைத் தவிர்த்துவிட்டு எப்போதுமே கையாளப் போவதில்லை. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்ற போது அதன் அனுசரணையாளராகச் செயற்பட்ட எரிக் சோல் ஹெய்ம் ஒவ்வொரு சுற்றுப் பேச்சு நடாத்தும் போதும். இந்தியாவுடன் ஆலோசனை நடத்தியமை ஒரு நல்ல உதாரணமாகும். கடந்த வருடம் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் கூட இந்தியாவின் அழுத்தத்தின் பேரிலேயே வலுவிழக்கச் செய்யப்பட்டதையும் மறந்து விட முடியாது.

இலங்கையின் அமைவிடம் காரணமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு அரசியல் இராணுவ கேந்திர நிலையமாகவே கருதப்படுகிறது. எனவே இலங்கையை முழுமையாகச் சீனா பக்கம் சாய்ந்து விடாமலும், சீனா இலங்கையை ஒரு தளமாகப் பாவிப்பதைத் தடுப்பதும் அமெரிக்காவினதும், ஐரோப்பிய நாடுகளினதும் முக்கிய தேவையாக உள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்திய மேலாதிக்கத்தில் இன்று சீனாவும் சரியான போட்டியாக எழுச்சி பெற்று நிற்கிறது இப்படியான ஒரு சூழ் நிலையில் இலங்கையைக் கையாளும் பொறுப்பைச் சர்வதேசம் இந்தியாவின் கைகளிலேயே விட்டு வைத்துள்ளது. இதற்கு இந்தியா இலங்கையின் அயல்நாடு என்பதும் இரு நாடுகளுக்குமிடையே கலாசார, பொருளாதாரத் தொடர்புகள் நிலவுவதும் ஒரு காரணமாகும்.

ஆனால், இந்தியா இந்திரா காந்தி காலத்திலிருந்து இன்று வரை இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தனது நலன்களுக்கு ஏற்பவே கையாண்டு வருகிறது. இதன் காரணமாக இலங்கைத் தமிழ் மக்கள் அடைந்த என்பதே ஜீரணிக்க முடியாத ஒரு உண்மையாகும்.

இன்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான ஏற்றுமதி இறக்குமதி தொடர்புகள் மிகவும் வலிமையான நிலையிலேயே உள்ளன. இலங்கை- இந்தியாவிலிருந்து வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், இயந்திரங்கள், மென் பொருட்களை இறக்குமதி செய்கிறது. சுற்றுலா போன்ற துறைகளிலும் இந்தியா பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அது மட்டுமின்றி காங்கேசந்துறைத் துறைமுகம், பலாலி விமான நிலையம், சம்பூர் கைத்தொழில் நிலையம் என்பவற்றிலும் பெரும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் எண்ணெய் வர்த்தகத்திலும், எண்ணெய் அகழ்வுப் பணிகளிலும் இந்தியா பங்கு கொண்டுள்ளது.

அதாவது இந்தியப் பெரு முதலாளித்துவ வர்க்கம் இலங்கையில் மிக நன்றாகவே காலூன்றியுள்ளது. எக்காலத்திலும் இந்த முதலாளித்துவ நிறுவனங்களினதும், வர்த்தக முதலைகளினதும் நலன்களுக்கு அப்பால் செயற்பட இந்திய அரசால் முடியாது.

எனவே, என்றுமேஇந்திய அரசு இலங்கை மீது கடும் போக்கைக் கையாளப் போவதில்லை.

அண்மையில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை உதாரணமாக் கூற முடியும்.

இந்தியாவில் இரு பிக்குகள் தஞ்சையிலும், சென்னையிலும் சில தனிப்பட்ட நபர்களால் தாக்கப்பட்டனர். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு விட்டனர். உடனடியாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கைப் பிரஜைகள் தமிழகத்துக்குப் போகக் கூடாது எனக் கட்டளையிட்டார். சென்னைக்கான இலங்கையின் விமான சேவைகள் அரைவாசியாகக் குறைக்கப்பட்டன. பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தியத் தூதுவர் அசோக் காந்தா தன்னைச் சந்தித்த பிக்குளிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தார்.

ஆனால், மட்டக்களப்பின் தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு நகரில் இருந்த மகாத்மா காந்தி, விவேகானந்தர் ஆகியோரின் சிலைகள் அகற்றப்பட்டு விட்டன. மகாத்மா காந்தி இந்தியாவின் தேசத் தந்தை எனப் போற்றப்படுபவர். விவேகானந்தர் உலகம் போற்றும் இந்திய ஆன்மிகவாதி. அவர்களின் சிலைகள் ஏற்கனவே உடைக்கப்பட்டுப் பின்பு சீர் செய்யப்பட்டன. இன்று அவை அகற்றப்பட்டே விட்டன. இது இந்திய தேசத்தையும், மக்களையும் அவமதிக்கும் செயலாகும். இது பற்றி இந்தியத் தூதுவரோ, இந்திய அரசோ நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

இப்படியாக இந்தியப் பெரு முதலாளித்துவ, பொருளாதார, வர்த்தக நலன்களுக்காக இந்தியாவின் மானத்தை விட்டுக் கொடுக்கும் இவர்கள் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் எப்படி நடப்பார்கள் என்பது சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

அடிப்படையில் சர்வதேச அரசியலில் இலங்கைத் தமிழர் விவகாரம், ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் நலன்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படும் ஒரு விஷயமாக மாறிவிட்டது. ஆனால், இந்தியாவில் எழுச்சி பெற்ற மாணவர் போராட்டம், புலம் பெயர் தமிழர்களின் போராட்டம் என்பன தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் புதிய திசைகளைக் காட்டி நிற்பது ஒரு நல்ல அறிகுறியாகும்.




# 'சும்மா' தரப்படும் உதவிகள்

அந்தக் காலைப் பொழுதில் அவரைச் சந்திக்க வேண்டிய அவசிய தேவையை நோக்கி அவரின் வீட்டு வாசலில் நின்றேன். அவர் எனது பள்ளிக் கால நண்பர் மாத்திரமல்ல உறவினரும்கூட! பிரசித்தி பெற்ற வழக்கறிஞராகக் கடமையாற்றியவர் ஜெயசிங்கம். அன்று அவரின் மனைவி தமது வீட்டு வாசலில் என்னைப் பார்த்ததும் வரவேற்றார்.

"அவர் குளியலறையில் முகம் கை கால் கழுவிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உள்ளே வந்து உட்காருங்கள்" என்றுரைத்த அவரின் சொற்களுக்குக் காது கொடுத்த நான், அங்கே அழுதுகொண்டே நின்றிருந்த அவர்களின் நான்கு வயது நிரம்பிய மகனின் சோகத்திற்குள்ளே எனது பார்வையைத் திருப்பினேன்.

முற்றத்தில் நின்றிருந்த அந்த மாமரக் கொப்பில் ஒரு வெள்ளை நிறப்பட்டம் தொங்கிக் கொண்டிருந்தது. எனது நேர்பார்வையில் அது தெரிந்தது. ஆனால், சிறுவனோ அதனை அண்ணார்ந்து பார்ப்பதும் வீறிட்டுக் கை, கால்களை உதறி அழுவதுமாகத் துடிதுடித்து நின்ற செய்கை எனக்கு எதையோ உணர்த்தியது. அவனுக்கு உதவ வேண்டும் என்ற விருப்பம் என்னிடத்தில் மேலெழுந்தது. எனினும் அவனது அழுகையைக் கேட்டும் அவனது செய்கையைக் கண்டும் காணாதவர் போல அந்தத் தாயார் சென்ற செயல் எனது மனதை உறுத்தியது

அவன் தொடர்ந்து அழுது கொண்டிருந்தான். சிறுவனது உயரத்துக்கு எட்டாத தூரத்தில் தொங்கிய அந்தப் பட்டத்தை எடுத்துத் தருமாறு கேட்டே அவன் அழுது கொண்டிருக்கிறான் என்பதைத் தீர்மானிக்க எனக்கு அதிக நேரமாகவில்லை.

அவனைப் பரிதாபமாகப் பார்த்தேன். அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என எண்ணினேன். எனது கைக்கு எட்டிய தூரத்தில் தொங்கிக் கிடந்த பட்டத்தை எடுத்து அவனிடம் கொடுத்தேன். அவன் சந்தோசப்பட்டான். இந்நேரத்தில் சிறுவனின் அழுகைச் சத்தம் அடங்கி, அமைதி நிலவுவதை உணர்ந்த அவனது தாயார் வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.

சிறுவனின் கையில் நான் கொடுத்த பட்டம் இருப்பதைக் கண்டதும் என்னை நோக்கியவர் "பட்டத்தை நீங்களா எடுத்துக் கொடுத்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஓம்... ஓமோம்" என்று எனது செயலைப் பெருமையாக எண்ணிக் கொண்டே தலையசைத்தேன். உடனேயே அவரது முகத்தில் புன்சிரிப்பொன்று மலர்ந்தது. ஆனால், சிறிது கண்டிப்போடு சிறுவனை நோக்கிய அவர் என்னைப் பார்த்து "அவன் அழுது அடம் பிடிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எந்த வகையான மறுப்புமின்றி நாம் உதவி செய்தால் அவனது ஊக்கம் மௌனித்து விடும். எதிர்காலத்தில் அவனது தேவைகள் எல்லாவற்றுக்குமே" மற்றவர்களை எதிர்பார்க்கும் நிலைக்குப் பழக்கப்பட்டு



விடுவான். அவன் தானாகவேமுயற்சிசெய்து அவன் எதிர்பார்த்ததைக் கண்டடைய இயலாத நிலையிலேயே நாம் உதவி செய்வதற்கு முந்துதல் சிறப்பானது" என்றார்.

அவரது வார்த்தைகள் என்னைச் சுட்டன. உண்மையிலேயே வாழ்க்கையில் நாம் பெறுகின்ற உதவிகள் அனைத்தையுமே பல வழிகளிலும் எமது முயற்சிகளின்றிப் பெறுகின்ற நிலையில் நாம் செயலற்றவர்களாக உழைப்பையும், உணர்வுகளையும் மௌனித்தவர்களாக வாழப் பழகி விடுகிறோம். இலவசமாகவும் எமது முயற்சிகளை முன்னெடுக்காத நிலையிலும் 'சும்மா' பெறுவதிலே நம்மை நாமே பழக்கப்படுத்திக் கொண்டவர்களாக வாழும் ஒழுங்கிலும் எமது எதிர்காலம் இருண்டே தொடரப் போகிறது.

எங்களை மகிழ்விப்பதாக எண்ணிக் கொண்டே எமது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் ஊக்கப்படுத்தாது அரசும், எம்மை அடுத்துள்ள பலரும் வழங்குகின்ற உதவிகள் எமது சிந்தனையை மழுங்கடிப்பதுடன் உறுதியற்ற நியாயமற்ற மௌனிப்புக்கும் வாய்ப்பளித்து விடுகின்றது.


எமது சிந்தனைக்கும் செயலுக்கும் ஊக்கம் தரும் வகையில் எம்மைச் சிந்திக்கவும், செயலாற்றவும் சந்தர்ப்பம் வழங்குபவர்களின் பங்களிப்பே இன்று எமது தேவையாகும். அதன் மூலமாகவே எமது வாழ்க்கையை நாம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இன்றைய எமது சூழல் இலவசமான பல வழங்கல்கள் மூலம் எமது உரிமைகளையும் வாழ்வின் சுதந்திரத்தையும் கூடப் பறித்துச் செல்வதை நாம் உணர இயலாமல் செய்து விடுகின்றன. நாம் ஏன் சோம்பேறிகளாக வளர்க்கப்பட்டு வருகிறோம் என்பதைச் சற்றே சிந்திப்போம்.

நெடுந்தீவு மகேஷ்

# மத அடிப்படைவாதத்திற்கு எதிரான எழுத்தாளனின் செயற்பாடு!

மதங்கள் வலியுறுத்துகின்ற அறம் சார்ந்த விழுமியங்களைக் கடைந்தொழுகுவோர் தீவிரம் சார்ந்த வேறொரு கண்ணோட்டத்தில் அவற்றை அணுகுவதைத் தடுக்கவல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படைவாதம் புரையோடிப்போன விசயம். இதை ஒரே நாளில் நசுக்கி விட இயலாது. எனினும், மத அடிப்படைவாதம் போராடிச் சாய்க்க வேண்டிய நச்சு மரமே. இதைக் கொண்டு . நாம் இழந்து நிற்பவை ஏராளம். போற்றி ஆராதிக்கத்தக்க எண்ணற்ற இலக்கியப் பொக்கிஷங்கள் முச்சந்தியிலிட்டு எரிக்கப்பட்டுள்ளன. கலை, இலக்கிய ஞானம் அரும்புவதை முளையிலேயே கிள்ளி எறியும் அறிவீனம் தொடர்கிறது. மன இறுக்கத்தை இசை கேட்டுத் தளர்த்திக் கொள்வது பாவம் என்று இங்கே கற்பிக்கப்படுகிறது. குறிப்பாகப் பெண்கல்வி மறுக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் இருள் மயமாக்கப்பட்டுள்ளது. படைப்பாளிகளோ ஊர் விலக்கம், மதவிலக்கம் என்று அச்சுறுத்தப்பட்டுள்ளனர். தனிப்பட்ட ஒரு சிலரின் தீவிரப் போக்கிற்கு, அவர்கள் உண்டாக்குகின்ற விளைவுகளுக்கு ஒட்டு மொத்தமாக சமூகமே அஞ்சித் தலைகுனிந்து நிற்க வேண்டியதாகிறது. மறுமையைக் காரணம் காட்டி இம்மையை ரசனையற்ற நரக வாழ்வாக்க அடிப்படைவாதிகள் கங்கணங் கட்டிக் கொண்டு நிற்கின்றனர். இவ்வாறான சூழலில் படைப்புக்களின் வாயிலாக அடிப்படைவாதத்திற்கு எதிரான குரலைத் தொடர்ந்து ஒலிக்கச் செய்வதன் மூலம் தமிழ் எழுத்தாளன் தனக்கான பங்களிப்பைச் செலுத்த முடியும்.



மெய்ஞானிகளின் அடக்க ஸ்தலங்களை, அவர்களின் உன்னதமான கலை இலக்கிய சாகரங்களை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்லலாம். மதம் ஒருவருக்குத் தன்னை அடையாளப்படுத்துவதற்கான புறக் காரணியாக மட்டுமே இருத்தல் நலம். மற்றபடி அவர் மதச் சார்பற்ற தன்மையிலிருந்து கொண்டு யாவற்றையும் அணுகும் பக்குவமும், சகிப்புத் தன்மையும் கொண்டிருக்க வேண்டும். இந்த மாற்றங்களை நோக்கி நம் கலை இலக் கியச் செயல்பாடுகளை நகர்த்த வேண்டும். நிறுத்தப்பட்ட கொண்டாட்டங்களைத் தொடங்கி அழிக்கப்பட்டவற்றை புனருத்தாரணம் செய்ய முன் வரலாம். மதங்கள் போதிப்பவற்றைத் திரித்து தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஒரு சிலரின் மோசடிகளைத் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் மன நிலையை எல்லோரிடமும் உருவாக்க வேண்டும்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டது போன்ற ஒரு கொடுஞ்செயல் மீண்டும் நிகழாத வண்ணம் மத அடிப்படைவாதிகளை உன்னிப்பாகக் கவனித்து அவர்தம் ஆயுதங்களை மழுங்கடிக்கச் செய்யும் பொறுப்பு ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் உண்டு. மதஅடிப்படைக்கு எதிரான கலை இலக்கியக் கர்த்தாக்களின் இயக்கம் ஒன்று உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும். அது பெயரளவில் நில்லாமல் உயிர்த்துடிப்புடன் இயங்கவும் வேண்டும்.

கீரனூர் ஜாகீர்ராஜா
(உயிர்மை)

# இறக்குமதி மோசடியின் பின்னணியில் அரசியல்வாதிகள்!

**சட்டத்தை மீறிய விதத்தில் இறக்குமதி செய்கையில் தப்பித் தவறி அகப்பட நேர்டுமாயின் தமது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்திருப்பதால் எப்பொழுதுமே அவற்றிற்கான அனுமதிப் பத்திரங்களை மற்றவர்கள் பெயர்களில்தான் பெற்றுக் கொள்வார்கள். இதுவே அவர்கள் கைக்கொண்டு வரும் வழிமுறையாகவுள்ளது.**

சிறீலங்கா சுங்கத் திணைக்களத்தின் தவறுகள் ஏதும் நிகழாமல் தடுக்கும் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் 10 மில்லியன் ரூபாக்களை இலவசமாகப் பெற்றுக் கொண்டதன் பின்பு அரச தரப்பிலுள்ள செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகளால் மற்றவர்கள் பெயரின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத் தயாரிப்பில் பயன் படுத்தப்படும் 'எத்தனொல்' எனும் திரவத்தைக் கொண்ட இரண்டு கொள்கலன்களைச் சோதனையிடாது எவ்விதமாக விடுவித்தனர் என்பது பற்றிய திடுக்கிட வைக்கும் வெளிப்பாடுகள் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளன.


சுங்கத் திணக்களப் பணிப்பாளர், சுப்பிரின்டென்ற் மற்றும் உதவி சுப்பிரின்டென்ற் உட்பட ஆறு சுங்க அதிகாரிகளும் குறித்த அரசியல் வாதிகளிடமிருந்து கொள்கலன்களை விடுவிப்பதற்காக இலஞ்சம் பெற்றுள்ளதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

இத்திரவத்தை நாட்டிற்குள் தொடர்ச்சியாக இறக்குமதி செய்வதில் சம்பந்தப்பட்டவர்களெனக் குற்றம் சாட்டப்படும் அரசியல்வாதிகள் மத்தியில் பிரதிச் சபாநாயகர் சண்டிம வீரக்கொடி, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோண்ஸ்ரன் பர்னாண்டோ, பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொதுவிவகாரங்கள் அமைச்சர் மேர்வின் சில்வா, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பர்னாண்டோ, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த லக்ஸ்மன் பெரேரா மற்றும் வர்த்தகர் மஹிந்த ராமநாயக்க போன்றோர் உள்ளடங்குகின்றனர்.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் இத்திரவத்தின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் இத்தடைவிதிக்கப்படுவதற்கு முன்பே இதனை இறக்குமதி செய்வதில் ஈடுபாடுடைய இந்த அரசியல் வாதிகள் பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் பெயர்களின் கீழ் அவற்றிற்கான மதுவரித் திணைக்களத்தினரின் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு விட்டனர் என சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த நம்பத் தகுந்த, பெயரை வெளியிட விரும்பாத வட்டாரம் மூலமாக சண்டேலீடருக்குத் தெரிய வந்துள்ளது.

சட்டத்தை மீறிய விதத்தில் இத்திரவத்தை இறக்குமதி செய்கையில் தப்பித் தவறி அகப்பட நேரிடுமாயின் தமது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் என்பதை அவர்கள் அறிந்திருப்பதால் எப்பொழுதுமே அவற்றிற்கான அனுமதிப் பத்திரங்களை மற்றவர்கள் பெயர்களில்தான் பெற்றுக் கொள்வார்கள். இதுவே அவர்கள் கைக்கொண்டு வரும் வழிமுறையாகவுள்ளது.

அதுபோன்றே இத்தடவையும் நடந்துள்ளது. பிரச்சினைக்குரிய இவ்விரண்டு கொள்கலன்களும் செலிகா உயன, வட்டரேக, பாதுக்க என்ற முகவரியிலுள்ள அக்சிஸ் இன்டஸ்றீஸ் மூலம் இறக்குமதி செய்ப்பட்டிருப்பினும் அவற்றின் நிஜ இறக்குமதியாளர்கள் இந்த அரசியல் வாதிகளே அவர்கள் பின்னாலிருந்தே இதனை நடத்துவர். ஆனால், இம்முறை அவர்கள் மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு வழங்குவதாக வாக்குறுதியளித்த பணத்தை அவர்களுக்கு வழங்குவதற்குத் தவறியமையே இக்கொள்கலன்கள் இரண்டும் பிடிபட்டமைக்கான காரணம் என



அவ்வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளன.

இவ்விரண்டு கொள்கலன்களும் சுங்கத் திணைக்களத்தினரால் துறைமுகத்திலிருந்து பேலியகொடைக்குச் சோதனையிடவெனக் கொண்டு செல்லும் போது இடைவழியில் வைத்து பங்குனி மாதம் 13 ஆம் திகதி இரவு மதுவரித் திணைக்களத்தின் திடீர் சோதனைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டமை தொடர்பிலும், அவைகளை விடுவிப்பதில் அரசியல்வாதிகள் தலையீட்டின் நிமித்தம் முரண்பாடுகள் தோன்றியுள்ளதால் விசாரணைகள் இடம்பெறுகின்றதெனவும் கடந்த 17.03.2013 திகதி வெளிவந்த சண்டேலீடர் வாரப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனை வாசித்தவர்களும் மறந்திருக்க மாட்டார்கள்.

இச்சம்பவம் இடம்பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்பாக இது போல இறக்குமதி செய்யப்பட்டதாகச் கூறப்படும் எட்டுக் கொள்கலன்கள் சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய இரு தரப்பினராலும் எதுவித சோதனையுமின்றி இதன் பின்னணியில் செயற்படும் அரசியல்வாதிகளால் தாராளமான வகையில் இலஞ்சம் வழங்கப்பட்டமையால் விடுவிக்கப்பட்டன என்றும் சொல்லப்படுகின்றது.

மேலும், மதுவரித் திணைக்களத்தினால் ஒரு வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலான திடீர் முற்றுகையொன்றினை மேற்கொண்டிருக்கப்பட்டிருக்குமாயின் சட்டத்தை மீறிய வகையிலான இத் திரவ இறக்குமதியின் நிஜக் குற்றவாளிகளைக் கைது செய்திருக்க முடிந்திருக்கும் எனவும் அறிய வந்துள்ளது.

அது மட்டுமன்றி அவ்விரண்டு கொள்கலன்களில் உள்ள சரக்குகள் குறித்த பதிவேட்டில் உண்மையின்படி அவற்றிலுள்ளவை 'எத்தனொல்' திரவம் எனப் பதியப்பட்டது. அவ்விரண்டிலும் றொசின் றெசின் அமிலமும் அத்துடன் சல்பேற் ரேர்ப்பன்ரைனும் உள்ளதாகப் பதியப்பட்டிருப்பாதாகவும் தெரியவந்துள்ளது.

வியட்நாமிய கடற் கப்பலொன்றின் மூலம் கொண்டுவரப்பட்ட இவ்விரண்டு கொள்கலன்களில் ஒன்றில் 155 புதிய உலோகப் பீப்பாய்களில் 27, 280,00 கிலோ றொசின் றெசின் அமிலமும் மற்றதில் 155 புதிய உலோகத்தாலான பீப்பாய்களில் 27, 280,00 கிலோ நிறையுடைய சல்பேற் ரேர்ப்பன்ரைனும் இருப்பதாகப் பதிவேடுகளின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அக்கொள்கலன்களைத் தடுத்து வைக்கும்படியான அறிவித்தல்கள் தடுப்புப் பிரிவினரால் பங்குனி 7 ஆம் திகதியே விடுவிக்கப்பட்டருந்த போதிலும் கூட, எவ்விதத்தில் அக் கொள்கலன்களை சுங்கத் திணைக்கள மேற்பார்வை உத்தியோகத்தர் எவரின் மேற் பார்வையுமின்றி வெளியே கொண்டு செல்வதற்கு விடுவித்தனர் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

அதேவேளையில் அதனை இறக்குமதி செய்தவரோ அல்லது அவரது பிரதிநிதி எவருமோ நேரில் பிரசன்னமாயிருக்காத சமயத்தில் இரண்டு கொள்கலன்களையும் திறந்தமைக்காக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெகத் விஜெயவீரா குற்றச்சாட்டிற்கு இலக்காகியுள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் சட்டத்தின் பிரகாரம் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எந்தவொரு கொள்கலனோ அல்லது சரக்குப் பொதியோ இறக்குமதி செய்தவர் அல்லது அவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவரின் முன்னிலையிலேயே திறக்கப்படல் வேண்டும்.

அத்கைய சந்தர்ப்பத்தில் சுங்கத் திணைக்களத்தின் விதிமுறைகளைப் பின்பற்றாமல் நியாயமற்ற முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அக் கொள்கலன்களைத் திறந்துள்ளார். அவர் ஏன் அவ்விதம் செய்தார்? அவர் அவ்விதம் செய்யாமல் இறக்குமதியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ வரும் வரை காத்திருந்தால் இறக்குமதியாளரின் உண்மைப் பெயர் வெட்ட வெளிச்சத்திற்கு வந்திருக்கும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஜெகத் விஜெயவீராவுடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சிகள் அத்தனையும் பயனளிக்கவில்லை. அத்துடன் சுங்கப் பணிப்பாளர் லெஸ்லி காமினியும் வெளிநாடு சென்றிருப்பதால் அவரின் கருத்தையும் பெற இயலாதுள்ளது.

எனவே, கொள்கலன்களை விடுவிப்பதற்காக இலஞ்சம் பெற்றுக் கொண்டதாகக் குற்றம் சாட்டப் படுபவர்களில் ஒருவரான சுங்க உதவி சுப்பிரின்டென்ற் தம்மிக கமகேயுடன் தொடர்பு கொண்ட போது அவரும் கடுமையான அலுவலாக இருப்பதாகவும், கதைக்க இயலாது என்றும் கூறிவிட்டார்.

எனினும் சுங்கத் திணைக்களமும் சிறீலங்கா சுயாதீன அரச வர்த்தக சங்கங்களினதும் ஒன்றியத்தின் பொதுச் செயலாளரான டபிள்யூ. எம். ஆர். பி. விஜயக்கோன் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் இக்குற்றச்சாட்டுகள் யாவும் அரசாங்கத்தின் மீதும் மற்றும் அதன் உறுப்பினர்கள் மீதும் சேற்றை வாரி வீசும் ஒன்றாகும் எனக் கூறியுள்ளார்.

***'சண்டேலீடர்' பத்திரிகையில் நிர்மலா கன்னங்கரா எழுதியது.***

**— ■ தமிழில் ஜஸ்ரின்**

சுடர் ஒளி

03, ஏப்ரல் - 09 ஏப்ரல், 2013

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5
E-mail: editorial@sudaroli.com

# சர்வதேச மத்தியஸ்தம்!

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதெனில் அது சர்வதேசத்தின் மத்தியஸ்தத்தினூடாகவே சாத்தியப்படும் எனவும், இலங்கை அரசாங்கம் மீது நம்பிக்கை வைப்பதில் பயனில்லை எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. கடந்த காலப் பேச்சுக்களைக் குழப்பியது அரசாங்கமே எனவும், சர்வதேசம் நடுநிலையாளராக பங்கேற்குமானால் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் எனவும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் தெரிவிக்கின்றார்.

ஆனால், சர்வதேச நடுநிலை என்பதற்கு மஹிந்த அரசு இடமளிக்கப் போவதில்லை. தமிழர் பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து இந்த அரசாங்கத்திடம் திட்டவட்டமான நிகழ்ச்சி நிரலொன்று உள்ளது. அதனை வெளிப்படையாக அரசாங்கம் கூறாமல் விட்டாலும் அரசதரப்பினர் அவ்வப்போது வெளியிட்டு வரும் கருத்துக்களும், செயற்பாடுகளும் அதனை அறிந்து கொள்ளப் போதுமானது.

தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தேசிய நல்லிணக்கத்திற்கு பாதகமானதாக அமையும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். ஒரு அதிகாரி நிலையிலிருந்து அவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது முறையற்றது என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்தாலும் கூட அவரது கருத்துக்கள் முக்கிய கவனத்திற்குரியதாகவே தமிழ் மக்களால் நோக்கப்படுகின்றது. ஏனெனில், அவர் ஜனாதிபதியின் சகோதரர். அதுமட்டுமல்லாது ஜனாதிபதிக்கு ஆலோசனைகள் வழங்குபவராகவும் இருக்கின்றார். இதனால் அவரின் கருத்துவெளிப்பாடுகள் ஜனாதிபதியினுடையதாகவும் கூட அமையலாம்.

அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருகின்ற இன்றைய நிலைமையிலும் உள்விவகாரங்களில் சர்வதேசத் தலையீட்டை அனுமதிக்க முடியாது என்ற முடிவை அரசாங்கம் அழுத்தம் திருத்தமாகவே தெரிவித்துக் கொண்டிருகின்றது. இந்நிலையில, கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கையினையும் அரசாங்கம் முற்றாகவே நிராகரிக்கும்.

ஆனால், இலங்கை இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களில் சர்வதேச நடுநிலை என்பதை அமெரிக்கா கூட ஏற்றுக்கொண்டுள்ளதாகவே தெரிகின்றது. ஒரு மூன்றாம் தரப்பு இப்பேச்சுக்களுக்கு நடுநிலை வகிக்குமானால் அதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு நல்குமென தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இன்றுள்ள நிலவரத்தில் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஒன்றைக் காணும் பேச்சுவார்த்தைகள் சர்வதேச நடுநிலையுடனேயே சாத்தியம் என்கிற யதார்த்தம் மேலோங்கி வருகின்றது. ஆனால், அரசாங்கம் மட்டுமல்லாமல், அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கும் தமிழ் கட்சிகளும் கூட உள்நாட்டு விவகாரம் சர்வதேசத்திற்குக் கொண்டு செல்லப்பவடுவதை விமர்சிக்கின்றன.


ஆனாலும், இவ்வாறானதொரு சூழ்நிலையை அரசாங்கமே ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இந்நிலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். உள்ளேயே பிரச்சினைகள் தீர்க்கப்படுமானால் சர்வதேசத்தை நாடவேண்டிய தேவை தமிழர் தரப்பிற்கு ஏன் ஏற்படுகின்றது?

ஒரு நாட்டில் வாழும் ஒரு பிரிவினர் அந்த நாட்டுக்குள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையிலேயே அதனை வெளியே கொண்டுசெல்ல வேண்டியிருக்கின்றது. ஆகவே, இன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள சர்வதேச நெருக்கடிகளுக்கு தமிழர்களைக் குற்றம் சொல்ல முடியாது. அரசேதான் இதற்குக் காரணம்.

**

# தமிழக மாணவர் போராட்டமும் அரசியல்வாதிகளும்!

உலக வரலாறுகளில் பெரும்பான்மையான போராட்டங்களின் அடிநாதம் இளைஞர்களும், மாணவர்களுமே. 1965 ஆம் ஆண்டு இந்திய மண்ணில் தொடங்கிய இந்திய எதிர்ப்புப் போராட்டங்கள் தொடக்கம் 1978 ஆம் ஆண்டு இலங்கையில் தனிச் சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்னணியில் தோன்றிய தமிழ் இயக்கங்களின் ஆயுதப் போராட்டம் வரை பட்டியல்கள் நீள்கின்றன. இவற்றில் சில போராட்டங்கள் வெற்றியின் திசையில், விடுதலையின் பாதையில் பயணித்தபோதும் சில போராட்டங்கள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்ட துயர வரலாறுகளும் உலகில் இடம் பிடித்திருக்கின்றன. சீனா, கியூபா, டுனிசியா, எகிப்து என விடுதலைப் போராட்டங்கள் ஆயுதக் கிளர்ச்சிகளாக துளிர் விட்ட போது அதில் பெரும்பான்மையான பங்கை அந்நாடுகளின் உணர்வெழுச்சி கொண்ட மாணவர்களே வகித்தனர். சில நாடுகளில் துளிர் விட்ட மாணவர் போராட்டங்கள் இறுதியில் துப்பாக்கிகளாலேயே நிறுத்தப்பட்டன. சீனாவின் தியானமென் அன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்றும் மாணவர்களால் நினைவு கூரப்படுகின்றது. அமைதியாக இடம்பெற்ற அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் 1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் திகதி மதியவேளை மூவாயிரம் மாணவர்களைக் கொன்று குவித்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்போராட்டம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போதிலும் போராட்டத்தில் காணப்பட்ட அரசியல் பின்புலம் இப்போராட்டத்தின் தோல்விக்கு வழிவகுத்ததாக இன்னும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.



சீனாவில் அப்போது தலைவிரித்தாடிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சுயமாகக் கிளர்தெழுந்த ஆயிரக்கணக்கான மாணவர்களால் இப்போராட்டம் ஒரு சில மாதங்களைக் கடந்தும் உக்கிரமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது தமிழகத்தில் நடக்கும் மாணவர் வீதிமறியல் போராட்டங்களைப் போன்று அப்போதைய பெல்ஜிங் நகர வீதிகள் மாணவர்களால் முற்றுகைக்குள் கொண்டு வரப்பட்டன. சீனாவின் பிரதான நகரான பெல்ஜிங் முக்கிய பகுதிகள் மாணவர்களால் முற்றுகைக்குள்ளேயே வைக்கப்பட்டன. வீதிகளுக்குக் குறுக்கே வாகனங்களை நிறுத்தி போக்குவரத்துக்களை முடக்கி ஏகாதிபத்தியத்திற்கு சவால் விடுத்து அப்போதைய சீனாவின் மாணவர் சமுதாயம் இரவு பகலெனப் பாராது ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டக்களத்திலேயே இருந்தனர். வீதிகளுக்குக் குறுக்கே நிறுத்திவைக்கப்பட்டு இருக்கும் பேரூந்துகளை அரச படைகள் அகற்றி விடக் கூடாது என்பதில் மாணவர்கள் குறியாக இருந்தனர். கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது இரவு பகலாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் வீதிகளில் காவலுக்காக நிறுத்தப்பட்டனர். அப்போதைய ஏகாதிபத்திய அரசு மாணவர் போராட்டங்களால் குலை நடுங்கியது. ஆயிரக்கணக்கில் மாணவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கிளர்தெழுந்து தியானமென் சதுக்கத்தில் திரண்டனர். ஆனால், அப்போராட்டங்களை முளையிலே கிள்ளிவிட நினைத்தது அன்றைய ஏகாதிபத்திய சீன அரசு.

மாணவர்கள் திரண்டிருந்த சதுக்கப் பகுதிக்குள் அத்துமீறிப் புகுந்தது சீனாவின் கவச வாகனப் படையணி. மாணவர்களைப் பணிந்து போகுமாறும், கலைந்து போகுமாறும் கர்ச்சித்தது. மாணவர் முற்றுகைக்குள் இருந்தபடியே அடக்குமுறைக்கு எதிராகக் குரலையெழுப்பினர். மாணவர்களைப் பேசியும், மிரட்டியும் பணியவைக்க முடியாது என்பதை உணர்ந்தது அந்த ஏவலாளிப் படைகள். அங்கு நின்ற கவச வாகனங்களில் இருந்து சீறிப் பாய்ந்தது குண்டுகள். சதுக்கப் பகுதிக்குள் திரண்டு நின்ற மாணவர்கள் தூப்பாக்கிக் குண்டுகளை மார்பிலே தாங்கிக் கொத்துக் கொத்தாகச் செத்து வீழ்ந்தனர். சுமார் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொன்று குவித்த பின்னரே அடங்கியது இராணுவத் துப்பாக்கிகள். இச்சம்பவமே உலகில் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதியுச்ச வன்முறையாக இருக்கின்றது. சுமார் 23 வருடங்களைக் கடந்த பின்னரும் இன்னும் தியானமென் சதுக்கத்தில் இடம்பெற்ற படுகொலை நினைவுகள் சீன மக்களை விட்டு அகலவில்லை. அப்போராட்டத்தில் சுட்டும் கொல்லப்பட்ட மாணவத் தலைவனுக்கு நோபல் பரிசும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு இராணுவ முற்றுகைக்குள் குரலெழுப்பிய மாணவர்களின் வரலாறுகள் வரலாற்றுப் புத்தகங்களில் நிறையவே இடம்பெற்றிருக்கின்றன.

இலங்கையிலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டங்களில் மாணவர் பங்களிப்பு நிறையவே உள்ளன. இராணுவம் முற்றுகையிட்ட போது எதிரிகளின் கைகளில் அகப்படக் கூடாது என சயனட் அருந்தி உயிர்நீத்த தியாகி பொன் சிவகுமாரன். இந்திய அரசின் போலி முகத்திரையைக் கிழித்து உயிர் நீத்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் திலீபன் என இலங்கையிலும் மாணவர் உரிமை முழக்கப் பட்டியல்கள் நீள்கின்றன.

இந்தியாவிலும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1965 ஆம் ஆண்டு மாணவர்களாலேயே முன்னெடுக் கப்பட்டது. அப்போதய இந்திய காங்கிரஸ் கட்சியினால் கொண்டு வரப்பட்ட இந்தி மொழி அரச மொழியாக்கல் பற்றிய சிபார்சே இப்போராட்டம் துளிர்விடக் காரண மானது. இந்தியாவில் இடம்பெற்ற மிகப் பெரிய மாணவர் போராட்டம் இதுவென இன்றும் வர்ணிக்கப்படுகிறது. அப்போதய ஆட்சியில் இருந்த இந்திய அரசால் கொண்டு வரப்பட்ட தீர்மான முயற்சியே மாணவர்களை வீதிகளில் இறக்கியது. தமிழகத்தின் மூலை முடுக்கெங்கும் கொந்தளித்து. கிளம்பிய மாணவர் சமுதாயம் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வீதிகளில் இறங்கியது. இந்தி மொழி அரசகரும மொழி ஆக்கப் படுவதற்கு எதிராவும், தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதற்கு எதிராகவுமே அப்போதய மாணவர் சமுதாயம் உணர் வெழுச்சியுடன் குரல் எழுப்பியது. முதன் முதலாக தமிழகத்தில் தனிக் கொடியை ஏற்றி மாணவர்கள் தம்முள் புதைந் திருந்த வீரத்தை அரியணையில் ஏற்றினர். இந்திய இராணுவம் தமிழக எல்லைக்குள் துப்பாக்கிக் குழல்களோடு புகுந்த போதிலும் மாணவர்கள் அசரவில்லை. ஆனால், அப்போராட்டம் அரசியல்வாதிளிடம் பெற்ற உறுதிமொழிகளை நம்பியதால் புஸ்வாணமாய் போனது. ஆனால், அதை ஒரு பாடமாக வைத்து இன்றைய மாணவர் சமுதாயம் எந்த அரசியல்வாதிகளின் வெற்றுக் கூச்சல்களையும், சமாளிப்புக்களையும் நம்புவதில்லை எனக் களமிறங் கியிருக்கின்றன. இந்த நிலைமையே மத்திய மாநில அரசுகளை ஒரு கணம் ஆடவைத்திருக்கின்றது.





இந்த மாணவர்களை எவ்வாறு தம் பக்கம் இழுக்கலாம் என காங்கிரசும், திமுகவும், அதிமுகவும் யோசிக்கத் தொடங்கியிருக் கின்றன. இதற்காகவே மாணவர் களை வசியம் பண்ணும் நடவடிக் கைகள் தொடர்வதாகத் தெரிகின் றது. கூட்டணி உடைந்தாலும் ஆட்சி கவிழாது என மன்மோகன் சிங் மார்பை நிமிர்த்தி, விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்ற கதையாகத் தொடர்ந்தாலும் தமிழக மாணவர் குரல்களால் மத்திய அரசும், தமிழக அரசும் ஆடிப் போயிருக்கிறது என்பது புலனா கின்றது. இந்நிலையில் இலங்கைக்குத் தொடர்ந்தும் பின் கதவால் உதவி வரும் மத்திய அரசின் பக்கம் நின்றால் காங் கிரசைப் போல அடுத்த தேர்தலில் தாமும் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படலாம் என கருணாநிதியும், ஜெயலலிதாவும் யோசிப்பதாகத் தெரிகின்றது. இதற்காக கருணாநிதியின் தி.மு.க மத்திய அரசிடமிருந்து வெளியேறியமை, அமைச்சர் பதவிகளை உதறித்தள்ளியமை, கருணாநிதியின் மத்திய அரசுக்கு எதிரான மிரட்டல்கள், தீர்மானங்கள், கட்சியாதரவாளர் மாணவர்களைத் தேடி ஓடும் படலங்கள் தொடங்கியிருக்கின்றன.

மறுபக்கத்தில் தமிழக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஜெயலலிதாவோ மாணவர்கள் கோரும் விடயங்களைத் தமிழக நாடாளுமன்ற தீர்மானமாக நிறைவேற்றிவிட்டால் மாணவர் களை வழிக்குக் கொண்டு வரலாம். என யோசிக்கத் தொடங்கிக் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக் கின்றது. கடந்த சில நாட்களாக அவர் பக்கத்தில் இருந்து அதிரடி அறிவிப்புகள் தமிழகத்தில் நடை பெறுவது தமிழின உணர்வாளர்களின் ஆட்சியா என சந்தேகம் கொள்ள வைக்கின்றது. இலங்கை மீது நாடுகளின் தடைவிதிக்கப்படல், இந்திய அரசின் பட்டியலில் இணைத்தல், இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணித்தல், அம் மாநாட்டை புறக்கணிக்க வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதுதல், தமிழீழத்தைத் தனி நாடாக அங்கீகரிக்க வலியுறுத்தி இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பை நடாத்துதல், ஐ.பி.எல் கிரிக்கெற் போட்டிகளுக்காக இலங்கை வீரர்கள் தமிழகம் வருவதைத் தடுத்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது எனக் கைவிரித்தல், எனப் புதிய புதிய அறிவிப்புகளை அவர் பக்கத்தில் இருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. இதேவேளை கருணாநிதியால் நடாத்தப்பட்ட மத்திய அரசில் இருந்த விலகல் என்னும் நடவடிக்கைக்குப் பதிலடியாகத் தாமும் ஒரு படிமேலே சென்று தமிழக சட்டசபையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இனப் புடுகொலை பற்றி சுயாதீன விசாரணை நடாத்தப்பட வேண் டும் எனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற் றியிருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.



இதேவேளை, மத்திய அரசின் அடிவருடிகளான ஸ்ராலின் மற்றும் வாசன் ஆகியோர் தமது வாக்கு வங்கிகளை நிரப்ப மாணவர் பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்கும், பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வருவோம் எனக் கூச்சலிடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதே வேளை கப்பல் துறை அமைச்சர் மாணவர் போராட்டங்கள் குறித்த உறுதியான நடவடிக்கைகள் மத்திய அரசால் எடுக்கப்படும் எனவும் மாணவர்களிடம் உறுதியளித்ததாகத் தெரிகின்றது.

இந்நிலையில் தமிழகத்தில் காங்கிரஸ் நிலைமையோ பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக மாறியிருக்கின்றது. தமிழகத்தில் இனி அவர்கள் தலை காட்ட முடியாது என்ற நிலையே உருவாகியிருக்கிறது. தமிழகத்தில் வீதிக்கு வீதி காங்கிரஸ் கொடிகள் தீயில் கருகும் சூழலை மாணவர் ஏற்படுத்தியிருக்கின்றனர். தலைவியான சோனியா காந்தியின் உருவ பொம்மைகள் சந்திக்குச் சந்தி தீமூட்டிக் கொழுத்தப்படுகின்றன. இந்த நிலை எந்த விதமான மழுப்பல் உத்தர வாதங்கள், தீர்மானங்களுக்கும் போராட்டக்களத்தில் நிற்கும் மாணவர் கள் மசியமாட்டார்கள் என்ற உண்மையை ஆணித்தரமாக நிரூபிக்கின்றன. ஆனால், போராட்ட நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழக நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற குரல்கள் தமிழகமெங்கும் ஓங்கி ஒலிக்கின்றன.

இதேவேளை மறுபக்கத்தில் மாணவர்களை வன்முறை ரீதியாக அடக்கிவிடும் படலங்களும் தொடர் கின்றன. இதற்குக் காங்கிரஸ் குண்டர்கள் சிலர் ஏவப்படுவதாக மாணவர்களின் சுட்டு விரல்கள் நீள்கின்றன. அண்மையில் ஐந்து தமிழக மாணவர்கள் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களால் தடிகள், பொல்லுகள் கொண்டு தாக்கப்பட்டிருக் கின்றனர். ஐந்து மாணவர்களும் காயமடைந்த நிலை யில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். தமது கட்சியின் கட்டவுட்டுக்களைக் கிழித்தனர், அதனால் தாக்கினோம் என தாக்குதலை நியாயப்படுத்தும் படலங்கள் தொடர் கின்றன.



மறுபக்கத்தில் பிக்குகள் மீதான தாக்குதல்கள், இலங்கையின் முகவர் நிறுவனங் கள் மீதான தாக் குதல்கள் என்பவையும் தமிழகத்தில் இடம்பெற்று வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இத்தாக்குதல் களின் பின்னணி நோக்கம் அமைதியான போராட்டங்களை வன்முறை ரீதியிலான நடவடிக்கை களுக்கு இழுக்கும் முயற்சியே என்ற சந்தேகம் எழுகின்றது. மறுபக்கத்தில் மாணவ மாணவிகளைக் கைது செய்து மிரட்டுவதன் மூலம் போராட்டத்தை அடக்கி விடலாம் என்ற காய் நகர்த்தல் களும் தொடர்கிறது.



இதேவேளை மாணவர் போராட்டங் களை அவமானப்படுத்தும் செயல்பாடுகளும் மத்திய அமைச்சர்கள் ஒரு சிலரால் எடுக்கப்படுகின்ற மத்திய அமைச்சின் பொறுப்புக்களுக்காக மானத்தைக் கூவி விற்கும் கோடாரிக் காம்புகள் இதற்காக களமிறக்கப் பட்டுள்ளனர். இதற்காக தெரிவுசெய்யப்பட்டு உருவேற்றிவிடப் பட்டுள்ள நாராயணசாமி சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றார். அவர் மத்திய அமைச்சில் அங்கம் வகிக்கும் அமைச்சரா அல்லது இலங்கை அரசின் ஊடகப்பேச்சாளரா என்றும் சந்தேகம் கொள்ளும் அளவிற்கு அவரின் வெட்டிப்பேச்சுக்கள் பஞ்சமில்லாமல் தொடர்கின்றது. ஜெயலலிதாவிற்கு பித்துப்பிடித்து விட்டது. மாணவர் போராட்டங்கள் தேவையற்றதென அதிகாரத்திற்கு வால் பிடிக்கும் அவரின் செயல்பாடுகள் தொடர்கின்றன.

இந்நிலையில் இன்றைய சூழலில் இப்போராட்டங்கள் ஈழத்தமிழ்மக் களிடையே நம்பிக்கைப் பெருமூச்சை ஏற்படுத்தியிருக்கிறது. இதேவேளை தமது விடுதலைப்போராட்டம் புதிய திசையொன்றில் பயணிப்பதையும் அவதானிக்க முடிகின்றது. ஆனாலும், தமிழ் மக்கள் சிலவற்றைப் புரிந்து கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் கொத்துக் கொத்தாக மக்கள் செத்து வீழ்ந்தபோது போரைத் தடுக்கத் திராணியற்று நாலு மணிநேரம் குடும்பத்தினரோடு சகிதமாகக் குளிரூட்டிகளுக்கு நடுவில் உண்ணாவிரதமிருந்து அப்பாவி மக்களை ஏமாற்றி அரசியல் நடாத்தியவர்கள் ஏன் இன்று ஏதுமற்று தனிக்காட்டில் நிற்கும் போது காங்கிரசில் இருந்து விலகி ஆதரவுக்கரம் நீட்ட வேண்டும்.

அன்று போரின் போது எறிகணைகள், வெடிகணைகள் மத்தியில் மக்கள் மரணங்களைச் சுமந்த போது விடுதலைப்புலிகள் அழிக்கப்பட வேண்டும். எனப் போரை நியாயப்படுத்திக் குரலெழுப்பியவர்கள் இன்று ஏன் தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள். தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பை நடாத்தக் கோருகிறார்கள். எல்லாம் மாணவர்களை வளைத்துப் போட்டு தாம் நடாத்தும் அரசியல் பிழைப்புக்காகவே.

எனவே, தமிழ் மக்களின் நிம்மதியான கௌரவமான வாழ்வுக்கான போராட்டப் பணியைக் காலம் இன்று தமிழக மாணவர்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது. அந்தப் பணியை தலைமேல் சுமந்து பயணிக்கவேண்டிய நிலையைத் தமிழ்த் தாய் அவர்கள் மீது சுமத்தியிருக்கிறாள். எனவே போராட்டக்களத்தில் நிற்கும் மாணவர் சமுதாயம் பிறரின் அரசியல் எதிர்காலத்திற்காகப் போராட்டத்தை அடகு வைக்காமல் அதை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது.

எனவே, மாவீரன் சேகுவாரா கூறியதைப்போல் கனிந்தவுடன் தானே கீழே விழ புரட்சி ஒன்றும் அப்பிள் பழம் அல்ல அதை நாங்கள் தான் விழுத்த வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்கள் இப்போரிற்கு உலகப் பூமிப்பந்தின் மூலை முடுக்கெங்கும் பரந்து வாழும் தமிழினம் கைகொடுத்து உறுதியுடன் பயணிக்க வேண்டும். இதுவே காலம் திணித்திருக்கும் வரலாற்றுக் கடமை.

**அனுஸ்கன்**



# அந்தக் கண்கள் மட்டும் என்னுடன்

சிறுகதை

– மயூரன் –

பசுமை நிறைந்த வயல்வெளிகளும், உயிரோட்டம் உள்ள நீர் நிலைகளும் வனப்புமிகு வனங்களும் நிறைந்த வன்னி மண் அழகே அழகு தான். குளங்களும் குன்றுகளும் கண்டு குதூகலிக்கும் மனம். இரணைமடுக்குளமும், தூயமடு மாதாவும், வற்றாப்பளை கண்ணகையும், ஒட்டுசுட்டான் சிவனும் என வணக்கத்திற்குரியன எத்தனை தான். வன்னி அழகைக் காணக் கண் கோடி வேண்டும்.

உண்மைதான் அடங்காப்பற்று வணங்காமண் வீரம் நிலைத்த மண் அல்லவா!

புறநானூறு வீரம் பொதிந்த மண்ணில் தமிழரின் வாழ்வோடு ஒத்திருந்த அகநானூறும் இல்லாமல் விடவில்லை. புறநானூற்றின் வீரமும். புறநானூற்று எண்ணமுமே இருந்த என்னுள்ளே அகநானூற்றின் விதையை விதைத்தாள் ஒருத்தி.

ஆயிரம் அழகுகள் கொட்டிக் கிடந்தாலும் நான் அதில் என்னை மறந்திருந்தாலும் அவ் அழகுகள் என் கண்ணை விட்டு மறைவது அவள் என்னருகே இருக்கையிலேயே.

அவள் கண்கள் அகநானூற்றுத் தலைவியின் கண்களை ஒத்திருக்கும். அவளின் மேற்புருவம் வீரனின் வாளை ஒத்திருக்கும். கறுப்புத் திராட்சை கண்களாயினவோ என வியப்பதில் தவறில்லை.

செவ்விதழ் வாய், பிறை ஒத்த நுதலும், முழுமதி முகமும், முந்திரி மூக்கும் என்னை ஈர்த்தது என நீங்கள் நினைக்கலாம். வன்னி போன்ற வனப்புகள் பல அவளிடம் இருந்தாலும் என்னை அவளிடம் ஈர்த்தது, உயிரில் கோர்த்தது அவளது அந்தக் கண்கள் தான். இரணை மடுவில் துள்ளிய மீனொன்று தாவி வந்து கண்களாகியதோ!

அப்படியே அகநானூற்றுத் தலைவியை என் கண் முன்னே நிறுத்தியது அவள் கண்களே. தன் கண்களுக்கே உரிய பெயரையும் வைத்துக் கொண்டாள்.

என் நடையை சோழன் என்பாள். அன்பை சேரன் என்பாள். பெருமையை பாண்டியன் என்பாள். மனதைப் பாரி என்பாள். என்னைப் புறநானூற்றுக்கு அழைத்துச் செல்வாள். மணிக்கணக்கில் தேன்மதுரத் தமிழை மொழிவாள். அவள் என்னுடன் என்ன கதைத்தாலும் நான் கதைப்பது மங்கையவள் மைவிழிகளுடனேயே. அவளைக் காணாத நாட்கள் இருக்கவில்லை என்பதைவிட அவள் கண்களைக் காணாத நாட்கள் இருந்ததில்லை என்று தான் சொல்ல வேண்டும். அவள் கண்கள் மீது காதல் கொள்ள வைத்தது. காலைக் கதிரவனையும் குளிர் மதியையும் அவள் கண்களில் கண்டேன். அவள் கண்களைக் கண்டே திங்கள் பல கடந்தன. இறைவனை வேண்டினேன். அவள் கண்களைப் பார்த்து நீண்ட நாள் வாழ இயற்கை இடையில் நாடகமாடிற்று, செயற்கை வடிவில் போர் அரக்கன் சதிராடினான். வனப்புமிகு வன்னிமண் வறண்டு போயிற்று. பல்குழலின் பரிசில் பசுமை குலைந்தது. கால ஓட்டத்துடன் மக்களும் ஓடினர். உறவுகளைக் கூட மறந்து ஓட வேண்டிய சூழல் உண்டானது. சொந்த ஊரையும் விட்டு சொல்லிக் கொள்ளாமல் இடம் பெயர்ந்தாள் அவள்.

குண்டு மழைக்குள் சிக்குண்டாலும் அவள் கண்களைக் காணாது நானும் இருக்கவில்லை. நாளும் இருக்கவில்லை. கரும்புகைக் குள்ளும் அவளது கருவிழி ஒளிர்ந்தது. மணிக்கணக்கு நாளாகி, நாளும் திங்களாகி, வன்னியும் சுருங்கியது. இறுதியில் வன்னி மண்ணை விட்டுப் பிரியும் நேரத்திலும் அவள் என்னு டனேயே இருந்தாள். அவள் என்னுடன் கதைப்பாள் நான் அவளின் கண்களுடன் கதைப்பேன்.

வன்னியின் இறுதி நாட்கள் எண்ணப்பட அவள் கவலை கொண்டாள். இருவரும் பிரிந்து விடுவோமோ என்று. இருந்தால் ஒருவர் மீது ஒருவர் சாய வேண்டும் என்றே இறைவனை அவள் வேண்டிக் கொண்டாள். வற்றாப்பளைக்குப் பொங்கல், புதூர், புளியம்பொக்கணைக்குப் பொங்கல், திருமுறிகண்டியானுக்கு 108 தேங்காய், மடுவுக்கு யாத்திரை, ஒட்டுசுட்டானுக்கு பிரதோச விரதம், மம்மிலுக்கு அவியல் என்றெல்லாம் அவளது வேண்டுதல் நீண்டது.

கூவும் எறிகணைகள், சிதறும் சன்னங்கள், கீச்சிடும் தோட்டாக்கள், வான் சுற்றும் வான் படைக்கழுகுகள் என்று உயிரைக் கையில் கொண்ட கணம் அது. இரைச்சலிலும் இசை உள்ளது என்று இசையை உயிராய் நினைத்த உள்ளம். இசையைக் கூட மறக்க வைத்த கணம் அது. கூவி வந்த எறிகணை ஒளிப்பிழம்பாய் எம் கூடாரத்தில் விழுந்து சிதறியது. அவள் கண்ணின் ஒளியைத் தவிர வேறொன்றைக் கண்டதென்றால் அவ்வெறிகணையின் ஒளியைத் தான். அவ்வொளியைக் கண்ட பின்பு என்னால் வேறொன் றையும் காண முடியவில்லை.

அவளின் கண்ணே கதியென்று இருந்த என் கண்கள் பறிபோனதை உணர்ந்து கொண்டேன்.

அவளின் முனகல் சத்தத்தை மட்டும் என்னால் கேட்க முடிந்தது. என் பெயரைத்தான் சொல்லியழுதாள். அவளின் அழுகுரலில் மந்த நிலை ஏற்பட அவளும் காயமடைந் தாள் என்பதை உணர்ந்து கொண் டேன். வீழ்ந்த எறிகணைகள் எங்கள் இருவரையும் பிரித்து விட்டதை உணர்ந்தேன். என் மகவைத் தாங்கிய அந்த வயிற்றைக் கிழித்த எறிகணைச் சன்னம் அவளின் உயிரைக் கேள்விக்குறியாக்கியது. என் கண் பார்வையுடன் வாழ்வும் தொலைந்ததை எண்ணிக் கதறினேன்.


உறவினர், அயலவர் உதவியுடன் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டோம். நாட்கள் சில கடந்தது. வன்னி மண் விடுபட்டு வருத்தம் மிகுந்திருந்தது. சில நாட்களாக அவளின் கண்களைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் மேலிட்டது எனக்கு. மருத்துவர்களின் முயற்சியால் எனக்குக் கண்கள் கிடைத்தன.

கண்கள் திறக்கும் நாளும் வந்தது. அவளின் கண்களைப் பார்த்து வாழும் பலன் மீண்டும் வந்ததையிட்டு இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டேன். கண்களின் கட்டுக்கள் அவிழ்த்து விடப்பட்டன. எதிரில் அவள் கயல்விழி கொண்டு சிரித்தாள். உருவமாய் அல்ல ஓவியமாய்.

கதறியே விட்டேன். மருத்துவம் பலனளிக்காமல் அவள் இறந்து விட்டாள். இருவரும் வன்னி மண்ணில் தலை சாய்ந்திருக்கலாமே என்று வாழ்வே வெறுத்தது. என்னை நானே தேற்றிக் கொண் டேன். அவள் நினைவுகளுடன் வாழ நினைத்துக் கொண்டேன். வாழ்கிறேன்.

அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே....

ஆம் என் முகம் பார்க்கும் கண்ணாடியில் அவளது கண்களால் அவளது கண்களைப் பார்த்தவாறே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். வாழ்வேன்....



(அண்மையில் மறைந்த மயூரன் 'இனிது இனிது' இதழில் எழுதிய கதை இது.)

# கவிதைப் புனல்



## ஒப்பந்தம்



வாழும்வரை நட்பென்று
வஞ்சகமின்றி இட்ட சத்தியங்கள்
பொய்த்துப் போனதேன் !
இன்பமும் துன்பமும்
இருவருக்குள்ளுமென
இரகசியமாய் இட்ட ஒப்பந்தம்
இரவல் கனவானதும் என்?
முடிவுரையென்று பேசி - மீண்டும்
முகவுரை தேடும் நமக்குள்
சண்டைகளும்
சமாதானங்களும்
நினைவுத் தீயாய்
நித்தம் முகாரி இசைக்கிறது
பிரிவதற்காய்
பிரிய மனமின்றி
கண்ணீர் மைதொட்டு
கடைசி விண்ணப்பத்தில்
கைச்சாத்திடுகிறேன்!
இட்டுக் கொண்ட
ஒப்பந்தங்களை மீறியபடி!

க.அனுசா
*வற்றாப்பளை.*

## படர்ந்திடு


தரவும்மாட்டேனே - நீ
தா என்றாலும் வா என்றாலும்
வரவும் மாட்டேனே - உன்
வன்செயலில் இருந்து நாட்டை
இரவும் காப்பேனே - நீ
எந்தனது கால் அடியில்
அரவம் இல்லாமல் - வாழ்ந்
தமைதியோடும் சுடலை போவாயே!



வாய்திறக்காதே - கடும்
வார்த்தைகளைக் கொட்டினையேல்
நோய்வருமாமே - பெரும்
நோயும் பாயும் நீயேமேதான்!
நாயும் தேடாமல் - ஆமாம்
நாம் மரமாய் நீ கொடியாய்
மாயும் நாள்வரை - நீ
மரம் துணையாய்ப் படர்ந்திடுவாயே!

சி.அம்பலவாணர்
20 கடல் முகவீதி - திருமலை

## நடந்தும் நடப்பதும்



முல்லைக்குத் தேரீந்தார்
பாரி வள்ளல்
முத்தமிழுக்குப் புகழ்சேர்த்தனர்
மூவேந்தர்கள்!
கல்லிலே சிலைவடிப்பான்
கைதேர்ந்த சிற்பி
காதலுக்காய் தாஜ்மஹாலை
கட்டிவைத்தான் ஷாஜகான்!

தில்லையிலே நடனமாடினான்
சிவபெருமான்
திருகோணமலையில்
கோயில் கொண்டார்
திருக்கோணேசர்!

நல்லிணக்க ஆணைக்குழுவை
அமைத்தது அதிகாரம் - அது
சொல்லிவைத்த பரிந்துரைகள்
தூக்கக் கலக்கத்தில்!

பொல்லைக்கொடுத்து
அடிவாங்கினார்கள் இங்கு சிலர்
பொறுமை காக்க முடியாமல்
பொங்கியெழுந்தனர் இன்று பலர்!

எல்லை மீறிப் போகின்றது
தமிழர் துயர்
எங்கு எப்படி முடியுமோ
ஈழத் தமிழர் நிலை?

மல்லுக் கட்டுது இங்கு
ஹலால் சர்ச்சை விரைவில் ஒரு
நல்ல தீர்வை கண்டால் தான்
தீரும் சர்ச்சை!

கவிக்குயிலன்
சேனையூரான் -06

## இரண்டு அம்மா



இன்பத்திற்கு இணையாய்
நின்று பகிர்ந்து கொள்ளும்
பக்குவம் என் அக்கா.

துயரங்கள் பல கண்டு
துவண்டு விடாதவள்
என் அக்கா.


எத்தனை ஆயிரம் அக்காக்கள்
இவ்வுலகில் இருந்தாலும்
என் அக்காவுக்கு இணை
என் அக்கா தான்.

சிறு வயதிலே தந்தை தாயை
இழந்த போது
தோள் கொடுத்த அம்மா
என் அக்கா.

தங்கையை இழந்து
தவித்த போது
தங்கையாய் நின்று
தரிசனம் தந்தவள்
என் அக்கா.

ஜி.வாசுகி
சாய்ந்தமருது.

## பிரிதல் பற்றிய நினைவுகள்



இணைந்ததன்
மகிழ்வை ஊடறுக்கின்றது
பிரிதல் பற்றிய நினைவுகள்
உன்னில் நான்
துளித்துளியாய் நிறைந்ததும்
கலந்ததும்
எத்தனை காலத்திற்கு
நீடிக்கும்....?
உன் வரவு
என் மனவெளியில்
குளிர்நீராய் பரவி
ஆயிரம் பூக்களை
மலர்வித்தது.
அந்த மலர்த்தோட்டம்
என்றோ ஓர் நாள்
பாலைவனமாகிவிடுமா?
வாழும்போதே பிரிவு வரலாம்
ஆனால், மறத்தல் என்பது
மரணத்தில் மட்டுமே!

- த.விஸ்வா

## துடுப்புகள்

வருக்கள் தான்
வரலாற்றின் துடுப்பென்றால்
துடுப்பது கடலாகிறும்
தாண்டிடப் பார்
கிடைக்கும் வரை

பருத்தி.தாசன்

## வேதம் உணர்ந்தவர்



ஒற்றைக்காதில் தோடு
குத்தி விட்டால் மட்டும்
போதாது தம்பி.
ஒரு பக்க மீசையையும்
வழித்துவிடு
அப்போதுதான் - நீ
உமையொரு பாகன்.

கோமாளி.







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

மனதில் தெய்வீக சிந்தனை வளரும். குடும்ப உறுப்பினர் அதிக அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைந்து தாராள பணவரவு பெறுவீர்கள். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்று, அதிக சம்பளம் பெறுவர். மாணவர்கள் கூடுதல் பயிற்சியினால் மட்டுமே, சராசரி தேர்ச்சி விகிதம் பெற இயலும்.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்ற உங்களிடம் பிரிய முள்ளவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் தாராள பணச்செலவில் வாங்கித் தருவார்கள். உத்தியோகஸ்தர்களுக்குக் கூடுதல் சலுகைப்பயன் வந்து சேரும். குடும்பப் பெண்கள் மங்கல நிகழ்ச்சியில் தங்களது பங்களிப்பை வழங்குவர். மாணவர்கள் எளிதாகப் படித்து அதிக தேர்ச்சி பெறுவர்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பேச்சில் நிதானமும், செயலில் கூடுதல் கவனமும் பின்பற்றுவீர்கள். இளைய சகோதரருக்குக், கௌரவமான பணிவாய்ப்பு கிடைக்க உதவு வீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீர்பெற, சிறு மருத்துவ சிகிச்சை உதவும். சகபணியாளர்களிடம், தகுதிக்கு மீறிய அளவில் பணம் கொடுக்கல், வாங்கல் வேண்டாம். குடும்பப் பெண்கள் செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வெகுநாள் நினைத்த காரியம் ஒன்றைத் தகுந்த திட்டமிடுதலுடன் செயல்படுத்துவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். எதிரி உங்களின் நல்ல குணம் உணர்ந்துகொள்ளப் புதிய வாய்ப்பு வரும். பணியாளர் சிறப்பாகச் செயல்பட்டு, உரிய சன்மானம் பெறுவர். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பு, பணவசதி கிடைத்து சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள் பயிற்சியினால் மதிப்பெண் பெறுவர்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

நீங்கள் எதிர்பார்த்திராத நன்மைகள், ராஜயோகப் பலனாகக் கிடைக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவதுடன், எதிர்மனப்பாங்கு உள்ளவர் உங்களிடம் மறைமுகமாக அனுகூலம் பெற முயற்சிப்பர். இல்லறத் துணை, புரிதல் தன்மையுடன் செயல்படுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி பெற சிலமாற்றம் பின்பற்றுவீர்கள்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

உங்கள் மனதில் தன்னம்பிக்கையும், சுய கௌரவ சிந்தனையும் சம அளவில் கலந்திருக்கும். பூர்வ சொத்தில் சீரான பணவரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள். உத்தியோகஸ் தர் சிறந்த பணிக்காக சலுகை பெறுவர். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்ந்து படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எதிர்பார்த்த பணவரவு எளிய முயற்சியால் கிடைக்கும். வீடு, வாகனத்தில், பராமரிப்புப் பணி தேவைப்படும். உடல்நல ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவு வகைகள் உண்பது நல்லது. இஷ்டதெய்வ வழிபாடு நிறை வேற்றுவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் முயற்சியினால் திட்டமிட்ட பண வரவைப் பெறுவீர்கள். மாணவர்கள் படிப்பில் கவனம் வளர்ந்து சிறந்த தேர்ச்சி விகிதம் கிடைக்கும்.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

இஷ்டதெய்வ அனுக்கிரகத்தினால், வாழ்வில் முக்கியமான நன்மை ஒன்று வந்து சேரும். நியாய, தர்மகுணம் அதிகம் பின்பற்றுவீர்கள். புத்திரர் நற்குண, நற்செயல்களால் பெருமை தேடித்தருவர். தொழில், வியாபாரத்தில் சில சீர்திருத்தம் செய்து உற்பத்தி விற்பனையை அதிகரிப்பீர்கள்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

தகுதி, திறமையை நன்கு பயன்படுத்தி மனதில் தன்னம்பிக்கையும், சமூகத்தில் நற்பெயரும் பெறுவீர்கள். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர்கள் உங்களின் அருமை, பெருமை உணர்ந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற கொள்கையைப் பின்பற்றுவீர்கள். மாணவர்கள் சாகச விளையாட்டுகளைத் தவிர்ப்பது நல்லது.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

கடந்த காலத்தில் உங்களை அவமதித்தவர் தன் குறை உணர்ந்து அன்பு பாராட்டுகிற நன்னிலை ஏற்படும். வீடு வாகன வகையில் முன்னேற்றமான பலன் உண்டு. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் வளர்ச்சிப்பணி நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் ஆர்வமுடன் படித்துத் தேர்ச்சி பெறுவர்.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

உறவினர்களின் மாறுபட்ட செயல்களால் உருவான சிரமங்களைச் சரி செய்வதில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். இல்லறத்துணை உங்களின் ஆலோசனையை மதித்துச் செயல்படுவர். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும். மாணவர்கள், படிப்புக்கான பணவசதி கிடைத்து மனநிம்மதி பெறுவர்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உங்களின் நல்ல குணம், திறமை மிகு பணிகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கத் தாமதம் ஆவதால் வருத்தம் கொள்வீர்கள். இளைய சகோதரர் அன்பாக நடந்து கொள்வார். குடும்பப் பெண்கள் பணவரவுக்கேற்ப செலவுகளைக் குறைத்துக் கொள்வர். மாணவர்கள் கூடுதல் பயிற்சியினால் மட்டுமே சிறந்த தேர்ச்சி விகிதம் பெற இயலும்.

# அணுவைப் பற்றி அறிந்திருந்த நம் முன்னோர்கள்

அணு குறித்து அறிவியல் ஆர்வம் காட்டியது சில நூறு வருடங்களாகத் தான் என்றாலும் நம் முன்னோர்கள் ஆயிரம் வருடங்களுக்கு முன்பே அணுவைப் பற்றி அறிந்திருந்தனர். முதலில் நம் முன்னோர்கள் சொன்னதையும் பிறகு இன்றைய விஞ்ஞானம் சொல்வதையும் பார்ப்போம்.

ஜீவனின் வடிவத்தைச் சொல்லவந்த திருமூலர் ஒரு மாட்டின் முடியை எடுத்து ஆயிரம் கோடி இழைகளாகப் பகுப்பது பற்றிப் பேசுகிறார். ஒரு மாட்டின் முடியை எடுத்து அதை நூறு கூறாகச் சொல்கிறார். பின்னர் அதிலிருந்து ஒரு முடியெடுத்து ஆயிரம் கூறாகச் சொல்கிறார். அவ்வாறு ஆயிரம் கூறு போட்டதில் ஒரு முடியை எடுத்து அதை நூறாயிரம் கூறு போடச் சொல்கிறார். இது தான் ஜீவனின் வடிவம் என்கிறார்.



ஒரு மாட்டின் முடியை ஆயிரம் கோடி இழைகளாகப் பகுப்பது பற்றித் திருமூலர் விவரிப்பதைப் பார்த்தால், நம் முன்னோர் அணுவைப் பிளப்பதை மனக்கண்ணில் கண்டார்கள் என்றே தோன்றுகிறது. பாடல் இதோ:-

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரமானால்
ஆவியின் கூறு நூறாயிரத்தொன்றாகுமே

திருமூலர் இன்னொரு பாடலில் அணுவில் இறைவனும், இறைவனில் அணுவும் இரண்டறக் கலந்து இருப்பதைப் பெரும்பாலோர் உணர்வதில்லை. இணையில்லாத ஈசன் அப்படிப் பிரபஞ்சம் முழுவதும் எங்கும் நிறைந்திருக் கிறான் என்று சொல்கிறார்.

அணுவும் அவனும் அவனுள் அணுவும்
கணுஅற நின்ற கலந்து உணரார்
இணையிலி ஈசன் அவனெங்கும் ஆகித்
தணிவற நின்றான் சராசரம் தானே

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் அணுவை ரூதர் போர்டு பிளந்து பார்த்த போது உள்ளே எலக்ட்ரான், நியூற்றான், புரோட்டான் துகள்களும், பிரம் மண்டமான வெட்ட வெளியும் இருப்பதைக் கண்டார். அணுவின் உள்ளே துகள்கள் சில சமயங்களில் துகள்களாகவும், சில சமயங்களில் அலைகளாக வும் பெரிய அளவில் சக்தி வெளிப்பாடுகள் இருப்பதைக் கண்டார். அதன் பின் அணு ஆராய்ச்சிகள் மிகுந்த ஆர்வத்துடன் உலக நாடுகளில் நடைபெறத் தொடங்கின.

1972-ம் ஆண்டு ப்ரிஜாப் காப்ரா என்கிற பிரபல அமெரிக்க அணு விஞ்ஞானி the dance of Shiva: The Hindu view of matter in the light of morden physics. ( சிவனின் நடனம் : நவீன பௌதீகத்தின் பார்வையில் வஸ்துக் களைப் பற்றிய இந்துக்களின் நோக்கு) என்கிற விஞ்ஞான சம்பந்தப்பட்ட பத்திரிகையில் சிவனின் நடனதுக்கும், உப அணுக்களின் நடனத்துக்கும் உள்ள இணக்கத்தைப்பற்றி முதலில் விவரமாக எழுதினார்.

1975-ம் ஆண்டு இந்தக் கட்டுரையை விரிவுபடுத்தி THE TAO OF PHYSICS என்ற தலைப்பில் ஒரு புத்தகமாகவும் எழுதி, அது உலகிலேயே அதிகம் விற்ற புத்தகங்களில் ஒன்றாகப் பிரபலமாகியது.

அதில் அவர் குறிப்பிட்டது:- எப்படி இந்திய சித்தர்கள், படைப்பைப் பிரிக்க முடியாத, எப்போதுமே செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நடப்பாகப் பார்த்தார் களோ, அப்படியே தான் நவீன விஞ்ஞானம் பிரபஞ்சத்தைக் காண்கிறது.

பிறப்பும், இறப்பும் நிற்பதே இல்லை. அதுபோல், பிரபஞ்சம் என்கிற தத்துவத் தின் அடிப்படையில் அணுக்களின் நடனம், அணுக்களின் பிறப்பினாலும் இறப்பினாலும் நிற்காமல் தொடர்கிறது. கோடானுகோடி அணுக்கள் வினா டிக்கு வினாடி உருவாகி, மறைவதுதான் பிரபஞ்சத்தின் நடனம் (Cosmic Dance). அதுவே தான் நடராஜரின் நடனம் என்கிறார் காப்ரா.

நடராஜரின் பிரபஞ்ச நடனமும், அணுக்களின் நடனமும் ஒன்றே என்று கூறும் அளவுக்கு, விஞ்ஞானமும் இந்திய ஆன்மிகமும் நெருங்கி விட்டிருக்கிறது. அதனால் தான் கடவுள் அணுவைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகூடத்தில் தில்லை நடராஜர் நடனமாடிக் கொண்டிருக்கிறார். இப்போது செர்ன் (CERN) என்று அழைக்கப்படுகிற அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய மைதானத்தில் ஆறடி உயர நடராஜர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

அந்த நடராஜர் சிலை அருகே ஒரு பலகையில் சிவன் நடனத்திற்கும், அணுக் களின் நடனத்துக்கும் இடையே உள்ள ஒற்றுமை பற்றி காப்ரா எழுதிய மேற் கண்ட வரிகளும் எழுதப்பட்டுள்ளன. அணுப்பிளவிற்கு பிறகு விஞ்ஞானிகள் அணுவை மேலும் மேலும் ஆழ்ந்து ஆராயத்தொடங்கினர். இதன் பலனாக துகள் இயற்பியல் என்ற தனித்துறை உருவாகியது.

அடிப்படையான துகள்கள் யாவை? என்று தொடர்ந்து ஆராய முற்பட்டது. மொத்தம் 16 துகள்கள் அடிப்படையான துகள்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. சிறு கல், மண், மேசை, கார், விமானம், பூமி, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், அண்டங்கள் இப்படியாக அனைத்துக்கும் அவற்றின் இயக்கத்திற்கும் இந்த 16 துகள்கள் தான் அடிப்படை என்று கண்ட போதும் விஞ்ஞானிகளுக்கு ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது.

இந்த 16 துகள்கள் மட்டும் பிரபஞ்சத்தைத் தீர்மானித்து விட முடியாது என்று அவர்கள் நம்பினர். 16 துகள்களாலேயே எல்லாம் முழுமையடைந்து விட முடி யாது என்பதும் இதுவரை கண்டறிந்ததில் ஏதோ ஒன்று விட்டுப்போகிறது என்றும் அவர்கள் எண்ணினர்.

எல்லாவற்றையும் நிர்ணயிப்பதும் இயக்குவதுமான இன்னொரு முக்கிய துகள் இருந்தால் மட்டுமே எல்லாமே சீராகவும், ஒழுங்காகவும் இயங்க முடியும் என்று நினைத்த விஞ்ஞானிகளில் முதன்மையானவர் எடின்பரோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பீட்டர் ஹெய்ன்ஸ் என்ற விஞ்ஞானி. அவர் இதை 1964-ம் ஆண்டிலேயே தெரிவித்திருந்தார்.

அதே சமயத்தில் தான் உண்மை என்று அறிவியல் உலகம் உறுதி செய்தது. கடவுள் துகள் என்கிற ஹிக்ஸ்போஸன் என்கிற உப அணுவைப் பல்லாண்டு ஆராய்ச்சியின் முடிவில் கண்டுபிடித்து இருக்கின்றனர்.

ஹிக்ஸ் போஸன் என்கிற நிறைமிகு துகளின் இருப்பும் அதன் இருப்பினால் மட்டுமே இந்தப் பிரபஞ்சமும், உயிரினங்களும் கட்டமைக்கப்பட்டுள்ளது என உறுதி செய்யப்பட்டது. ஜட வஸ்துவுக்கு ஓர் உயிர்ப்பாய், இயக்கமாய், அறிவாய், நிறைவாய் அந்த நிறைமிகு (அதாவது மாஸ் எனப்படும் நிறை காரணமாக) அமைந்துள்ளதால் ஹிக்ஸ் போஸன் துகளைக் கடவுள் துகள் என்று அழைக்கிறார்கள்.

இதில் போஸன் என்ற பாதிப்பெயர் - இந்திய விஞ்ஞானி சத்யேந்திரநாத் போஸ் அவர்களுக்கு உரித்தானது. அந்த உப அணு குறித்து அவரும் முன்பே எழுதியிருந்தார் என்பதால் அவருக்கும் சமபங்கு அளித்து இந்தப் பெயர் வைத் திருக்கின்றனர்.

இப்போது அவனின்றி (சிவனின்றி, ஜீவனின்றி) அணுவும் அசையாது என்று அன்று நம் முன்னோர்கள் சொல்லியிருப்பதையும், அருணகிரிநாதர் தன் திருப்புகழில் 'பாடிய பரமகுருவாய்; அணுவில் அசைவாய்' என்ற வரிகளையும் நினைத்துப் பாருங்கள்.

அணுவில் இருந்து அண்டம் வரை அனைத்தையும் ஈய்க்கும் ஆண்டவன் பற்றி சூட்சுமமாக நம் முன்னோர் அறிந்து இருந்ததன் அறிகுறியே இது என்று கணிக்கத் தோன்றுகிறது அல்லவா???

(சென்ற வாரத் தொடர்ச்சி)


# மர்மக் கொலைகள்

மர்மக் கொலைகள் மற்றும் பாரிய கொள்ளைகளைத் துப்புத் துலக்கி அவற்றின் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் சர்வதேசப் புகழ் பெற்று விளங்கி வருவது ஸ்கொட்லாந்து காவல்துறை அமைப்பு.

அந்த வகையில் கன்சாஸ் மாநிலத்தில் இடம் பெற்ற மர்மக்கொலைகளையும் துப்புத் துலக்கி அவற்றின் நிஜக் கொலையாளியைக் கண்டு பிடிக்கும் பொறுப்பும் ஸ்கொட்லாந்து காவல்துறை அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

அனுபவமும், ஆற்றலும் மிக்க துப்பறியும் நிபுணர்கள் ஐவர் அடங்கிய விசேட குழுவொன்று துப்பறியும் நிபுணரான சுமித் தலைமையில் கன்சாஸ் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டது. அது வரையில் கன்சாசில் இடம் பெற்ற அம்மர்மக் கொலைகள் சம்பந்தப்பட்ட தகவல்கள், விசாரணைகளின் விவரங்கள் அடங்கிய பைல்கள் அவ்விசேட குழுவினரின் தலைவரான துப்பறிவாளர் சுமித்திடம் கையளிக்கப்பட்டன.

துப்பறியும் நடவடிக்கைகளில் இறங்குவதற்கு முன்னதாக அப்பைல்களிலுள்ள சகல விபரங்களையும் சுமித்தும் அவரது உதவியாளர்களும் நன்கு படித்தறிந்து கொண்டு தமக்குள் அலசி ஆராய்ந்தனர். அத்துடன் நின்றுவிடாது அக்கொலைகள் நடந்ததாகக் கூறப்பட்ட இரு வீடுகளையும் சென்று பார்வையிட்டனர். அதே வேளையில் கொலையுண்டவர்களில் ஒருவரான றொபேர்ட் டியுக்கின் குடும்பத்தில் அதிர்ஸ்டவசமாக உயிர் தப்பிய இரண்டு பிள்ளைகளையும் சந்தித்து அவர்களுடனும் உரையாடத் தவறவில்லை.



தமிழில் ஜெகன்

அச்சிறுவர்கள் இருவரும் வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும், அத்துடன் கொலை நடந்த நேரத்தில் அவர்கள் இருவரும் பாடசாலைக்குச் சென்றிருந் தமையாலும் அவர்களிடமிருந்து கொலை குறித்த பயனுடைய தகவல்கள் எதனையும் அவர்களால் பெற்றுக் கொள்ள இயலாது போய்விட்டது. ஆனால், ஒன்றினை மட்டும் அவர்களால் உறுதிசெய்து கொள்ள முடிந்தது. அதாவது கொலையாளி நிச்சயமாக எதனையும் திருடும் நோக்கத்திலோ அல்லது பாலியல் ரீதியான நோக்கத்திலோ கொலையினைச் செய்யவில்லை என்பதே அதுவாகும்.

உண்மைச் சம்பவம்

துப்பறிவாளர் சுமித்தும், சகாக்களும் கொலைகள் குறித்துப் பலகோணங்களிலும் ஆராய்ந்தனர். கொலையாளியின் கைரேகைத் தடயங்கள், உருவத் தோற்றம் குறித்த ஊகங்கள் எதுவுமே கிடைக்காத நிலையில் கொலைகளின் மர்மத்தைத் துலக்குவதில் பெரிதும் சிரமப்பட்டனர். ஆனால், அவர்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. எதுவிதத்திலும் கொலையாளியைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு மூளையைச் செலவழித்தனர்.

சுமித்தின் மூளையின் ஒரு மூலையில் ஓர் பொறி தட்டியது. கொலையுண்டவர்களான றொபேர்ட் டியுக் மற்றும் பார்க்கின்சன் ஆகிய இருவரும் அமெரிக்க விமானப் படையில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்கள் என்ற விடயம் அவரின் மனதை உறுத்தியது. அது மட்டுமன்றி அவ்விருவரும் ஒரே மாநிலமான கன்சாசைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

தாமதிக்காது அமெரிக்க விமானப் படையின் தலைமையகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி கொலையுண்ட அவ்விருவரினதும் விபரங்களைக் கோரினார் சுமித்.

கோரிக்கையினையடுத்துத், தாமதமின்றி அவர்களின் சேவைக்கால விபரங்கள் சுமித்துக்கு அனுப்பி வைக்கப் பட்டன. அத்துடன் கூடவே கன்சாஸ் மாநிலத்தின் யோர்க்ஷையர் நகரத்தைச் சேர்ந்தவரும், அமெரிக்க விமானப் படையில் கொலையுண்டவர்களுடன் சேவை புரிந்துவிட்டு மிக அண்மையில் இளைப்பாறியவருமான பிளைற் லெப்ரினென்ற் ஸ்ரீபன் றோச் என்பவரின் விபரமும் அனுப்பப்பட்டிருந்தது.

இதேவேளையில் கன்சாஸ் மாநில காவல்துறைப் பொறுப்பதிகாரியாகப் பதவி வகிக்கும் ஜோண் வெயின் கூட முன்னர் அமெரிக்க விமானப் படையில் கிட்டத்தட்ட ஐந்தாண்டுகள் சேவையாற்றியவர் என்பதையும் சுமித் அறிந்தே வைத்திருந்தார். ஆயினும் அவரிடமே விமானப் படையில் சேவையாற்றியவர்கள் குறித்து விசாரிப்பது எதிர்காலத்தில் விசாரணைகளுக்கு ஊறு விளைவிக்கும் அல்லது திசை திருப்பும் என்பதனால் சுமித் அவருடன் அதிகம் தொடர்பு கொள்வதைத் தவிர்த்து வந்தார்.

எனவே, விமானப் படையில் சேவையாற்றி ஓய்வு பெற்றவரான அந்நகரில் வசிக்கும் ஸ்ரீபன் றோச்சைச் சந்திப்பதன் மூலமாக ஏதேனும் தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என்ற நோக்கில் அவரைச் சந்திக்க முடிவு செய்து வீட்டிற்குச் சென்றார் சுமித்.

யோர்க்ஷையர் நகரக் குடியிருப்புகளை விட்டு விலகிச் சற்றுத் தனிமையான ஓர் சூழலில் நாற்புறமும் கோதுமை வயல்களினால் சூழப்பட்டிருந்தது அவரின் வசிப்பிடம். வீடு சிறியதாகவும் அமைதியான சுற்றாடலைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.

தன்னை இன்னாரென அறிமுகம் செய்துகொண்ட சுமித் ஸ்ரீபனுடன் உரையாடினார். 60 வயதான ஸ்ரீபன் சிநேக மனப்பான்மையும், எதையும் வெளிப் படையாகவே கதைத்து விடும் சுபாவம் உடையவராகவும் தென்பட்டார். அவருடன் உரையாடிய அந்தச் சொற்ப நேரத்திற்குள் அவர் சேவையில் இருந்து இளைப்பாற முன்னரே அவரது மனைவி இறந்து விட்டார் என்பதையும் அவரது இரண்டு மகள்மார் திருமணம் செய்து அவர்களின் கணவர், பிள்ளைகளுடன் வேறு இடங்களில் வசித்து வருகின்றனர் என்பதையும், அப்பண்ணை வீட்டில் ஸ்ரீபன் மட்டுமே தனிமையில் வாழ்ந்து வருகின்றார் என்பதையும் அறிந்து கொண்டுவிட்டார் சுமித்.

கலந்துரையாடியபோது சுமித், கொலையுண்ட முன்னாள் விமானப்படை வீரர்கள் பற்றி ஸ்ரீபனிடம் கேட்ட வேளையில், "அவர் இருவரும் எனது நல்ல நண்பர்கள். நாங்கள் மூவரும் நீண்ட காலமாக ஒருமிக்கப் பணியாற்றியவர்கள். அவர்கள் கொல்லப்பட்டமை என்னை வெகுவாகப் பாதித்துவிட்டது என்ன செய்வது? எல்லாம் இறைவன் செயல்" எனப் பதிலளித்தார். மேலும், அவர் தொடர்ந்து "இப்பொழுது கன்சாஸ் மாநில காவல்துறைப் பொறுப்பதிகாரியாக இருக்கும் ஜோண் வெயினும் கூட எங்களுடன் விமானப் படையில் பணி புரிந்தவர் தான். ஆனால், அவர் ஐந்து வருடங்கள் மட்டுமே சேவையாற்றிவிட்டுப் பின்பு விலகிவிட்டார்" எனவும் கூறினார்.

மீண்டும் வந்து சந்திப்பதாகக் கூறி விடைபெற்று வெளியே புறப்பட ஆயத்தமான நிலையில் சுமித் சற்றும் எதிர்பாராத விதத்தில் ஸ்ரீபனிடம் "காவல்துறைப் பொறுப்பதிகாரி ஜோண் வெயின் குறித்து உங்களது அபிப்பிராயம் என்ன?" என்ற கேள்வியைத் தூக்கிப் போட்டார். என்னவோ தெரியவில்லை அத்தருணத்தில் அவ்வாறானதோர் கேள்வியைக் கேட்பதற்கு சுமித் எண்ணியிருக்கவேயில்லை. ஆயினும் எதிர்பாராமல் அவ்விதமான கேள்வி அச்சமயத்தில் அவர் வாயிலிருந்து வந்துவிட்டது.

வெளிப்படையான உள்ளம் கொண்டவரான ஸ்ரீபன் சிறிதும் தயங்காது 'ஜோண் வெயின் பற்றி என்ன கூறுவது? அவர் எங்களுடன் பணியாற்றிய நாட்களில் எங்கள் மூவருடனும் தான் கதைப்பதில்லையே. அவர் மிகவும் சங்கோஜ சுபாவம் கொண்டவர்" எனப் பதிலளித்தார்.

இதனைக் கேட்டதும், கிட்டத்தட்ட ஐந்தாண்டுகள் ஒரே பிரிவில் பணியாற்றிய ஜோண் வெயின் அவர்கள் மூவருடனும் கதையாதுவிட்டது ஏன்? என்ற கேள்வி சுமித்தின் மூளையைப் போட்டுக் குடைந்தது. அது குறித்து ஸ்ரீபனிடம் கேட்டறிந்துவிட வேண்டுமென்ற ஆர்வம் மேலோங்கியது.

எனவே "ஜோண், ஏன் மூவருடனும் மட்டும் கதையாது விட்டார்?" என்ற அடுத்த கேள்வியை ஸ்ரீபனிடம் சுமித் கேட்டார். இக்கேள்விக்கு ஸ்ரீபன் சற்று நிதானமாகவே பதிலளித்தார். "அது ஓர் கவலைக்குரிய விடயமாகும். ஜோண் விமானப் படையில் இணைந்த போது அவரின் வயது 19. அவருக்கான 6 மாதப் பயிற்சி முடிவுற்றதும் ஓர் வரவேற்பு வைபவம் நடைபெற்றது. அச்சமயத்தில் சீனியர்களாக இருந்த நாங்கள் பகிடிவதையில் ஈடுபட்டோம். சீனியர்களான நாங்கள் மூவருமாக ஜோணின் ஆடைகளைக் களைந்து அவரை நிர்வாணமாக்கிவிட்டோம். பலர் முன்னிலையில், அது அவனுக்கும் பெரும் அவமானத்தை ஏற்படுத்தி விட்டது. அன்று தொடக்கம் அவர் சேவையில் இருந்து விலகும் வரையிலும் எம்முடன் கதைப்பதுமில்லை, எங்களை ஏறிட்டுப் பார்ப்பதுமில்லை" என்றார் ஸ்ரீபன்.

உண்மைகள் சற்றுப் புலப்படுவதாக சுமித்தின் அடிமனம் சொல்லியது. அவரின் சந்தேகங்கள் ஜோண் வெயின் மீது மையம் கொள்ளத் தொடங்கிற்று.

ஆயினும் ஜோண் ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக இருப்பதால் அவர்மீது நிரூணமான ஆதாரங்கள் எதுவுமின்றிக் குற்றஞ் சுமத்துவதோ அல்லது கைது செய்வதோ இலகுவான காரியமல்லவெனவும், அது பெரிதும் பாரிய பின்விளைவுகளையும் ஏற்படுத்தவும் கூடும் என்பதையும் சுமித் நன்கறிந்திருந்தார். எனவே, முதலில் ஜோணை முற்றிலுமாகக் கண்காணிக்க முடிவு செய்தார்.

இளவயதில் பலர் முன்னிலையில் பகிடிவதையின் காரணமாக நிர்வாணப்படுத்தப்பட்டு அவமானத்துக்குள்ளாக்கப்பட்டமையானது அவரின் மனதில் ஆழமான தாக்கத்தினையும், அத்தாக்கத்தின் விளைவாகப் பழி வாங்கும் ஓர் வைராக்கியமும் உருவாகியிருக்கக் கூடும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார் சுமித்.

எனவே, அம்மூவரில் இருவர் ஏற்கனவே கொலை செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டுவிட்டனர். எஞ்சியிருப்பது ஸ்ரீபன் றோச் மட்டுமே ஆகையால் ஜோணின் மூன்றாவதும் இறுதியானதுமான இலக்காக ஸ்ரீபனே நிச்சயம் குறிவைக்கப்படுவார் என்பதையும் ஊகித்தார் சுமித்.

எது விதத்திலும் ஸ்ரீபனைக் காப்பாற்றிவிட வேண்டும். அதே நேரத்தில் உண்மைக் கொலையாளியையும் ஆதாரத்துடன் கைது செய்துவிட வேண்டும் என முடிவு செய்த சுமித் அவரது உதவியாளர்கள் இருவரை ஸ்ரீபனின் வீட்டுச் சுற்றாடலில் 24 மணி நேரமும் இடைவிடாது கண்காணிப்பில் ஈடுபடும்படி பணித்தார் அவர்களும் ஜோணின் நடமாட்டங்களை அவரறியாது கண்காணிக்கத் தொடங்கினர்.

சுமித்தின் ஊகம் தப்பவில்லை. ஒருநாள் மாலை 7 மணியளவில் ஸ்ரீபனின் வீட்டுச் சுற்றாடலில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த உதவியாளர்கள், ஸ்ரீபனின் வீட்டிற்கு ஜோண் காரில் வந்திருப்பதாகக் கைத்தொலைபேசி மூலம் சுமித்துக்குத் தகவல் கொடுத்தனர்.

ஜோணைத் தொடர்ந்து பின் சென்று கண்காணிக்கும் படியும், தேவையேற்படின் அவரின் உயிருக்குத் தீங்கெதுவும் ஏற்படாத வகையில் கைது செய்யுமாறும் அவர்களுக்குப் பணிப்புரை வழங்கி விட்டு சுமித்தும் தாமதமின்றி அவரின் காரில் ஸ்ரீபனின் வீட்டிற்கு விரைந்தார்.

நடப்பது எதனையும் அறியாத ஜோண் ஸ்ரீபனின் வீட்டிற்குள் சப்தமின்றி நுழைந்தார். வீட்டின் சமையலறையில் இரவு உணவு தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த ஸ்ரீபனைப் பின்புறமாக அணுகினார். பின்புறமாக நின்றபடி ஸ்ரீபனை இறுகப்பிடித்த ஜோண் கையில் வைத்திருந்த பிளாஸ்ரிக் வயரினால் அவரின் கழுத்தை இறுக்கி நெரிக்கத் தொடங்கினார். ஸ்ரீபனால் அபயக் குரல் எதுவும் எழுப்ப முடியாமலும், மூச்சுவிட முடியாமலும் திக்கு முக்காடினார்.

ஜோணைப் பின்தொடர்ந்து சென்ற ஸ்கொட்லாந்து அதிகாரிகள் இருவருமாகத் தமது பிஸ்டல்களை ஜோணின் முதுகில் வைத்து அழுத்தியதும் யோண் தான் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்தார். கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்ட ஜோண் நீதிமன்றின் முன்நிறுத்தப்பட்டார். அவர் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டார். நீதிமன்றம் இரு குடும்பங்களையும் சேர்ந்த 7 பேர்களைக் கொலை செய்தமைக்காகவும், ஸ்ரீபனைக் கொலை செய்ய முயன்றமைக்காகவும் அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.




# நைல் நதி நாகரிகம்

ஹாப்பியை உங்களுக்குத் தெரியுமா? இவர் தான் நைல் நதியின் கடவுளாகக் கருதப்படுபவர். ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் பெருகும் போது மக்கள் ஒன்று கூடி 'ஹப்பி' கடவுளுக்குத் தங்கள் நாட்டின் வளத்தை அதிகரித்த தற்கு நன்றி கூறி மகிழ்வர்.

உலகிலேயே மிகவும் நீளமான நதி என்ற பெருமைக்குரிய நைல் நதியின் நீளம் 6670 கி.மீட்டராகும். நைல் என்ற பெயர் 'நிலியோஸ்' என்ற கிரேக்க சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது.

இந்தச் சொல்லுக்கு நதிப் பள்ளத்தாக்கு என்று பொருளாகும். இந்த நைல் நதியின் பயணம் ஆப்பிரிக்காவின் பிரமாண்டமான விக்டோரியா ஏரியில் இருந்து தொடங்குகிறது.

எத்தியோப்பிய மலையில் இயற்கை யிலேயே பாயும் ஏராளமான ஓடைகள் உள்ளன. இந்த ஓடையின் நீர் அனைத்தும் அடிவாரத்தில் இருக்கும் விக்டோரியா ஏரியில் வந்து கலக்கின்றன. இதன் காரணமாக ஏரி நிரம்பி அதன் வடக்கு விளிம்பில் ரிப்பன் நீர் வீழ்ச்சி என்னும் ஒரு குறுகிய அருவியில் வீழ்ந்து நதியாகப் பாய்கிறது. இதுவே நைல் நதி என்ற பெயருடன் தனது நெடுந்தூரப் பயணத்தைத் தொடங்குகிறது. எகிப்து, எத்தியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளில் பாய்ந்து இறுதியில் மத்தியதரைக் கடலில் கலக்கிறது.

நைல் நதி உருவானவுடன் ஏராளமான மீன்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவை நதியையும், நதிக் கரையையும் தங்களின் வசிப்பிடங்களாகக் கொண்டன.

அப்போது அந்தப் பகுதியில் இருந்த எகிப்தியர்கள், ஈட்டி களையும், வலைகளையும் கொண்டு நதியில் மீன் பிடித்து உணவாகக் கொண்டனர். கரையோரம் வாழ்ந்த பறவைகளை யும், விலங்குகளையும் வேட்டையாடினர்.

விலங்குகளையும், மீன்களையும், பறவைகளையும் அள்ளித் தந்த நைல் நதிக் கரையோரத்திலேயே தங்களது வாழ்க்கையைத் தொடர்ந்தனர்.




எத்தியோப்பிய மலைகளில் படர்ந் திருக்கும் பனி உருகுவதாலும், கோடை காலங்களில் மலைகளில் கடும் மழை பெய்வதாலும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம் வரை நைல் நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது வழக்கம்.

வெள்ளமானது நதியின் கரைகளை மீறி வெளிப்பாய்ந்து எகிப்தின் பாலை வனப் பகுதியை ஈரமாக்கும். வெள்ளப் பெருக்கு வடிந்தபின் நீர்பரவிய இடங் களில் கறுப்பு நிறத்தில் வண்டல் மண் படியும். இந்த மண் பயிர் செய்வதற்கு மிகவும் உகந்தது.


இந்த வண்டல் மண்ணில் எகிப்தியர் கள் பாபிரஸ் என்ற நாணல் செடிகளை வளர்த்தனர். இதிலிருந்து காகிதம் மற்றும் வாசனைத் திரவியங்களைச் செய்தனர்.

விளைந்த பொருட்களை ஓரிடத்தி லிருந்து மற்றோர் இடத்திற்கு மிக எளிதாக எடுத்துச் செல்லத்தக்கதொரு போக்குவரத்து சாதனமாகவும் நைல் நதி எகிப்தியர் களுக்கு உபயோகமாக இருந்தது.

இப்படித்தான் உலகின் பழமையான எகிப்திய நாகரிகமானது நைல் நதிக் கரை யோரத்தில் உதித்தது. நைல் நதியின் குறுக்கில் கி.பி.இ 1960ல் 'இஸ்வான்' அணைக்கட்டு கட்டப்பட்ட பிறகு அதில் பருவ காலங்களில் பெருகி வரும் வெள்ள நீர் வீணாக்காமல் தடுக்கப்பட்டது.




# கும்பகர்ணன்



# செய்யவேண்டியதை உடனே செய்யுங்கள்!

வெற்றிக்கான இந்த வழி முறையை நீங்கள் கையாளவில்லை என்றால் வாழ்நாள் முழுவதும் நீங்கள் தயக்கம், விரக்தி, ஏமாற்றம், தோல்வி இவற்றில் கிடந்து உழல வேண்டியது தான்.

வெற்றிக்கான வழிகளில் இந்த ஒரு வழிமுறையை நீங்கள் பின் பற்றினால், அந்த வழிமுறை நிச்சயமாக உங்களைச் செயலில் ஊக்கப்படுத்தும்

இந்த ஒரு வழியானது வெற்றிக் கான நிரூபிக்கப்பட்ட எல்லா வழிமுறைகளையும் கடைப்பிடிக்க- செயல்படுத்தத் - தேவையான சக்தியையும் வல்லமைகளையும் உங்களிடத்தில் உருவாக்கும்.

இது ஒரு பரிசோதனை. வெற்றியா தோல்வியா என்று ஒரு கைபார்த்துவிடும் பரிசோதனை. வாழ்க்கையில் தொழிலில் நீங்கள் விரும்புகின்ற வெற்றிகளை உங்களால் அடைய முடிகிறதா இல்லையா என்று ஒரு கைபார்த்துவிடும் பரிசோதனை.



இது பற்றி முதலில் கூறியவர் இங்கிலாந்தின் மாபெரும் விஞ்ஞானியான தோமஸ் ஹக்ஸ்லி என்பவர். அவர் கூறுகிறார்;

“நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் எந்த நேரத்தில் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமோ அந்த நேரத்தில், நீங்கள் செய்ய வேண்டிய அந்தக் காரியத்தை, செயலை, வேலையை நீங்கள் செய்து விட வேண்டும். இதற்கான தகுதியைத் திறமையை நீங்கள் பெற்று விட வேண்டும். நீங்கள் உங்களிடத்திலே வளர்த்துக் கொள்ள வேண்டிய மிகவும் மதிப் புமிக்க ஒழுக்கம்- குணம் அது தான்.”

வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளில் மிகவும் மதிப்பு மிக்க செயல்முறை அதுதான். நீங்கள் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்வது என்கிற ஒன்றின் மூலம் எல்லாவிதப் பிரச்சினைகளையும் அகற்றி விடலாம். இதில் என்ன சிரமம்?

மிகுதியுள்ள வாழ்க்கைக் காலத்தில் நீங்கள் செய்ய வேண்டிய காரியத்தை எல்லாம் செய்து விட்டால் வெற்றி உறுதி செய்யப்பட்டு விடும்.

செய்ய வேண்டிய காரியங்களை, பணிகளை செய்ய வேண்டிய நேரத்தில் செய்து விட்டால் உங்கள் வெற்றியின் மகிமை அதிகப்படுகிறது. பெருகிவிடுகிறது. நேரம் வரும் போது பார்த்துக் கொள்ளலாம்- அதற்கேன் அவசரம் என்று இல்லாமல்- வசதிப்படும் போது செய்து கொள் ளலாம் என்று இல்லாமல்- எந்தக் காரியத்தையும் அது செய்யப்பட வேண்டிய உரிய நேரத்தில் செய்து விட வேண்டும்.

அந்தக் காரியத்தை நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது ஒரு பொருட்டல்ல.

நீங்கள் செய்து தீர வேண்டிய எல்லா வேலைகளும்உங்களுடையவிருப்பத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்று கூறமுடியாது. சில நேரங்களில் நீங்கள் விரும்பாத காரியத்தைக்கூட செய்து தீர வேண்டிய நிலைமை உங்களுக்கு ஏற்படலாம்.

ஆக, ஒரு காரியம் உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமா வேண்டாமா என்பது தான் பிரச்சினை. ஒரு காரியத்தை செய்தே ஆக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதைச் செய்துவிட வேண்டும். இதில் தான் உங்களுக்கான பரிசோதனை அடங்கி இருக்கிறது.

அது தான் விதி.

அந்த விதியிலிருந்து நழுவிவிடக்கூடாது.

அந்த விதியை அலட்சியம் செய்யக்கூடாது.

அந்த விதி நமது விருப்பத்திற்கு உட்பட்டதல்ல.

அது கட்டளை! அது உத்தரவு.

இதை நீங்கள் நன்றாக மனதில் இருத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக பெரும் ஆங்கில விஞ்ஞானி தோமஸ் ஹக்ஸ்லி சொன்னதை இங்கு மீண்டும் வலியுறுத்துகிறேன்.

“நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்,

எந்த நேரத்தில் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமோ அந்த நேரத்தில்-

நீங்கள் செய்ய வேண்டிய அந்தக் காரியத்தை செயலை, வேலையை செய்து விட வேண்டும்.

இதற்கான தகுதியை திறமையைப் பெற்றுவிட வேண்டும். நீங்கள் உங்க ளிடத்திலே வளர்த்துக் கொள்ள வேண்டிய மிகவும் மதிப்பு மிக்க -குணம்-ஒழுக்கம் அது தான்”

இந்த உறுதியை- இந்தக்கணம் முதற்கொண்டு உங்களுடைய வாழ்க் கைக் காலம் முழுவதிலும் வெற்றிகள் அடுக்கடுக்காகத் தொடர்ந்து உங்களை நாடி அடைந்து கொண்டே இருக்கும்.

இந்தக் கொள்கையை உங்களுடைய வாழ்க்கையின் வழியாக நீங்கள் ஆக்கிக் கொண்டால்-காரியங் களைச் செய்வதே உங்கள் வாழ்க்கையின் வழக்கம் என்று நீங்கள் ஆக்கிக் கொண்டால்-உங்களிடம் தோல்வி மனப்பான்மை தலைகாட்டாது. இதைச் செய்வதா வேண்டாமா என்ற ஊசலாட் டத்துக்கு இடம் இருக்காது. நீங்கள் செய்து முடிக்க வேண்டிய எல்லா வேலைகளையும் செய்து விடுவீர்கள்.

நாம் உண்மையில் இந்த வேலையைச் செய்து தீரத்தான் வேண்டுமா என்று நீங்கள் உள் மனதில் கூட விவாதம் நடத்தமாட்டீர்கள். ஒரு வேலையைச் செய்வது அவசியம் என்றால் அதைச் செய்வதில் தயக்கம்-சலனம் -தள்ளாட்டம் போன்றவற்றுக்கு இடம் தராமல் செய்து விடுவீர்கள். முடிவுக்கு வர முடியாமல் இருந்ததில் செலவழிந்த நேரம் காலம் எல்லாம் இப்போது, செயலைச் செய் வதற்குப் பயன்படும். அந்த அளவு செயலில் விசுவாசம் இருக்கும். “இது செய்து முடிக்க வேண்டிய வேலையா? செய்து விடுவோம்” கேள்விகளுக்கு - தயக்கத்திற்கு இடமில்லை. காரியத்தை செய்து முடித்து விடுவது. இதுவே இப்போது உங்களுடைய புதிய வாழ்க் கைப் பாதை. வாழ்க்கை வழி. அது மட்டுமல்ல. செய்ய வேண்டிய வேலையை அதற்குரிய நேரத்தில் செய்து முடிப்பது. ஆகா! இதனால் எவ்வளவு நேரம் மிச்சமாகிறது பார்த்தீர்களா?

இந்தக் காரியத்தைச் செய்வதற்கு எது நல்ல நேரம், எது சிறந்த நேரம் என்றெல்லாம் சிந்தித்து முடிவிற்கு வர முடியாமல் ஏமாற்றம் அடையும் நிலை இனி இல்லை. “அந்த வேலையைச் செய்து முடிக்க வேண்டிய அந்தக் குறிப்பிட்ட நேரம் தான் நல்ல நேரம். சிறந்த நேரம்.” இந்த முடிவுக்கு நீங்கள் வந்து விட்டீர்கள். அது மட்டுமல்ல, நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் குறிப்பிட்ட அந்த வேலையைச் செய்து விடுகிறீர்கள்.

நீங்கள் ஒரு வேலையைச் செய்ய வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்படாமல், பிறகு அந்த வேலை உங்களுக்கு பிடித்தமானதா அல்லவா என்ற கேள்விக்கே இடம் இல்லை. நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்து விட வேண்டும். அவ்வளவு தான்.

புதியவழி-எளிமையாக்கப்பட்ட வழி-நீடித்த ஆழமான பயன்கொடுக்கும் வாழ்க்கை வழி- இங்கே உங்களுக்குக் கிட்டியுள்ளது.

1.நீங்கள் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்து விடுங்கள்.

2.எப்போது செய்ய வேண்டுமோ அப்போதே செய்து விடுங்கள்.

3.அந்த வேலை உங்களுக்குப் பிடித்தமானதாக இருந்தாலும் இல்லா விட்டாலும் அது பற்றிக் கவலை இல்லை. செய்து விடுங்கள்.

வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிகளில் இந்த ஒரு நடைமுறையானது மிகவும் மதிப்பு மிக்கது. எப்போதும் தெரிந்து கொள்ள வேண்டியது. அதிகமான வருவாய்க்கு நீங்கள் தகுதியுடையவராகுங்கள். அதிகமாக சம்பாதிப்பதற்கு அது தான் ஒரே ஒரு வழி. அதிகமாகப் பயன் உள்ளவராக ஆவது தான். ஹொரேஸ்மான் என்பவர் சொன்னார், “மனித வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் என்பது பயன் தரும் வகையில் வாழ்வதுதான்.”

பயன்படுவது- பயனுள்ள முறையில் வாழ்வது இவற்றுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. பயன் தரும் முறையில் வாழ்வது தான் உங்கள் வாழ்க்கையினுடைய வெற்றியின் அளவு கோல். நீங்கள் எந்த அளவு பயனுள்ள முறையில் வாழ்கிறீர்களோ, அதே அளவில் தான், உங்கள் வாழ்க்கையினுடைய வெற்றியும் அமைந்திருக்கும்.

நீங்கள் யாருக்கும் எந்த ஒரு வகையிலும் பயன்படவில்லையென்றால், உங்களால் யாருக்கும் எந்தவித பிரயோசனமும் இல்லை என்றால் உங்களது வாழ்க்கை முழுவதும் வீண்தான்; முழுவதும் நஷ்டம் தான்.

சின்ன விஷயங்களில் மட்டுமே நீங்கள் பயன்படுபவராக இருந்தால் உங்களுக்குக் கிடைக்கிற வெற்றியின் அளவும் மிகவும் சிறியதாகத் தான் இருக்கும். நீங்கள் தகுதியற்றவராக இருந்தால் - நீங்கள் அதிக அளவு சேவை செய்யாமல் இருந்தால் உங்களுக்குக் கிடைப்பதும் மிகவும் குறைவாகத்தான் இருக்கும். அந்த நிலையில் நீங்கள் மிகவும் குறைவாகத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கும். அந்த நிலையில் யாரையும் நீங்கள் குறைசொல்ல முடியாது. உங்களது மாத ஊதியத்துக்கான ‘செக்’கை நீங்கள் எழுதுவீர்களானால் அதில் காணப்படும் தொகையை நீங்கள் எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்துத் தான் இருக்கும். அதைத் தான் இந்தப் புத்தகம் கற்றுக்கொடுக்கிறது. எனவே, வெற்றிக்கான வழிகள் இதில் இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் கைகளில் தான் இருக்கிறது.



# ஷாரூக்கானின் தோழியான பிரியாமணி

'பருத்தி வீரன்' படத்தில் கிராமத்து முத்தழகியாக நடித்து, தேசிய விருது பெற்றவர் ப்ரியாமணி. அதன் பின், அவரது உடல் அழகை குறிவைத்தே பட வாய்ப்பு வந்ததால், தெலுங்கில் முன்னணி கிளாமர் நடிகைகளில், தானும் ஒருவராகிவிட்டார். தன்னை எந்த நடிகைகளும் போட்டி மனப்பான்மையுடன் பார்க்கக்கூடாது என்பதற்காக, தமன்னா, த்ரிஷா, காஜல் அகர்வால் போன்ற நடிகைகள் சிறப்பாக நடித்திருந்ததால், அவர்களை மனதாரப் பாராட்டி, யாரும் தன்னை போட்டியாக கருதாத சூழ்நிலையை உருவாக்கி வைத்துள்ளார். இதனால் தெலுங்கில், தற்போது முன்னணி நடிகையாக திகழ்கிறார், ப்ரியாமணி. பாலிவுட்டிலும் கால்பதிக்க நேரம் பார்த்து வந்தவர், ஷாரூக் கான் நடிக்கும் சென்னை - 'எக்ஸ்பிரஸ்' படத்தில், ஒரு பாட்டுக்கு நடனமாடி உள்ளார். ஏற்கனவே, ஷாரூக்கானின் தீவிர ரசிகையான ப்ரியாமணி, இந்த படத்திற்கு பின் அவரது தோழியாகவும், நெருங்கி விட்டாராம்.





## அஜித்துக்கு அறுவை சிகிச்சை!

அஜித் தற்போது விஷ்ணுவர்த்தன் இயக்கும் 'வலை' படத்தில் நடித்து வருகிறார். இதில் ஆர்யா, நயன்தாரா, டாப்ஸி, சுமா ரங்கநாத், கிஷோர், அதுல்குல்கர்னி, மகேஷ் மஞ்ரேக்கர் என ஒரு நட்சத்திர பட்டாளமே நடித்து வருகிறது. இந்தப் படத்தில் சண்டைக் காட்சியில் நடித்தபோது அஜீத்துக்கு கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டு 15 நாள் ஓய்வுக்கு பிறகு மீண்டும் நடிக்கத் தொடங்கினார். எலும்பு முறிவு குணமாகிவிட்டாலும் அந்த விபத்தில் ஏற்பட்ட தசைச் சிதைவு குணமாகவில்லை. அதிக நேரம் நின்று கொண்டிருந்தாலோ, வேகமாக நடந்தாலோ கடுமையான வலி ஏற்படும். காலில் வீக்கம் ஏற்பட்டு விடும். அறுவை சிகிச்சை ஒன்றுதான் இதற்கு நிரந்தரத் தீர்வு என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். அறுவை சிகிச்சை செய்து கொண்டால் இரண்டு மாதங்கள் வரை ஓய்வெடுக்க வேண்டி வரும். இதனால் படப் பணிகள் அப்படியே நின்று போகும் என்பதுதான் அஜித்தின் கவலை.


தற்போது அஜித் நடித்து வரும் இரண்டு படங்களும் முடிந்த பிறகு அக்டோபர் மாதம் அறுவைசிகிச்சை செய்து கொள்ள அவர் சம்மதம் தெரிவித்துள்ளார். அக்டோபர் மாதம் 21ந் தேதி அஜித்தின் அறுவை சிகிச்சைக்கு மருத்துவர்கள் நாள் குறித்து விட்டனர்.



## விசாலுக்கு ஜோடியாக ஐஸ்வர்யா அர்ஜுன்

நடிகர் அர்ஜுன், தன் மகள் ஐஸ்வர்யாவையும், நடிப்பு கோதாவில் இறக்கி விட்டுள்ளது, ஏற்கனவே தெரிந்த விஷயம் தான். பட்டத்து யானை என்ற படத்தில், விஷாலுக்கு ஜோடியாக நடிக்கிறார், ஐஸ்வர்யா. காரைக்குடியிலிருந்து திருச்சிக்கு வரும் விஷாலும், அவரது நண்பரும், ஐஸ்வர்யாவுடன் சேர்ந்து, ஓட்டல் நடத்துவது தான், படத்தின் கதையாம். இந்தப் படத்தில், ஐஸ்வர்யாவுக்கு சீரியசான வேடமெல்லாம் இல்லையாம். சிரிப்பு வேடம் தானாம். இதனால், படப் பிடிப்பின்போது, கொமெடிக் காட்சிகளில் வெளுத்துக் கட்டும் ஐஸ்வர்யா, மற்றவர்கள் நடிக்கும் காட்சிகளையும், படப்பிடிப்பு நடக்கும் இடத்தின், ஒரு மூலையில் அமர்ந்து, ஆர்வமாக கவனிக்கிறாராம். அடுத்தவர்கள் நடிக்கும்போது, பார்த்தால் பல வியங்களை புரிந்து கொள்ள முடியும். அதை வைத்து, நம் நடிப்பு திறமையையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்கிறாராம், ஐஸ்வர்யா

மொத்தப் படமும் 1986-ல் ஆ
தவலேஸ்வரம் என்ற பகுதியில், ஒரு
நிகழ்ந்த வெள்ளப்பெருக்கின் பின்புலத்த
சம்பவங்களை அடிப்படையாகக்
கப்பட்டுள்ளது. இளையராஜாவின்
பெரும்பலம்! தமிழகத்தில் இருந்து
முன் ஆந்திராவுக்கு குடிபெயர்ந்து அ
ஆற்றின் கரையோரம் உள்ள மீனவ கி
வாழும் ஆதிக்கும், காஞ்சிபுரத்தை சேர்ந்
பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்
மழை நாளில் ஆந்திரா - பங்காரப்
ஆதியின் குடிசை வீட்டு முன் திருமண
திருமணம் முடிந்த அடுத்த நொ
பெண் டாப்ஸி காரில் வந்து இறா
ஒரு பெரிய தங்க மோதிரத்தை மாட்
காதில் ஏதோ கிசுகிசுத்து செல்கிறார். அ
இருந்து வரும் லட்சுமி மஞ்சுவின்
ஒரு தங்கசங்கலியை லட்சுமிக்கு ப




அதை ஆதியின் கையால்
லட்சுமி மஞ்சுவின் காதில் வில்ல
ஓதிவிட்டுப் போகிறார். லட்
சந்தேகமாகப் பார்க்க, ஆதி -
கண்கொண்டு துளைக்க, அதிர்
இருவரையும் அம்போ என விட்
மொத்தப் பேரும் வெள்ள அறிவி
பிழைத்தோம்... என ஓடிப் போகின்
மணக்கோலத்தில் வெள்ளத்தி
லட்சுமி மஞ்சுவை காப்பாற்றி கரை
கிறார். கூடவே டாப்ஸியுடனான த
யும் கூறி முடிக்கின்றார். உங்களுக்
என் வாழ்க்கையில் மூன்று - நான்
ஒருவன் தான் இந்த துரைபாபு என்
போடுகிறார் லட்சுமி மஞ்சு. லட்சுமி
ஆதியை அதிர்ச்சிக்குள் மூழ்கடித்
மழை வெள்ளம் அவர்களை மூழ்கடி
இரண்டிலுமே இருவரும் தப்பித்தனரா
மன்னித்தேன்' படத்தின் வித்தியாச
கோதாவரி ஆற்றில் மீன்கள
விற்று, அதில் வரும் பணத்தில் சீட்டா
ஊர் சுற்றுவதும், முதலாளியின்
திருவிழாவில் பார்ப்பதும், டாப்ஸ
ஆதியை காதலிப்பதும், அதனால்
இவரை பழிவாங்குவதும், பழிக்குப்
ஆதி அவரது சம்மதத்துடனேயே
ஆதி வெளுத்து வாங்கியிருக்கிற
மஞ்சு, இருவருமே இரண்டு எபி
போட்டு நடித்து 'மறந்தேன் மன்
தூக்கி நிறுத்தியிருக்கின்றனர். ஆதி
இருக்கும் சுவாரஸ்யம், லட்சுமி மஞ்
சற்றே மிஸ் ஆவது போரடிக்கிறது
மன்னித்தேன்' ஆரம்பத்திலும் இர
இருபது நிமிடங்கள் வரும் அ
காட்சிகளும், கோதாவரி மீனவ கிராமக்
பழனிக்குமாரின் பிரமாண்ட ஒளிப்
பிரமாதமான இசையும், குமார் நாகேந்
ஒருசில குறைகள் இருந்தாலும்
மன்னிக்கவும் செய்கின்றன! மொத்
மன்னித்தேன்' - பார்க்கலாம் மன்

-ல் ஆந்திராவில் உள்ள
ல், ஒரு மழைக்காலத்தில்
ன்புலத்தில் நடந்த உண்மைச்
ாகக் கொண்டு உருவாக்
ாவின் இசை இப்படத்தின்
ருந்து சில தலைமுறைக்கு
ந்து அங்குள்ள கோதாவரி
னவ கிராமத்தில் மீன்பிடித்து
த சேர்ந்த லட்சுமி மஞ்சுவுக்கும்
ுயிக்கப்பட்டு, ஒரு படுபயங்கர
காரப்பேட்டை கிராமத்தில்
திருமணம் நடந்தேறுகிறது.
 நொடி வசதியான வீட்டுப்
இறங்கி, மணமகனுக்கு
த மாட்டி விட்டு, ஆதியின்
ர். அதேமாதிரி காஞ்சிபுரத்தில்
வின் முதலாளி துரைபாபு,
க்கு பரிசாக கொடுத்து



ல் போட சொல்லிவிட்டு
யில்லச் சிரிப்புடன் ஏதோ
லட்சுமி - ஆதியை.
 - லட்சுமியை சந்தேக
அதிர்ச்சியில் உறைந்த
விட்டுவிட்டு ஊர்மக்கள்
ுறிவிப்பால் தப்பித்தோம்,
ாகின்றனர்.
ளத்தில் சிக்கும் ஆதி -
 கரை சேர்க்கப் போராடு
ன தன் காதல் கதையை
களுக்காவது ஒரு காதல்,
நான்கு ஆண்கள், அதில்
ு என்று குண்டைத்தூக்கி
சுமி மஞ்சு கூறிய கதைகள்
கடித்தனவா...? அல்லது
ழ்கடித்தனவா...? அல்லது
தனரா...? என்பது 'மறந்தேன்
தியாசமான மீதிக்கதை!
ன்களைப்பிடித்து அதை
ீட்டாடுவதும், நண்பர்களுடன்
யின் மகள் டாப்ஸியை
ாப்ஸி விழுந்து விழுந்து
னால் டாப்ஸியின் அப்பா
க்குப் பழியாக டாப்ஸியை,
னயே சூறையாடுவதுமாக
க்கிறார். டாப்ஸி, லட்சுமி
எபிசோடுகளிலும் போட்டி
மன்னித்தேன் 'படத்தைத்
ஆதியின் பிளாஷ் பேக்கில்
மஞ்சுவின் ப்ளாஷ் பேக்கில்
கிறது. மற்றபடி, 'மறந்தேன்
 இறுதியிலும் மொத்தமாக
அந்த மழை-வெள்ளக்
ராமக்காட்சிகளும் பிரமாதம்.
ளிப்பதிவும், இசைஞானியின்
ாகேந்திராவின் இயக்கத்தில்
ாலும் அதை மறக்கவும்
மொத்தத்தில்', 'மறந்தேன்
மன்னிக்கலாம்!

## அஞ்சலியின் உதட்டைக் காயப்படுத்திய ஆர்யா!

'ஜெயம் கொண்டான்' திரைப்பட இயக்குனர் கண்ணனின் அடுத்தப் படைப்பாக உருவாகி இருக்கும் திரைப்படம் 'சேட்டை' இதில் ஆர்யா நாயகனாகவும், ஹன்சிகா, அஞ்சலி நாயகிகளாகவும் நடிக்கின்றனர். படத்தில் இரண்டு முத்தக் காட்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. காட்சிப்படி ஆர்யா, ஹன்சிகாவுக்கும், அஞ்சலிக்கும் உதட்டோடு உதடு சேர்த்து முத்தம் கொடுக்க வேண்டும். இந்நிலையில் ஹன்சிகாவுடனான 6 முறை டேக் எடுத்த ஆர்யா, அஞ்சலியுடனான காட்சியில் 15 முறை டேக் எடுத்திருக்கிறார்.

இதனால் சற்று கோபமடைந்த அஞ்சலி, உதடு புண்ணாகிவிட்டது என நேரடியாக இயக்குநரிடம் கூறியுள்ளார். ஒரு வழியாக இக்காட்சியை எடுத்து முடித்ததும் அடுத்த இரண்டு நாட்கள் படப்பிடிப்பிற்கு வராமல் விடுமுறை எடுத்துக்கொண்டாராம் அஞ்சலி.





## வடிவேலுவின் புதிய படம்!

வடிவேலு நடிக்கும் புதிய படத்துக்கு 'கஜ புஜ கஜ தெனாலிராமனும் கிருஷ்ணதேவராயரும்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.


இந்தப் படத்தை கல்பாத்தி அகோரத்தின் ஏஜி எஸ் நிறுவனம் தயாரிக்கிறது. யுவராஜ் இயக்குகிறார். டி.இமான் இசையமைக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு வடிவேலு நாயகனாக இந்தப் படத்தில் நடிக்கிறார். இது முழுநீள கொமெடி படமாக உருவாகிறது. மற்ற விவரங்கள் குறித்த அறிவிப்பினை விரைவில் வெளியிட இருக்கின்றனர்.

வடிவேலுவின் 'கஜ புஜ கஜ தெனாலிராமனும் கிருஷ்ணதேவராயரும்' எனும் திரைப்படம் உள்பட ஒரே நேரத்தில் ஆறு புதிய படங்களை கல்பாத்தி அகோரத்தின் ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்க இருக்கிறது.

## எந்த வேடத்திலும் நடிக்கத்தயார்

நடித்தால் கதாநாயகியாகத்தான் நடிப்பேன் என அடம் பிடிக்கும் நடிகைகளுக்கு மத்தியில், லட்சுமி ராய், சற்று வித்தியாசமானவராக உள்ளார். சமீபத்தில், அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில், "கதாநாயகிப் பாத்திரம் தான் வேண்டும் என, அதற்காக, காத்திருந்து காலத்தை கழிப்பதில், எனக்கு இஷ்டம் இல்லை. எந்தவிதமான ரோலிலும் நடிக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு நடிகை, எந்த வேடத்திலும் நடிக்கத் தயாராக இருக்க வேண்டும். படம், வெற்றி பெறுகிறதா இல்லையா என்பது முக்கியமல்ல. குறிப்பிட்ட காலம் மட்டுமே, ஹீரோயினாக நடிக்க முடியும். இன்னும் சில ஆண்டுகள் கழித்து, நாம் எந்தெந்த படங்களில் நடித்திருக்கிறோம் என்பதை திரும்பிப் பார்த்தால், அதில், நம் மனதுக்கு பிடித்த கேரக்டர்கள் இருக்க வேண்டும். அப்போது தான், ஒரு நடிகைக்கு திருப்தி ஏற்படும்" என, தத்துவார்த்தமாக பேசுகிறார் லட்சுமி ராய்.






## தி ஹோஸ்ட்


ஏற்கனவே வெளியாகிய, பிரபலமான ஒரு நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட அறிவியலும், மர்மமும் கலந்த, திகில் படம் இது. வேற்று கிரகவாசிகள், பூமிக்குள் நுழைந்து, மனிதர்களின் மூளைக்குள் ஊடுருவி, அவர்களை, உளவியல் ரீதியாக செயலிழக்கச் செய்வது தான் படத்தின் மையக் கரு. இந்தப் படத்தில், ஹீரோயினின், மூளைக்குள் ஊடுருவும், வேற்று கிரகவாசிகள், அவரை முடக்க நினைக்கின்றனர். இதிலிருந்து, அவர் மீண்டு வருகிறாரா? வேற்று கிரகவாசிகளின் திட்டம் வெற்றி பெறுகிறதா? என்பதைப் பரபரப்பாக காட்சிப்படுத்தியுள்ளார், இயக்குனர் ஆண்ட்ரு நிக்கோலஸ். சாவோரைஸ் ரோனன், மாக்ஸ் ஐயன்ஸ், ஜாக் அபே ஆகியோர், இந்த படத்தில் நடித்துள்ளனர்.

## திருமணத்துக்கு தயாராகும் சித்தார்த்

"இப்போது திருமணத்துக்கு தயாராகி வருகிறேன். குழந்தை குடும்பம் என்று இருக்க ஆசை வந்துள்ளதால் விரைவில் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. மேலும் என்னைப் பற்றி நிறைய கிசுகிசுக்கள் வந்தன. அதை நான் பெரிதாக நினைப்பதில்லை. சம்மந்தப்பட்டவரை கேட்காமலே அவரைப் பற்றி எழுதிகிறார்கள். ரசிகருக்கு படம் பிடித்திருந்தால் அதனை பத்து பேருக்கு சொல்லலாம். அதேசமயம் அந்தப் படம் பிடிக்கவில்லை என்றால் படம் பார்க்க வேண்டாம் என்று நூறு பேருக்கு சொல்லலாம். அவ்வளவுதான். மற்றபடி நடிகரின் சொந்த வாழ்க்கையை அறிய உண்மையான ரசிகன் ஆர்வம் காட்டமாட்டான்" என்று தெரிவித்துள்ளார்.

'போய்ஸ்' திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமான சித்தார்த் இப்போது 'உதயம் என்.ஹெச் 4', 'தீயா வேலை செய்யணும் குமாரு' ஆகிய இரண்டு படங்களில் நடித்து வருகிறார். அண்மைய தினங்களாகவே சித்தார்த்-சமந்தா பற்றி பல்வேறு கிசுகிசுக்கள் வருகின்றன. இருவரும் ஒருவரையொருவர் காதலித்து வருவதாகவும் விரைவில் திருமணம் செய்ய உள்ளதாகவும் கிசுகிசுக்கள் அடிபடுகின்றன.






# தொழில்திறன்...!?

பெருமைக்காகச் சொல்லவில்லை. பரமசிவம் சும்மா 'பம்பல்' அடிச்சுக் கொண்டு திரிஞ்சாலும் பொது வேலைகளிலும் கொஞ்சம் ஈடுபாடு கண்டீங்களோ. இலவசமாக நடத்தப்படும் ஒரு தொழிற்திறன் பயிற்சிநிலைய ஆட்சிக்குழு 'மெம்பர்' அப்படிச் சொல்லுறதில, அப்படிச் செயற்படுகிறதில ஒரு பெருமை எனக்கு.

பயிற்சிநிலையப் பணிமனையும், ஸ்ரோரும் ஒரே அறையில் இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் இது இரண்டும் ஒரே அறையில் இயங்கின. பயிற்சிக்கு வாற பிள்ளையள், சமையற் கலை கற்று விட்டு, சட்டி, பானைகளைக் கழுவி-மாநாட்டு மேசையில கவிழ்த்து வைத்து விட்டுப் போய்விட்டார்கள். ஆசிரியர் உரிய முறையில் பயிற்சி அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டி விடமுடியாது. அதற்கான வசதிகளை ஆட்சிக்குழு ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும்.



மேசையில சட்டி, பானை கழுவிக் கவிழ்த்து விட்டமை இந்தப் பரமசிவத்தை உசுப்பேற்றி விட்டது.

பெரிய தாள் ஒன்றில்- 'வோல் போஸ்ரர்' என்று சொல்லுங்கோவன்... அதில் ஒரு அறிவித்தல் எழுதி, பணிமனைச் சுவரில் -எங்களது மாநாட்டு மேசைக்கருகில் தொங்கப் போட்டுவிட்டேன்.

"தயவு செய்து சட்டி, பானைகளைக் கழுவி மேசை மீது கவிழ்த்து வைத்து விட வேண்டாம்'' - ஆட்சிக்குழு- என்று அறிவித்தல் போடப்பட்டது.

இரண்டு மூன்று நாளைக்கொருமுறைதான் பணிமனைக்குச் செல்ல நேரம் கிடைக்கும். இந்த அறிவித்தலின் பின் மீண்டும் ஒரு முறை பணிமனை சென்றேன். அங்கு மேசை மீது 'கேக்' அடித்த பாத்திரங்கள், 'ஐசிங்' செய்யப் பயன்படும் பாத்திரங்கள், உபகரணங்கள் இரண்டு மூன்று நாள்களாகக் கழுவப்படாது அப்படியே மேசை மீது விடப்பட்டிருந்தன.

நல்லவேளையாக நான் சென்ற வேளை ஆசிரியர் பயிற்சிமாணவர்கள் வகுப்பில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

கத்திச் சத்தம் போட்டு ஆசிரியரை அழைத்தேன். "இதென்ன? எல்லாம் இப்படியே போட்டது போட்ட படி கிடக்குது'' என்று கேட்டேன். சத்தம் போட்டாத்தான் நான் ஒரு அதிகாரி என்பது அவர்களுக்கு விளங்கும் என்பதால் அப்படிக் காட்டுக்கத்தல் கத்தினேன். ஆசிரியர், அழாக் குறையாக "ஐயோ! சேர் முந்தநாளுக்கு முதல் நாள் கேக் ஐசிங் வகுப்பு முடிய -பிள்ளைக்குச் சுகமில்லை என்று ரெலிபோன் வந்தது... நான் பிள்ளைகளிடம் எல்லாவற்றையும் கழுவி வடிவா ஒதுக்கி விட்டுப் போகச் சொல்லிப் போட்டு அவசர அவசரமாகப் போய்விட்டன் சேர்...'' என்று ஒரு 'புராணமே' பாடினார்.

"கூப்பிடும் பிள்ளையளை.... வீட்டிலையும் இப்படிப் போலத்தான்.., படிக்கிற மேசையில சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்து வைச்சுட்டுப் போய் விடுவினை போல கிடக்கு...'' படபடவெனப் பொரிந்து தள்ளினேன்.

வாசலில் நின்ற பிள்ளைகள் "வீட்டில இப்படி இல்லை சேர்....... அப்பா காலைக் கையை முறிச்சுப் போடுவார்.... அது அதுக்கென வாங்கித் தந்த, ஒதுக்கித் தந்த இடங்களில் அது அதை வைக்காட்டித் தோலை உரிச்சுப் போடுவார்......'' என்றாள் ஒரு வாய்க்காரப் பிள்ளை.

நாங்கள் ஒன்றும் வாங்கிக் கொடுக்காததை-வசதி செய்து கொடுக்காததைச் சுட்டிக் காட்டுகிறாளோ என்று மனதில எண்ணியவாறு,

அந்தப் பெரிய போஸ்டரைக் காட்டி "இது தமிழில தானே எழுதிப்போட்ட நாங்கள்.... தமிழ் எழுத வாசிக்கத் தெரியாதே....? என்ன எழுதிப் போட்டிருக்கு ஒருக்கா வாசியும் பார்ப்பம்'' என்றேன்.

"தயவு செய்து சட்டி பானையைக் கழுவி மேசை மீது கவிழ்த்து வைத்து விட வேண்டாம் என்று போட்டிருக்கு சேர்'' என்றாள் ஒருத்தி. சேர்! சேர்!! அது ஒண்டும் குறைச்சலில்லை நாலுதரம் அழுத்திச் சொல்லுறது 'சேர்'

"ஆ... அப்ப வாசிக்கத் தெரியுது. வாசிச்சுப்போட்டு உப்பிடிச் செய்து கிடக்குது'' என்று மீண்டும் உச்ச ஸ்தாயியில் முழங்கினேன். "என்ன எழுதிக் கிடக்குது எண்டு விளங்கேல்லையோ?'' என்று எகத்தாழமாக வினவினேன்.

"விளங்கிச்சுது சேர் கழுவிக் கவிழ்த்து விட வேண்டாம் என்று எழுதியிருந்தது. அது தான் கழுவாமல் பாத்திரங்களை நிமிர்த்தியவாறே மேசை மீது வைத்தோம்'' என மிகக் 'கூலாகக்' கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தது அந்தப் பிள்ளை.

***




ஒருவர் - 'தேடாதே கிடைக்காது' எண்டு படத்துக்கு பெயர் வைத்திருக்கிறியளே ஏன்?

டைரக்டர் - 'படத்தில் கதையைத் தேட வேண்டாம் எண்டு குறியீடாகச் சொல்லியிருக்கிறம்'

"என் மனைவி எதையும் வித்தியாசமாத்தான் செய்வா''

"அப்படியா?''

"ஓம், அவ அயன் பொக்சிலதான் தோசை சுடுறவா...''

நீதிபதி - "நீர் ஏன் அந்த ரெய்லரை அடிச்சீர்?''

குற்றவாளி - "என்ர மனுசியின்ர பிளவுசில ஜன்னல் வச்சான், கதவு வச்சான், கடைசியில குடியேறியும் விட்டான் ஐயா...''

நோயாளி - "வயிறு எரியுது டொக்ரர்''

டொக்ரர் - "ஏன்?''

நோயாளி - "வயது போன நேர்சை வேலைக்கு வச்சு வெறுப்பேத்துறீங்கள் டொக்ரர்''

புதுப்பெண் கணவனிடம் - "நீங்க சுகாதாரப் பரிசோதகராக இருக்கலாம்ர அதுக்காக முதலிரவில் பாலில் தண்ணீர் கலந்திருக்கா எண்டு சோதிக்கிறது சரியில்லை''



# உருளைக்கிழங்கு மட்டும் சாப்பிட்டு உயிர்வாழும் இளம்பெண்

பொதுவாக உணவுப் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது. ஒருவர் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகள் இன்னொருவருக்குப் பிடிக்காமல் போவதுண்டு. ஆனால் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணுக்கோ அதிசயமான உணவுப் பழக்கம் இருக்கிறது.

அங்குள்ள வெல்லிங்பர்க் நகரில் வசிக்கும் கிளாரி ஜோன்ஸ்(23) என்ற பெண்ணுக்கு அவரது குழந்தைப் பருவத்தில் இருந்தே சாதாரண உணவின் மீது கடும் வெறுப்பு ஏற்பட்டு விட்டதாம்.

இவருடைய முழுப் பசியையும் போக்கும் உணவு எதுவென்றால் உருளைக் கிழங்குகள் தான். உருளைக்கிழங்குடன் பாலாடைக் கட்டியைச் சேர்த்து உணவு தயாரித்து சாப்பிடுகிறார். இத்துடன் முட்டைக்கோசையும் அவ்வப்போது சேர்க்கிறார்.

இதுவரையில் இவர் ஏராளமான கூடைகள் உருளைக்கிழங்கைச் சாப்பிட்டு வந்துள்ளார். இவருக்கு மற்ற உணவைக் கண்டாலே குமட்டல் வந்து விடுகிறதாம்.

இது குறித்து அவர் கூறுகையில், "இது மோசமான பழக்கம் என்பதை உணருகிறேன். அதேநேரத்தில் புதிய உணவை சாப்பிடப் பயமாக இருக்கிறது. இதனால் நோய் வந்து விடுமோ என அஞ்சுகிறேன். பிறந்த நாள் கேக்கைக் கூட சாப்பிட மாட்டேன். என்றாலும் என்னுடைய தாய் விருப்பத்துக்காக ஆண்டு தோறும் கேக் மட்டும் வெட்டிக் கொண்டாடுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# மனித இரத்தம் குடிக்கும் அதிசயப் பெண்

கலிபோர்ணியாவைச் சேர்ந்த பச்சை குத்தும் கலைஞர் மிஷெல் (வயது 29). இவர் வாரத்திற்கு முப்பத்தியாறு லீற்றர் பன்றி இரத்தம் குடிப்பதாக ரிவி நிகழ்ச்சி ஒன்றில் கூறியுள்ளார். பன்றி இரத்தம் மட்டுமின்றி, வாரத்திற்கு ஒரு முறை மனித இரத்தத்தையும் குடிப்பதாகக் கூறும் இவர், இரத்தத்தை உணவோடு கலந்தும் சாப்பிடுகிறார். ஓய்வெடுக்கும்போதும், ஓவியம் வரையும்போதும் இரத்தம் குடிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும் இவர், இதற்காகவே குளிர்சாதனப்பெட்டியில் உறைந்த இரத்தத்தை வைத்திருக்கிறார்.

இதைப்பற்றி மிஷெல் கூறுகையில், சிலருக்கு சிகரெட் பிடிப்பது போல் எனக்கு இரத்



தம் பிடித்திருக்கிறது. மனித இரத்தம் பன்றியின் இரத்தத்தை விடச் சுவையானது. ஆணின் இரத்தம் பெண்ணின் ரத்தத்தைவிடக் கெட்டியாக இருக்கும். முடிந்த வரை வாரத்திற்கு ஒருமுறை நெருங்கிய நண்பர்களின் கையிலிருந்து இரத்தம் குடிப்பேன். இரத்தம் எனக்கு பிடிக்கும் என்பதற்காக நான் காட்டேறி கிடையாது. இளவயதில் மன அழுத்தத்தால் என்னைக் காயப்படுத்திக் கொள்வேன். அப்பொழுது இரத்தத்தை உறிஞ்சும்போது ஏற்பட்ட பழக்கம்தான் இது என்கிறார். இதைப்பற்றி இதுவரை எதுவும் அறியாமல் இருந்த அவருடைய தாயார், மிஷெல் 4,500 லீற்றர் இரத்தம் குடித்திருக்கிறார் என்பதைக் கேட்டு மனம் உடைந்து போனார். பின்பு அவரை மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



# விலை உயர்ந்த படுக்கை

நாம் புத்துணர்ச்சியுடன் இருக்க வேண்டுமானால் இரவில் நன்றாகத் தூங்கி அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். இதற்குத் துணைபுரியும் முக்கிய பொருளில் முதன்மையாக இடம்பெறுவது கட்டில் மெத்தை (படுக்கை) என்றால் அது மிகையாகாது. இந்த வகையில் இங்கிலாந்து நாட்டு நிறுவனம் ஒன்று உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த படுக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த றோயல் படுக்கையானது 17-வது மற்றும் 18-வது நூற்றாண்டுகளில் அரச குடும்பத்தினர் பயன்படுத்திய படுக்கையைப் பிரதிபலிக்கும் விதமாக அமைந்துள்ளது. இதன் விலை எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட 1 லட்சம் டொலர்கள் ஆகும். விலை உயர்ந்த பட்டுத்துணி, மங்கோலியா ஆடுகளின் ரோமம், குதிரை வால் ரோமம் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தயாரித்திருக்கிறார்கள்.

இந்நிறுவனத்தின் உயர் அதிகாரி அலிஸ்டைர் ஹூக்ஸ் கூறுகையில், இந்த றோயல் படுக்கையை உரிமையாக்கிக் கொள்வது அரிய வாய்ப்பு எனவும், மொத்தமே 60 படுக்கை தான் தயாரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# தவளைகளுக்கு நடந்த விநோதத் திருமணம்!

பொதுவாக ஆதிகாலங்களில் மழை இன்றிக் காணப் பாட்டால் பிராமணர்கள் ஒன்று கூடி மிகப்பெரிய யாகம் நடத்துவார்கள். இதன் மூலம் கொஞ்சமாவது மழை பொழிவதுண்டு. இதற்கான சரியான விஞ்ஞான காரணங்களும் உண்டு. ஆனால், இந்தியாவில் மழை வேண்டி இன்னும் பல விசித்திரமான சம்பவங்கள் நடைபெறுவதுண்டு.

அதில் தவளைகள் திருமணம். இரு தவளைகளுக்கு ஊரார் ஒன்று கூடி சம்பிரதாய பூர்வமாகச் சடங்கு வைத்துத் திருமணம் நிகழ்த்தித் தவளைகளை ஒன்றுக்கொன்று முத்தங்களைப் பரிமாற வைத்து, அவற்றை வாழ்த்தி மழைவேண்டி பிரார்த்திப்பார்கள். இது தொடர்பாக இந்தியாவின் தக்காபூர் எனும் கிராமத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை ஒட்டிய புகைப்படங்கமே இது. நீண்ட நாட்கள் மழை இன்றி மிகவும் வரட்சியாக இக்கிராமம் காணப்பட்டபோதே ஊர் மக்கள் ஒன்றுகூடி இத் தவளைகள் திருமணத்தை நிகழ்த்தியுள்ளனர்.



மகளிர் சுடர்



# சோப் பாவிப்பதால் முகம் வறண்டு போகிறதா?

சோப் போட்டுக் குளித்தால் தோல், முகமெல்லாம் வறண்டு போகிறது. இயற்கையான முறையில் குளியல் பவுடர் செய்வது எப்படி என்று சிலர் கேட்கின்றார்கள். இதற்கு அழகுக்கலை நிபுணர்களின் ஆலோசனை இது-

பச்சைப்பயறு 100 கிராம், கடலைப்பருப்பு 50 கிராம், பூலாங் கிழங்கு 100 கிராம், வெட்டிவேர் 20 கிராம், வெள்ளரி விதை 50 கிராம் ஆகியவற்றை அரைத்து, சலித்து, காற்றுப்புகாத டப்பாவில் போட்டு வைக்கவும்.

இதில் பால் கலந்து தேய்த்துக் குளிக்கவும். இந்தப்பவுடரைத் தொடர்ந்து பயன்படுத்தினால் சருமநோய்கள் நெருங்காது. கஸ்தூரி மஞ்சளையும் சேர்த்துக் கொண்டால் தேவையற்ற ரோமவளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம். அரிப்பு, கொப்புளங்கள், முகப்பரு போன்ற பிரச்சினைகளுக்கும் இது ஓர் அருமருந்தாகும்

# மருத்துவத்துக்கு மட்டுமல்ல அழகிற்கும் உதவும் துளசி



பொதுவாக, குளிர்காலத்தில் பருக்கள் வராது. வந்தால் சீக்கிரத்தில் போகாது! அதற்கு சந்தனத்தூள், எலுமிச்சைச் சாறு, துளசிச் சாறு, வெட்டிவேர் பவுடர் தலா ஒரு தேக்கரண்டி எடுத்து கலந்து, பருக்கள் மீது தடவி ஐந்து நிமிடம் கழித்துக் கழுவுங்கள்! ஒரே வாரத்தில் பருக்கள் இருந்த இடம்தெரியாமல் மறைந்து விடும்.

துளசி இலையுடன், பத்து கிராம் வெள்ளரி விதை, சிறிது கஸ்தூரி மஞ்சள் கலந்து அரைத்து, கண்களைச் சுற்றிலும் பூசிக் கழுவுங்கள். தோல் மிருதுவாகி கருமை காணாமல் போய்விடும். 50 கிராம் துளசி இலை, 10 கிராம் மிளகு இவற்றை கால் கிலோ நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வாரம் 2 முறை தலைக்குத் தேய்த்து, சீயக்காய் அல்லது பயத்தமாவு போட்டு அலசுங்கள். கூந்தல் மிருதுவாகும். பொடுகும் வராது. புருவம், கண் இமைகளில் முடி இல்லாதவர்கள், இந்த எண்ணெயை அந்த இடங்களில் தடவினால், கருகருவென முடி வளரும். கரடு முரடான சருமத்தைக் கூட மிருதுவாக்குவதில் சிறந்தது துளசி. பால் பவுடர், துளசிப் பவுடர் இரண்டும் தலா அரை தேக்கரண்டி எடுத்து இதனுடன் சந்தனப் பவுடர், கஸ்தூரி மஞ்சள் தலா கால் தேக்கரண்டி கலந்து கொள்ளுங்கள்.

இந்தப் பவுடருடன் பாலைச் சேர்த்து, முக்கியமாக வெயில் காலத்தில் தயிரைச் சேர்க்கவும் நன்றாகக் குழைத்து இந்தப் பேஸ்ட்டை தினமும் முகம், கை, கால்களில் தேய்த்துக் குளித்து வந்தால் தோல் மிருதுவாகும். சருமத்துக்கு நல்ல நிறத்தையும் கொடுக்கும்.

# உங்களை நீங்கள் ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்



குழந்தையாக இருக்கும் போது தொடங்கி பேரிளம் பெண்ணாக மாறும் வரை பெண்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் அழகுதான். எந்தப் பெண்ணையுமே அழகில்லை என்று கூற யாருக்குமே மனம் வராது. பெண்களின் அழகு என்பது அவருடைய புறத் தோற்றத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல.

மாறாக நம்பிக்கை, தோற்றம் ஆகியவையும் இணைந்ததே பெண்களின் அழகு. அழகு என்பது பார்ப்பவர் கண்களில் உள்ளது என்பது எவ்வளவு உண்மையோ அதே போல் நம் மனதிலும் உள்ளது. நம்மை நாம் அழகானவராக எண்ணுவது தான் அழகாகத் தோன்றுவதின் முதல் படி. அதிக எடை இதற்கு முக்கியமான எதிரியாகும்.

நாம் முதலில் நமது உடலை நேசிக்க கற்றுக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான உணவு, ஓய்வு, தூக்கம், உடல்பயிற்சி இவைகளால் உங்கள் உடல்நலன் கூடும். அத்தோடு உங்கள் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். மேலும், ஆரோக்கியமாக, அழகாக உள்ள உணர்வைப் பெறலாம்.

உடலுக்கு அவ்வப்போது சலுகைகள் அவசியம். மஸாஜ் செய்து கொள்வது, புதிய உடை வாங்குவது, உடலழகைப் பேணுவது போன்ற சலுகைகளில் உங்களுக்கு தன்னம்பிக்கையும், உங்கள் உடலைப் பற்றிய நல்ல உணர்வும் ஏற்படும்.


உங்களுக்கு வாழ்வில் எது தேவை என்று முடிவெடுத்துக் கொள்ளுங்கள். மேற்கத்திய நாடுகளில் பெண்கள் தங்கள் அழகையும், உடலையும் பாதுகாப்பதில் தான் அதிகமான நேரத்தை செலவிடுகின்றனர். கண்ணாடி முன் நின்று 100 முறை உங்கள் மூக்கைப் பார்ப்பதற்குப் பதிலாக வேறு வேலைகளில் கவனத்தை செலுத்தலாம். உங்கள் மூக்கு மட்டுமே நீங்கள் என்ற எண்ணத்தை முதலில் விடவும்.

ஐஸ்வர்யாராய் போல் தோன்ற வேண்டும் என்று எண்ணம் இருந்தால் அதை விட்டுவிடுவது நல்லது. அவர் அவர் தான், நீங்கள் நீங்கள்தான். அவர் அழகுதான். ஆனால், அவர் மட்டுமே அழகு என்று நினைப்பது சரியல்ல.

பட்டினி கிடந்து உடல் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்வது தான் அழகாகத் தோன்ற வழி என்று நினைப்பது தவறு. எது உங்களுக்கு சரி என்று முதலில் தீர்மானிக்கவும். தேவையான உடற் பயிற்சி, சரியான உணவு இவையெல்லாம் தான் அழகை மேம்படுத்தும்.

இதே பிரச்சினை அதிகபட்சமான பெண்களுக்கு உண்டு என்பதைப் புரிந்து கொள்ளவும். இந்தப் பிரச்சினையில் மூழ்காமல் இருப்பது உங்கள் கையில் உள்ளது. எது அழகு, யார் சிறந்தவர் என்று மற்றவர் சொல்வதை நம்பாதீர்கள். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதை மறந்து விடாதீர்கள்.

# வெந்தயக் கஞ்சி



**தேவையானவை:**

புழுங்கலரிசி - 200 கிராம்,
வெந்தயம் - 1 கைப்பிடி,
மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி
தண்ணீர் - 400 மி.லி.,
உப்பு - தேவைக்கேற்ப.

**செய்முறை:**

அரிசியை நன்கு கழுவி வைக்கவும். தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் கழுவிய அரிசியையும், வெந்தயத்தையும் போட்டுக் கொதிக்க விடவும். கஞ்சி போல வெந்ததும், இறக்கி, உப்பு, மிளகுத்தூள் சேர்த்து உண்ணவும். இந்தக் கஞ்சியை வாரம் 3 நாள் எடுத்துக் கொண்டால், தாய்மாருக்கு நன்றாகப் பால் சுரக்கும், உடல் குளிர்ச்சியடையும்.

# குழந்தைக்கு இடுப்பில் ஊசி ஏற்றி..?




P. விமலா,
யாழ்ப்பாணம்.

கேள்வி : எனது குழந்தை பிறந்து ஒரு மாதமாகிறது. சாதாரண பிரசவம் தான். எனினும் 3 வாரம் கண்ணாடி அறையில் வைக்க வேண்டி வந்தது. வலிப்பு வந்ததே காரணம். கிருமி தொற்றியதாயும் வைத்தியர் கூறினார். இடுப்பில் ஊசி குத்தி நீர் எடுத்துப் பரிசோதனையும் செய்து 3 வாரம் ஊசி மருந்து ஏற்றினார்கள். பிற்காலத்தில் இவற்றால் பிள்ளைக்கு பாதிப்பு ஏற்படுமோ என்று பயமாக உள்ளது.

டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

பதில் : உங்கள் ஆதங்கம், கவலை எமக்குத் தெளிவாகப் புரிகிறது. அதுவும் பெற்றோருக்கு, பிஞ்சுக் குழந்தைக்கு ஊசி ஏற்றுவது போன்ற விடயங்கள் தாங்கொணா வேதனை தருவனவாகும். எனினும் பிறந்தவுடன் குழந்தைக்கு வலிப்பு வந்தது கிருமித் தொற்றினால் எனில், அதற்கு 3 வாரங்கள் நுண்ணுயிர்க்கொல்லி மருந்து ஊசி மூலம் ஏற்றப்படும் என்பதும் சரி தான். பிறந்த குழந்தையில் வலிப்பு ஏற்படப் பிரதான காரணம் பிறப்புக் கால்வாயில் குழந்தையின் தலை இறுகப்பட்டு நீண்ட நேரம் சிரமப்பட்டு குழந்தை பிரசவிக்கப்படும் போது குழந்தையின் மூளைக்கு அது தாங்கக் கூடியதைவிட நீண்ட நேரம் ஒட்சிசன் கிடையாததால் அந்தப் பிஞ்சு மூளை தாக்கப்படுவது (BRAIN INSULT) ஆகும். பிறந்தவுடன் குழந்தை அழாவிட்டால் அது ஆபத்தைக் குறிக்கிறது என்று அக்கால மருத்துவிச்சிகள் மட்டுமன்றிப் பொதுமக்களுமே அறிந்திருந்தனர். இது நவீன விஞ்ஞானம் ஏற்றுக்கொண்ட உண்மையும் கூட. அழும்போது ஒட்சிசன் உள்ளெடுக் கப்படுகிறது என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

வலி ஏற்படுவதற்கு மற்றொரு காரணம் குழந்தைக்குப் பாலூட்டத் தாமதமாவதால் குழந்தையின் இரத்தத்தில் குளுக்கோஸ் குறைவடைவதும் அடங்கும். முக்கியமாக முதலாவது குழந்தையைப் பிரசவிக்கும் தாய்மார் இது விஷயத்தில் முன்கூட்டிய அனுபவம் பெற்றிராததாலும், கர்ப்ப காலத்திலேயே மார்பகத்திலிருந்து முலைக்காம்பை வெளியே இழுத்து இழுத்துத் தயார்ப்படுத்தாத காரணத்தினாலும் குழந்தைக்குப் பாலை உறிஞ்ச முடியாத நிலையில் அதன் இரத்தத்தில் குளுக்கோஸ் சத்துக் குறைந்து, இதனால் மூளைக்கும் குளுக்கோஸ் கிடைப்பது குறைவடைவதாலேயே வலிப்பு ஏற்படுகிறது. இது நிவர்த்திக்கக் கூடிய இலகுவான ஒரு பிரச்சினை. பிற்காலத்தில் இந்த வலிப்பால் குழந்தைக்கு எந்தப் பிரச்சினையும் அநேகமாக இராது என்றே கூறலாம். கர்ப்பகாலத்தில் நம் நாட்டு பொதுசௌக்கிய மருத்துவ மாது (இப்போது குடும்ப மருத்துவ உத்தியோகத்தர்) (Family Health Officer) என்று அழைக்கிறார்கள். இவர்கள் சிறந்த சேவை யாற்றும் ஒரு அரச உத்தியோகத்தர் குழுவினர் என்லாம். இவர்கள் மூலம் கர்ப்பிணியைப் பரிசோதித்து முலைக் காம்பை வெளி இழுத்து குழந்தை பிறந்ததும் அதற்குப் பாலூட்டக்கூடிய விதமாகத் தயார்ப்படுத்த உதவுவார்கள். மேலும், குழந்தை பிறந்தவுடன் தாய்க்கு பால், பானங்கள் நிறைய அருந்தக் கொடுக்க வேண்டும். நிறைய நீரும் அருந்துவது அவசியம். இதன் மூலம் தாய்க்குப் பால் சுரப்பதை அதிகரிக்கலாம். அவ்வாறே குழந்தையைத் தொடர்ந்து பால் உறிஞ்ச அனுமதிக்க வேண்டும். இதன்போது உளவியல் ரீதியாகத் தாய்க்கு இரக்கமேற்பட்டுக் குழந்தையைப் பார்த்துப் பார்த்து பால் சுரப்பது அதிகரிக்கப்படும். இவ்வாறு பால் சுரப்புக் குறைவால் அல்லது முலைக் காம்பு சரியாகத் தயார் செய்யப்படாததால் குழந்தைக்குப் போதிய பால் கிடையாமை ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட வலிப்பு மட்டுமெனில் அதற்கு நீங்கள் கூறிய கண்ணாடி அறை (இதை Neonatal baby care - பிறந்த குழந்தை பராமரிப்பு அறை) என்ற பிரிவில் வைத்து சிகிச்சை தரவேண்டியிராது.



இதைவிட முக்கியமான கிருமித் தொற்றினால் உண்டான வலிப்பு எனின் அதற்கு நீங்கள் கூறியபடி குழந்தையை அந்த விசேட (Neonatal Intensive care Unit) பிறந்த குழந்தை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சையளிப்பது அவசியம். மிகுந்த ஆவலுடன் குழந்தையைப் பிரசவித்த பிறகு உடனடியாகத் தாயிடமிருந்து குழந்தையைப் பறித்தெடுத்தது போல் பிரித்து இவ்வாறு வேறு அறையில் வைத்து சிகிச்சையளிப்பது மிகவும் துக்ககரமானது. மேலை நாடுகளில் தாயையும் குழந்தையுடனிருக்க அல்லது கண்காணிக்க அனுமதிக்கும் வசதிக ளுண்டு. நம்நாட்டில் அந்த வசதியின்மை, வறுமை காரணமாக இது சாத்தியமில்லை. எனினும் இந்தப் பிஞ்சு மூளையைக் கிருமி தாக்கி நாசப்படுத்தி நடக்க முடியாத, பேசமுடியாத நடைப்பிணம் போல் இருப்பதைவிட இவ்வாறு பிரித்து சிகிச்சையளிப்பது ஒப்பீட்டளவில் விரும்பத் தக்கது என்பதால் இவ்வாறு செய்கிறார்கள். இந்தப் பிரச்சினை செப்ரி சீமியா (Septicemia) அல்லது மூளைக் காய்ச்சல் (Meningitis) அல்லது இரண்டும் சேர்ந்த நோய். மிகவும் பாரதூரமான உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். குழந்தைக்கு உயிராபத்தை ஏற்படுத்தாவிட்டாலும் கூட மூளையில் பாதிப்பை ஏற்படுத்தி நடக்க முடியாத, பேச முடியாத குழந்தையாக அல்லது மூளை விருத்தி குறைந்த பிள்ளையாக வர சிறு வாய்ப்பு உண்டு என்பதால் தான் மிகக் கவனமெடுத்து மருத்துவர்கள் 3 வாரம் ஊசி மூலம் மிகத் தரம் வாய்ந்த, விலை உயர்ந்த நுண்ணுயிர்க்கொல்லிகளை ஏற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே உங்கள் குழந்தைக்குப் பிற்கால பாதிப்பு அநேகமாக இராது என்றே கூறலாம்.

இவ்வாறு மூளையைப் பாதிக்கும் பக்டீரியாக் கிருமிகளில் பலவகை இருப்பதால் எதுவெனக் கண்டறியவும், எந்த மருந்து கிருமியை ஒழித்துக் கட்டும் எனத் துல்லியமாகக் கண்டறியவும் முதுகில் குத்தி நீர் எடுத்தது என நீங்கள் குறிப்பிட்ட Lumbar Puncture என்ற பரிசோதனை செய்யப்படும். குழந்தைக்கு சிறுவலி இருந்தாலும் இது செய்யப்படுவது சட்டப்படி, மருத்துவப்படி கட்டாயமாகும். இதைச் செய்யத் தவறியதால் பதவியிழந்த மருத்துவர்கள் பிரிட்டன், அமெரிக்காவில் பலர் உள்ளனர். குழந்தையின் பிற்கால மூளை வளர்ச்சி, நடத்தல், காது கேட்டல் முதலியவை பாதிக்காது இருக்க வேண்டுமாயின் இந்தப் பரிசோதனை செய்யவே வேண்டும். வேறு வழியில்லை. இதனால் (இந்தப் பரிசோதனையால்) குழந்தைக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

பரிசோதனையைச் செய்யாது விட்டால் தான் பாதிப்பு ஏற்படும். எனவே, கவலையை விடுங்கள். குழந்தைக்கு வலிப்பு இருந்தால் அதை சாதாரணமாக விட்டு விட முடியாது. பிற்காலத்தில் நடக்க முடியாத, வாய்பேச முடியாத குழந்தையாக அல்லது நடக்கக் கூடிய, பேசக்கூடிய குழந்தையாக இருந்தாலும் மூளை பாதிப்பால் புத்திக்கூர்மை குறைவாக இருக்கும் ஆபத்து உண்டு. இது நடந்த பின் எவராலும் எதுவுமே செய்து அந்தக் குறைபாட்டை நிவர்த்திசெய்ய முடியாது. எனவே தான் இவ்வாறு 'வருமுன் காப்போனாக' முன்கூட்டியே அந்தக் குறைகள் வராமல் தடுக்க வைத்தியர்கள் இவ்வாறு தீவிர சிகிச்சையைக் குழந்தைக்கு அளிக்கிறார்கள். இவ்வாறு சிகிச்சை பெற்று மீண்ட குழந்தைகள் பிற்காலத்தில் மாபெரும் விஞ்ஞானிகளாகவும் வந்த வரலாறும் உண்டு. எனவே கவலையை விடுங்கள்.

**வாசகர்களே!**
**உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு**
**டொக்டர் எஸ்.சுரேந்திரஜித்**
**பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

**உடல் நலம்,**
**சுடர் ஒளி வாரமலர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

# தொடர் உண்ணாவிரதமிருப்பதால் பாதிப்பு ஏற்படும்.



பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தித், தனி மனிதர்கள் மற்றும், பல்வேறு அமைப்பினர் உண்ணாவிரதம் இருக்கின்றனர். இப்போராட்டங்களுக்கு பலன் இருக்கிறதோ, இல்லையோ, தொடர் உண்ணாவிரதத்தால், போராட்டத்தில் ஈடுபடுவோரின் உடல்நிலை பாதிக்கப்பட்டு, மரணம் ஏற்படும் அபாயம் உள்ளது என, மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

இருபது வயது நிரம்பிய, 50 கி.கி., முதல், 60 கி.கி., வரை எடையுள்ள ஒரு நபர், 5 முதல் 7 நாட்கள் வரையிலும், அவ்வப்போது நீர் மட்டும் அருந்தினால், 10 நாட்கள் வரையிலும், தொடர் உண்ணாவிரதம் இருக்க முடியும். ஏழு நாட்களுக்கு மேல், உண்ணாவிரதம் இருப்பவர்களின் இரைப்பையில், வழக்கத்தை விட அதிகளவில் அமிலம் சுரக்கும். இதனால், அவர்களுக்கு இரைப்பை, குடல் ஆகிய இடங்களில், புண் ஏற்படுகிறது. மேலும், உணவுக் குழாய் மற்றும் குடல் சவ்வுகள் சுருங்கி ஒட்டிக் கொள்வதால், அவர்கள், வாந்தி, விக்கல், இரத்தவாந்தி, மயக்கத்திற்கு ஆளாக நேரிடும்.

சிறுநீர் வெளியேறுவது குறைந்து, சிறுநீரகக் கோளாறும் ஏற்படும். மூளை, இதயம் போன்ற முக்கிய உறுப்புகளுக்கு, தேவையான அளவு, குளுக்கோஸ் சத்துக் கிடைக்காமல், உண்ணாவிரதம் இருப்பவர்கள், "ஹைப்போ கிளைசிமிக் கோமா" எனும் நிலைக்குத் தள்ளப்படுவர். கூடவே, வலிப்பு நோயும் ஏற்பட்டு, மரண அபாயத்திற்கு அவர்கள் ஆளாகின்றனர். உண்ணாவிரதப் போராட்டம், தற்கொலை முயற்சியாகக் கருதப்படும் இன்றைய சூழலில், தங்கள் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்ல முயல்வோர், உண்ணாவிரதத்தை தவிர்த்து, பிற அறவழி களில் போராடுவதே, அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்திற்கும் நல்லது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# ஹோர்மோன் பரிசோதனை குழந்தைகளுக்கு அவசியம்.

ஹோர்மோன் குறைபாடு போன்ற பிறவிக் கோளாறுகளுக்கு, உடனடி சிகிச்சை அளிக்க, பிறந்த குழந்தைகளுக்கு இந்நோய்கள் குறித்த பரிசோதனை அவசியம் என, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. பிறந்த குழந்தைகள், நோய் பாதிப்புகள் இன்றி, ஆரோக்கியமாக உள்ளனவா என்பதை அறிய, அவற்றுக்கு, மருத்துவமனையில் பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இவற்றில், ஹோர்மோன்கள் குறைபாடு, பிறப்புறுப்புகளின் பிறவிக் குறைபாடு போன்றன, நாளடைவில் தெரியவரும் பிறவிக் கோளாறுகள் குறித்த பரிசோதனைகள் பெரும் பாலும் மேற்கொள்ளப்படுவதில்லை.



பிறவியிலேயே, அட்ரினல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, வளர்ச்சிக்குத் தேவையான ஹோர்மோன்கள் உற்பத்தி குறைந்திருக்கும். தைரோய்ட் குறைபாடுள்ள குழந்தைகள், நாளடைவில் மூளை வளர்ச்சியின்மை, மனவளர்ச்சி குன்றிய தன்மை ஆகியவற்றுக்கு ஆளாகின்றனர் என, மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். இந்த எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், நடத்திய ஆய்வின் முடிவுகள், சமீபத்தில் வெளியிடப்பட்டன. பிறந்து, சில நாட்களே ஆன, 1,000 குழந்தைகளிடம், ஹோர்மோன் குறைபாடுகளைக் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட, 30 ஆயிரத்து 514 இரத்த மாதிரிகளில், 37 குழந்தைகளுக்கு, பிறவி தைரோய்ட் ஹோர்மோன் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 2,000 குழந்தைகளில், ஒரு குழந்தைக்கு, பிறப்புறுப்புகளின் பிறவிக் குறைபாடு உள்ளதும், ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# மௌன மனவெளிகள்

67

நா.யோகேந்திரநாதன்

பொன்னுக்குட்டி அதிகாலையிலேயே கமலியையும் கூட்டிக்கொண்டு விதானையார் வீட்டுக்கு வந்துவிட்டார். தனது மகள் யாழ்ப்பாணத்தில பெரிய படிப்புப் படிக்கப் போகிறாள் என நினைத்த போது அவருக்குப் பெருமை பிடிபடவில்லை. மணியாறன் மூலையில் இது வரையும் பெண்கள் மட்டுமன்றி ஆண்கள் கூட எவருமே எஸ்.எஸ்.சிக்கு மேல் படித்ததில்லை. அவர்களில் ஒரு சிலர் மட்டுமே நான்கைந்து முறை முயன்று மிகவும் கஸ்டப்பட்டு எஸ்.எஸ்.சி சித்தியடைந்திருந்தனர். அதற்கு மேல் அவர்களால் படிக்க முடிவதுமில்லை. அரச உத்தியோகங்கள் அவர்களுக்குக் கிடைப்பதுமில்லை.

சொர்ணத்தையும், கமலியையும் காரில் ஏற்றிக்கொண்டு தனது வீட்டுக்கு வரும்படியும், தான் அவர்களுடன் வந்து, இருவரையும் பாடசாலைகளில் சேர்த்து விடுவதாகவும் கார்த்திகேயன் மாஸ்ரர் சொல்லியிருந்தார். கமலியைத் தான் போகும் காரில் ஏற்றுவதை விதானையார் விரும்பவிலலை என்பது உண்மை தான். ஆனால், அதை வெளிக்காட்டி அவர் தன் மீது கார்த்திகேயன் மாஸ்ரர் வைத்திருக்கும் நல்ல அபிப்பிராயத்தைக் குழப்ப விரும்பவில்லை.

அவர்கள் வெளிக்கிட்டுத் தயாராகவும், மணியத்தின் கார் வரவும் சரியாக இருந்தது. விதானையார் ஏறி முன்னிருக்கையில் அமர சொர்ணமும், கமலியும் பின்னால் ஏறிக்கொண்டனர். பொன்னுக்குட்டி தானே கதவைச் சாத்தி விட்டு மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தார்.

கார்த்திகேயன் மாஸ்ரர் வீட்டிற்கு வந்து அவரையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கார் மகளிர் இந்துக் கல்லூரியில் வந்து நின்றது. மாஸ்ரரும் சொர்ணமும் விதானையாரும் இறங்கி உள்ளே போகக் கமலி காரிலேயே இருந்து கொண்டாள்.

கார்த்திகேயனைக் கண்டதுமே அதிபர் எழுந்து வெளியே வந்து "வாங்கோ சேர்" என வரவேற்று உள்ளே கூட்டிக் சென்று மூவரையும் அமரும்படி கேட்டுக் கொண்டார்.

சொர்ணத்தின் சான்றிதழ்களை வாங்கிப் பார்த்து விட்டு "வெறிகுட்" என்றார். அவர் பின்பு விதானையாரைப் பார்த்து "ஐயா....! வசதிக் கட்டணம், ஹொஸ்ரல் கட்டணம் எல்லாவற்றையும் கிளாக்கரிட்டை கட்டிப் போட்டு வாங்கோ" என்று விட்டு பீயோனைக் கூப்பிட்டு அவரை அவனுடன் அனுப்பி வைத்தார். பின்பு அங்கு வந்த ஒரு ஆசிரியரிடம் "இவரைக் கொண்டு போய் எஸ். எஸ். சி - ஏ வகுப்பிலே பதிஞ்சு போட்டு விடுங்கோ" எனக் கூறி சொர்ணத்தை அவருடன் அனுப்பி வைத்தார்.

பணத்தைக் கட்டி விட்டு வந்த விதானையாரிடம் "ஐயா...! மகள் ஒவ்வொரு வெள்ளியும் பின்னேரம் வீட்டுக்கு வந்திட்டுத் திங்கள் காலமை வரலாம். சனி, ஞாயிறு இஞ்சை தங்குற தெண்டாலும் பிரச்சினையில்லை..... சரிதானே" என்றார்.

அவர்கள் அதிபரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்தனர். கார் கிறீஸ்தவப் பெண்கள் கல்லூரி வாசலில் வந்து நின்றதும் மாஸ்ரரும், கமலியும் இறங்கிக் கொண்டு விதானையாருக்கு விடை கொடுத்தனர்.

அப்பாடசாலையின் அதிபரான அருட்சகோதரி அப்போது தான் 'பிறேயர்' முடித்து வந்து கொண்டிருந்தார். அவர் "குட் மோணிங் சேர்" என்று விட்டு உள்ளே அழைத்துச் சென்றார்.

கல்லூரி வாசலில் அமைந்திருந்த பிரமாண்டமான தேவாலயமும் அப்பாடசாலை வளாகத்தில் 'பிறேயர்' முடித்து ஒழுங்காகவும், அமைத்தியாகவும் வெண்ணிற ஆடையில் வகுப்புகளைக் நோக்கிப் போய்கி கொண்டிருந்த மாணவிகளும் அவள் மனதை மலைக்க வைத்தன.

முன்னால் நின்ற மகோகனி மரத்தில் இருந்த பறவைகள் கூட மிகவும் கட்டுப்பாட்டுடன் அமைதி காப்பது போலவே அவளுக்குத் தோன்றியது.

அனைவரும் உள்ளே சென்று அமர்ந்து கொண்டனர்.

மாஸ்ரர் "இவ தான் நான் ஏற்கனவே உங்களட்டைச் சொன்ன பிள்ளை" எனக் கமலியை அதிபரிடம் அறிமுகப்படுத்தினார்.

அவர் கமலியைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார்.

"சேர், உம்மைப் பற்றி எல்லா விஷயங்களையும் சொல்லியிருக்கிறார். நீர் சாதி மாறிக் கலியாணம் செய்ததை நாங்கள் பாராட்டுறம், அது ஒரு சமூக மாற்றத்துக்கு வழி திறக்குற விஷயம். ஆனால், நீர் படிக்க வேண்டிய வயதிலை காதலிச்சதையும், கலியாணம் செய்ததையும் ஏற்றுக் கொள்ள முடியாது. உம்மடை எதிர்காலத்தையும், வளர்ச்சியையும் பாழடிச்சுட்டீர். தவறு செய்யிற மனித இயல்பு தவறியதிலையிருந்து திருந்தும் போது ஆண்டவர் எங்களை மன்னித்து விடுவார். இப்ப நீர் திருந்திப் புதிய பாதைக்கு வர விரும்புகிறீர் எண்டு நான் நினைக்கிறன். உமக்கு அந்த வாய்ப்பை வழங்கிறது நான் ஆண்டவருக்குச் செய்யுற பணி எண்டே கருதுகிறேன். நான் உமக்குத் தந்த இந்தச் சந்தர்ப்பத்தின்ரை பெறுமதியை உணர்ந்து படித்து முன்னுக்கு வருவீர் எண்டு திடமாக நம்புறன், அதுக்கு ஆண்டவர் உமக்கு எல்லா வல்லமையையும் நிச்சயமாகத் தருவார்."

அதிபர் தன் அறிவுரையை முடித்துவிட்டு மெல்ல அவளைப் பார்த்து புன்னகைத்தார்.

தான் ஏதோ பாவம் செய்து விட்டது போலவும் அந்தப் புன்னகை அதைத் கழுவிவிட்டது போலவும் அவளுள் ஒரு உணர்வு பொங்கி எழுந்தது. அவரின் ஒவ்வொரு சொல்லினுள் தான் உருகி விட்டது போலவே அவளுக்குத் தோன்றியது.

மாஸ்ரர் மெல்ல "சிஸ்ரர் கட்டணங்கள்...?" என்றார்.



"பரவாயில்லை, இருந்தால் கட்டலாம். இல்லாட்டில் எங்கடை சபை செலுத்தும்" என்றார் அதிபர்.

"இருக்குது சிஸ்ரர், நான் கட்டுறன்" என்றாள் கமலி.

மாஸ்ரர் அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். அவர் தன்னை விட்டுப் போகும் போது ஒரு புனித பிரதேசத்தில் தேவதைகள் மத்தியில் விட்டுச் செல்வதாகவே அவள் உணர்ந்தாள்.

தைப்பொங்கல் நெருங்கி வந்த காரணத்தால் இளையவனிடமும், சிவஞானத்திடமும் பட்டம் கட்டுவிப்பதற்காகப் பலரும். வரத் தொடங்கி விட்டனர். ஏனோ இளையவனுக்கு இம்முறை பட்டம் கட்டுவதிலோ, போட்டியில் கலந்து கொள்வதிலோ பெரிதாக ஆர்வம் ஏற்படவில்லை. ஆனால், குட்டியன் விட்ட பாடில்லை எனவே இளையவன் குட்டியனுக்காக ஒரு எட்டு முழப் பிராந்துப் பட்டம் கட்டுவதில் ஈடுபட்டான்.

ஒரு வாரமாகச் சொர்ணத்தைக் காணாது அவன் மனதில் ஒரு பெரும் வெறுமையுணர்வையும், தவிப்பையும் ஏற்படுத்தி விட்டது. அப்போது தான் சொர்ணத்தின் மீது தான் கொண்ட அன்பு எவ்வளவு ஆழமாக அவனின் நெஞ்சில் பதிந்துவிட்டது, என்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. அது எவ்வளவு ஆபத்தானது என்பதை அவன் புரிந்து கொண்டிருந்தாலும் மனம் அந்த எண்ணங்களிலிருந்தும் விடுபட மறுத்தது.

விதானையார் வீட்டுக்கு அவன் சீவலுக்குப் போகும் நேரங்களிலெல்லாம் அவனின் தரிசனத்திற்காகக் கண்கள் ஏங்கி அலையும், காதுகள் அவளின் குரலுக்காக ஏங்கும், ஒவ்வொரு நாளும் வரும் போதும் அவள் வந்திருக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புடனேயே அவன் வருவான். அவள் வார மொருமுறை வருவாள் என்பதை அவன் அறிந்திராத காரணத்தால் எதிர்பார்ப்பும், ஏமாற்றமும் அவனுக்குத் தினசரி அனுபவங்களாகி விட்டன.

நான்காவது நாள் அவன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் மெல்லிய தயக்கத்துடன் சீதேவிப்பாட்டியிடம் கேட்டு விட்டான்.

"பிள்ளை எப்ப வருமாக்கும்...?"

"நாளைக்கு வெள்ளி பின்னேரம் வருவள் ...ஏனடா?"

'சும்மா கேட்டனான்" என்றான் அவன்.

"கோழிக்குஞ்சை செட்டையுக்கை வைச்சிருக்கிற மாதிரி வைச்சிருந்திட்டு அவளைக் காணாமல் இருக்க எனக்கும் விசர் பிடிச்சிடும் போலை கிடக்கடா" என்றாள் கிழவி பெரும் ஆதங்கத்துடன்.

"உங்களுக்கே அப்படியென்டால் நெஞ்சுக்கை பொத்திப் பொத்தி வைச்சிருக்கிற எனக்கு எப்படியிருக்கும்?" எனக் கேட்க வேண்டும் போல அவனுக்குத் தோன்றியது, ஆனால், சிரமப்பட்டு அவ்வார்த்தைகளை அடக்கிக் கொண்டான்.

எனினும் "கவலைப்படாதையுங்கோ ..பிள்ளை நாளைக்கு வந்திடும் தானே" என்று விட்டு அவன் அந்த இடத்தை விட்டு அகன்றான். விதானையாருக்கு கள்ளை ஊற்றி வேலியில் கொழுவி விட்டு வரும் போதுதான் முன்னால் உள்ள பூக்கண்டுகளுக்கு நீர் ஊற்றப்படாமல் வாடிக்கிடப்பதை அவதானித்தான். மறு காலை சீவி முடித்த பின் தானே நீர் ஊற்றி விடுவது என முடிவு செய்து கொண்டான்.

அன்று பட்டம் கட்டுவது சம்பந்தமாகச் சிவஞானம் இளையவன் வீட்டுக்கு வந்திருந்தான். இருவரும் அந்த வேலையை முடித்துவிட்டு உப்பு வெளிப்பக்கம் போய் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டனர்.

மஞ்சள் சூரியன் மெல்ல மெல்லக் கடலுக்கு அப்பால் நிழலாகத் தெரிந்த பனங்கூடலில் மறைந்து கொண்டிருக்கிறது. மாடுகளும் மேய்ச்சல் முடிந்து பட்டிகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

இளையவன் சிவஞானத்திடம் கேட்டான் "உனக்கு ஒரு கிழமையாகக் கமலியைக் காணாமல் இருக்க ஒரு அந்தரமாயில்லையே?"

சிவஞானம் மெல்லச் சிரித்தவாறே "இல்லை" என்றான்.

'என்ன இல்லையோ? இளையவன் கேள்வியில் வியப்பு மேலேறி நின்றது.

"பின்னை, அவள் எனக்கின்னும் சம்மதம் சொல்லவேயில்லை. நான், முதல் அவள் என்னை ஏற்றுக்கொள்ள வைக்க வேணும்."

சிவஞானத்தின் வார்த்தைகள் வெகு நிதானமாக வெளிவந்தன.

"அவள் சிங்கனை மறந்து உன்னை ஏற்றுக்கொள்ளுவள் எண்டு நம்பிறியே?"

"சிங்கனை மறக்க மாட்டாள் எப்படியோ ஒரு நாளைக்கு என்னை ஏற்றுக்கொள்ளுவாள். அவள் என்னிலை வைச்சிருக்கிற அன்பு ஒரு நாளைக்குக் காதலாய்மாறும் எண்டு நான் நம்புறன். ஆனால்...." எனச் சொல்லிவிட்டு இடை நிறுத்தினான் சிவஞானம்

"ஆனால்..."

"அவள் படிக்கிற பள்ளிக் கூடம் சிஸ்ரர் மாரின்ரை பள்ளிக் கூடம், கமலி சிங்கண்ணனை இழந்த சோகம் அவளைத் துறவறப் பக்கம் இழுத்திடுமோ எண்டு தான் பயப்பிடுகிறன்."

இளையவன் அதிர்ந்து போனான்.

"உன்ரை காதலுக்கு இவ்வளவு ஆபத்து இருக்கே?"

"இருக்கிகுத்தான் எங்கள் இரண்டு பேரின்ரை காதலுமே வழமையானதல்ல, வித்தியாசமானது. எங்கடை சமூகங்களாலை ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது ஆனபடியால் ஒவ்வொரு வினாடியும் போராடித்தான் வெல்ல வேணும்."

சிவஞானத்தின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவன் ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வளவு தெளிவாக இருக்கிறான் என்பதை இளையவனுக்குப் புரிய வைத்தன.

"அப்ப... என்ரை காதல் கட்டாயம் நிறைவேறும் எண்டு நம்பிறியே?"

"அது.. உன்ரை மன உறுதியைப் பொறுத்தது. சிங்கண்ணன் மாதிரித் துணிவு மட்டும் இருந்தால் போதாது துணிவு, பொறுமை, புத்திசாலித்தனம் எல்லாமே வேணும்."

"எல்லாத்தையும் எனக்கு என்ரை சொர்ணம் தருவாள்" இளையவனின் குரல் அசைக்க முடியாத உறுதியுடன் ஒலித்தது. வானத்தில கூட்டமாகப் பறந்து வந்த வெண்ணிறக் கொக்குகள் கடற்கரையில் நின்ற அந்தப் பட்ட மரத்தில் அடைக்கலம் தேடிக் கொண்டன.

இப்போ பட்ட மரம் வெண்ணிறப் பூக்களாய்க் காட்சியளித்தது.

(தொடரும்)



# ஜெனீவாவும் சுவாமியும்!

சுப்பிரமணிய சுவாமி அமெரிக்காவின் சி.ஐ.ஏ முகவர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர். சோனியாவுக்கு எதிரானவர். அமெரிக்காவின் தெற்காசிய அதிகாரிகள் மற்றும் இராஜாங்கத் திணைக்களத்துடன் மிகவும் நெருக்கமானவர். மற்றும் இந்திய றோ உட்பட உளவு அமைப்புக்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் நெருக்கமானவர். இந்திய அரசியலில் கோமாளி என்றால்தான் இவரைத் தெரியும்.

இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள், றோ உட்பட உளவு தாபனங்கள், பொலிஸ் நிர்வாகம் உட்பட இந்தியாவின் சகல உயர் துறைகளிலும் கோலோச்சுவது கேரளாவின் மலையாளிகள். மலையாளிகளுக்கும் தமிழ்நாட்டுக் காரர்களுக்கும் என்றுமே ஒத்து வராது. அதாவது இலங்கையில் சிங்களவர்களும், தமிழ் பேசும் மக்களும் போன்று. அந்த வகையில் சுப்பிரமணிய சுவாமி மதுரைத் தமிழர் என்றாலும் இவரது தாய் மலையாளி.

அதற்கு மேலும் இவர் வட-இந்தியர் என்று தன்னைக் காட்டிக் கொள்வதில் பெருமைப் படுகின்றார். இந்திய உயர்மட்டங்களுடன் மிகவும் நெருக்கமானவர். இவரால், இவரது கட்சியால் ஒரு பஞ்சாயத்தில் கூட இன்னும் யாரும் வென்றதாகச் சரித்திரம் இல்லை. ஆனால், ஏதாவது வில்லங்கம் பண்ணிப் பெயர் வாங்குவதும், குட்டையைக் குழப்புவதும்தான் இவரது நிரந்தரப் பொழுதுபோக்கு.

ஜெனீவா மாநாடு ஆரம்பிக்கப்பட்டதும் இந்த ஜோக்கர் அவசரமாகக் கொழும்பு வந்து மஹிந்தர், கோத்தாபய ஆகியோரை அலரி மாளிகையில் சந்தித்து அமெரிக்காவின் பிரேரணையை நீர்த்துப்போகச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. கொழும்பு வந்த சுவாமி உடனடியாக அமெரிக்கா சென்று அமெரிக்காவின் தெற்காசிய உதவி ராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்கை நியூயோர்க்கில் சந்தித்து இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் பிரேரணையில் மாற்றம் செய்ய வேண்டும் என்று மன்றாடியுள்ளார்.

சுப்பிரமணிய சுவாமியும் இந்திய மத்திய அரசின் கோரிக்கையும் ஒன்றே. அதாவது அமெரிக்காவும் இலங்கையும் ஒரு இணக்கப் பாட்டுக்கு வரவேண்டுமாம். இதைத்தான் இந்தியாவின் இரண்டு சபைகளிலும் இந்திய

**நிலாம்டீன்**
அட்டாளைச்சேனை

வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்திருந்தார். இதைத்தான் பிளேக்கிடம் சுப்பிரமணிய சுவாமியும் வலியுறுத்தியிருந்தார். இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்று என்பதால் இந்திய அரசுதான் இந்த ஜோக்கரைக் களமிறக்கியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசே விசாரணை நடாத்த வேண்டும் என்றும் சர்வதேசத்தினால் நியமிக்கப்படும் குழுவினர் நடாத்த முடியாது என்றும் வாதாடியுள்ளார் சுவாமி.

அமெரிக்கா, இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்கினால் அது இந்தியாவுக்கு இராஜதந்திர ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை செயல்படுவதற்குத் தயாராக இருக்கின்றது என்றும், இலங்கை மீதான அழுத்தங்கள் எதிர்காலத்தில் உள்நாட்டுத் தீர்வு முயற்சியைப் பாதிக்கும் என்றும் இலங்கையின் உத்தியோக பூர்வமற்ற தூதுவராகச் சென்று சுப்பிரமணிய சுவாமி பிளேக்கிடம் தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணிய சுவாமி மூக்கை நுழைத்த பின்புதான் இலங்கைக்கான இறுக்கம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் இம்முறை ஜெனீவாவில் மிகவும் மௌனம் காத்தாராம். அதாவது இந்தியா இம்முறை ஈழத்தமிழர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லையென்ற நல்லபிள்ளை நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. ஆனால், இந்தியாத் திரைமறைவில் நன்றாகக் காய் நகர்த்தி ஒன்றுமே இல்லாத காற்றடைத்த பலூன் போன்று, எந்தவொரு இறுக்கமும் இல்லாத வெறும் பூச்சாண்டிப் பிரேரணையாக ஜெனீவாப் பிரேரணை மாற்றப்பட்டுள்ளது. இதன் முழுச் சூத்திரதாரி இந்தியா என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். அத்துடன் இந்தியா திரைமறைவில் ஜெனீவாவில் இலங்கையின் நேசநாடுகளான கியூபா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் தூதுவர்களோடு இந்திய தூதுவர் இரகசிய மந்திராலோசனை நடத்திய விடயமும் கசிந்துள்ளது.

> *அமெரிக்கா, இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்கினால் அது இந்தியாவுக்கு இராஜதந்திர ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை செயல்படுவதற்குத் தயாராக இருக்கின்றது என்றும், இலங்கை மீதான அழுத்தங்கள் எதிர்காலத்தில் உள்நாட்டுத் தீர்வு முயற்சியைப் பாதிக்கும் என்றும் இலங்கையின் உத்தியோக பூர்வமற்ற தூதுவராகச் சென்ற சுப்பிரமணிய சுவாமி பிளேக்கிடம் தெரிவித்துள்ளார்.*

ஒன்றை மட்டும் மீண்டும் மீண்டும் ஆணித்தரமாக சொல்ல வேண்டியுள்ளது. அதாவது வடக்கில் கொத்தணி, பொஸ்பரஸ் குண்டுகளை இலங்கைக்கு வழங்கியது இந்தியா. அதற்கான பல ஆதாரங்கள் உலக மனிதஉரிமை அமைப்புக்களிலும் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களிலும் உள்ளதாக லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கிலும், சர்வதேச எல்லைகளிலும் புலிகளின் நவீனரக ஆயுதக் கப்பல்களைக் காட்டிக் கொடுத்தது மற்றும் இலங்கை ராணுவ உயர் அதிகாரிகளுக்கு நவீனரக ஆயுதப் பயிற்சியளித்தது அமெரிக்கா.

இலங்கை இராணுவம் என்பது வெறும் அம்பு மட்டும்தான். அம்பை எய்யச் சொன்னது, இராணுவத் தளபாடங்கள், ராடர்க் கருவி என்று வடக்கில் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் கொலைக்கு உடந்தை இந்தியா. இதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அதனால் இந்தியா- இலங்கை- அமெரிக்கா என்பன ஒரு கூட்டுக் குற்றவாளிகளே. இருந்தாலும் போர்க்குற்றத்தில் இந்தியா சிக்குவது உறுதி என்பதை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டியுள்ளது.

சர்வதேச போர்க்குற்றம் என்ற விசாரணை வருமானால் இந்தியாவும் இறுகும் என்பதையும் மீண்டும் மீண்டும் ஆணித்தரமாகப் பதிவு செய்கின்றோம். இந்தியா எப்படியும் இலங்கையைக் காப்பாற்றித்தான் ஆக வேண்டும். சர்வதேச சுயாதீன போர்க்குற்ற விசாரணை இலங்கைக்குள் நடைபெறுமானால் இந்தியாவும் சாட்சிக் கூண்டில் ஏறவேண்டும் என்றும், இந்தியாவை மாட்டிவிட இலங்கை தயங்காது என்பதை மீண்டும் மீண்டும் ஞாபகமூட்டுகின்றோம். இலங்கையின் சர்வதேச போர்க்குற்ற விசாரணையைத் தடுப்பதில் இலங்கை ஆர்வம் காட்டுவதை விட இந்தியாதான் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது.

இறுதிப் போரின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தவர்கள் இந்திய மருத்துவர் குழுவே (மருத்துவர் குழு என்றாலும் அவர்கள் இந்திய இராணுவ புலனாய்வுக் குழுவினர் என்பது வேறு கதை) எனவே, காணாமல் போனவர்கள் பற்றி இந்தியாவிடம் தான் கேட்கவேண்டும் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார். இது இந்தியாவை, சிக்கவைப்பதற்காக இலங்கை இந்தியா மீது விட்ட ஒரு எச்சரிக்கை என்பதாகத்தான் உணரப்பட்டது.

இப்படித்தான் இலங்கை இந்தியாவை மாட்டிவிடும் என்று எங்களது ஆய்வில் டிசம்பர் மாதம் எழுதியிருந்தோம். அதுதான் நடந்துள்ளது. அதனால்தான் எப்படியும் இந்தியா காப்பாற்றும் என்று இலங்கைக்குத் தெரியும். அதனால்தான் இலங்கை இம்முறை எந்தவொரு ஜெனீவா படையெடுப்பும் இல்லாது அலட்டிக் கொள்ளாது ஜோக்கர் சுப்பிரமணிய சுவாமியைக் களமிறக்கியது. இந்தியாவும் பின்கதவு வளியாகத் தனது இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி இலங்கையைப் பிணையெடுத்துள்ளது அடுத்த ஆண்டும் ஜோக்கர் தனது பணியைத் தொடர்வார்.

போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை நடக்குமானால் தற்போதைய இந்திய ஆட்சியாளர்கள் மாட்டுப் படுவார்கள். அதனால் காஷ்மீர் பிரச்சினையில் சர்வதேச அழுத்தம் இந்தியாவுக்கு அதிகரிக்கும். இந்திய ஆட்சியில் மாற்றம் வேண்டும். அதிலும் விசேடமாக இந்திய ஆட்சியில் ஈழத் தமிழர்களின் கை ஓங்க வேண்டும். இந்திய ஆட்சியில் ஈழத் தமிழர்களின் ஆதிக்கம் இல்லாதவரைக்கும் எமது இலக்கை அடைய முடியாது என்பதை மீண்டும் மீண்டும் பதிவு செய்கின்றோம்.



# இந்தியாவின் இரட்டைப் போக்குத் தந்திரோபாயம்!

**நீலன்**

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 13 மேலதிக வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 26 நாடுகளும், எதிராகப் 13 நாடுகளும் வாக்களித்துள்ளன, 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்தன.

தீர்மானத்திற்கு ஆதரவாக அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, பெனின், ருமேனியா, போலந்து, அயர்லாந்து, இந்தியா, கௌத் தமாலா, ஐவரி கோஸ்ட், லிபியா, சியாராலியோன், கொரிய அரசு, ஆர்ஜன்ரினா, பிரேசில், சில்லி, கோஸ்டரிக்கா, பெரு, ஒஸ்திரியா, ஸ்பெயின், செக்குடியரசு, எஸ்டோனியா, மொன்டெஸ்னெரோ, மோல்டோவா குடியரசு, கபோன் ஆகிய 26 உறுப்பு நாடுகள் வாக்களித்தன.

தீர்மானத்திற்கு எதிராக இந்தோனேஷியா, ஈக்குவடோர், கொங்கோ, குவைத், தாய்லாந்து, மருடோனியா, உகண்டா, மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், வெனிசுலா ஆகிய 13 உறுப்பு நாடுகளும் வாக்களித்தன.

ஜப்பான், மலேஷியா, அங்கோலா, பொட்டாஸ்வானா, பூர்கிபைனோ, எத்தியோப்பியா, கென்யா, கசகஸ்தான் ஆகிய 8 உறுப்பு நாடுகள் வாக்கெடுப்பில் பங்கெடுக்காது நடுநிலை வகித்தன.

ஐ.நா மனிதஉரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பித்த கையோடு இலங்கை விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. முக்கியமாக இந்தியா எவ்வாறான பங்களிப்பை வழங்கும் என்பதே அனைவரினதும் அங்கலாய்ப்பாக இருந்தது.

தீர்மானத்திற்கு ஆதரவாக வக்களிக்கும் என்று ஒருசாராரும், இல்லை வாக்கெடுப்பை நடத்தாமல் இந்தியா தடுத்து நிறுத்தும் என்று மற்றொரு சாராரும் கருத்துக்களை முன்வைத்தனர். அதேவேளை தீர்மானத்தில் திருத்தங்களை ஏற்படுத்தி அதனை நீர்த்துப் போகச் செய்து இலங்கைக்கு எதிராகவும் அமெரிக்காவுக்கு ஆதரவாகவும் இந்தியா வாக்களிக்கக்கூடும் என்று பிறிதொரு தரப்பினாலும் எதிர்வு கூறப்பட்டது. இறுதியில் அவ்வாறானதோர் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாக ஜெனீவாவில் வெற்றிகரமாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்த நிலையில் இந்தத் தீர்மானத்தால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் ஏற்படப் போகின்றது? அடுத்த கட்டமாக என்ன நடக்கும்? எதற்காக இந்தியா இறுதியில் இறுக்கமற்ற போக்கைக் கடைப்பிடித்துத் தளம்பலான நிலையில் இருந்தது? இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளின் நோக்கம் என்ன? இதனால் தமிழர்கள் அடையப்போகும் இலாப நஸ்டங்கள் என்ன? என்ற கேள்விகள் அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது வாஸ்தவமே!

இந்தத் தீர்மானம் வெறுமனே அலங்காரமாக இருக்கப்போகின்றதா? அல்லது தமிழ் மக்களின் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு ஏதேனும் தீர்வை முன்வைக்கப் போகின்றதா? என்ற வினாக்களுக்கு விடைகளைத் தேடுவோமேயானால் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு குறைவாகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்பதே யதார்த்தமாகும்.

அதுமட்டுமன்றி இந்தத் தீர்மானத்தை வலுவின்றி நீர்த்துப்போகச் செய்வதில் இந்தியா கூடிய பங்களிப்பினை செய்துவிட்டது என்பதே பல்வேறு தரப்பினரின் அபிப்பிராயமாகும்.

இந்தியாவின் இத்தகைய நிலைப்பாடு இன்று நேற்று அல்ல அந்த நாள் தொட்டே இருந்து வரும் ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

தமிழர்களின் உரிமைகளுக்கான அகிம்சை வழிப்போராட்டங்கள் எதுவும் பயனளிக்காத நிலையில் விரக்தியுற்ற தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையிலேந்திப் போராட்டங்களை முன்னெடுத்த காலகட்டத்தில் இந்தியாவே முன்வந்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கி ஊக்குவித்தது. அதன் பின்னர், அவற்றின் வலுவான எழுச்சியைக் கண்டு அக்குழுக்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தி ஒன்றுடன் ஒன்றை மோதவிட்டு வேடிக்கை பார்த்தது. இறுதியில் சமாதானப் படையெனும் பெயரில் இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பி ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்ததும் யாவருமறிந்ததே

இந்தியாவைப் பொறுத்தமட்டில், இந்தியாவின் சர்வதேசக் கொள்கையானது தமிழ் மக்களுக்காக அதுவும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் வளைந்து கொடுக்கும் போக்கைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதும், எந்தக் கட்டத்திலும் இந்தியாவின் நலனே முதன்மையானது என்பதும் யதார்த்தமானதாகும். இந்தியாவின் இறுதிக் கட்டப்போரின் சமயத்தில் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட இராணுவ உதவிகள் இதனையே வெளிப்படுத்துவதாக அமைந்தன.

மேலும், ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தில் முக்கியமாக சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தக் கூடாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது.

இவ்வாறே காஷ்மீர் விவகாரமும் தனக்கெதிராகத் திரும்பும் என்பதால் இந்தியா அதனை ஏற்காத நிலைப் பாட்டினைக் கொண்டிருந்தது. எனவே, அமெரிக்கத் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வது தான் அதற்கான ஒரே சிறந்த வழியென்பதையும் இந்தியா கருத்திற் கொண்டிருந்தது.

அரசியல் இராஜதந்திர மட்டங்களில் இவ்வாறு இருநிலைத் தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்படுவது ஒன்றும் புதியதல்ல. வெளிப்படையாகப் பேசமுடியாது என்று கூறிக் கொண்டே பின்கதவு வழியாக இணக்கப்பாட்டை எட்ட முயற்சிப்பது வழக்கமான தந்திரம் தான்.

ஜெனீவாவில் முன்வைக்கும் தீர்மான முன்வரைபு குறித்து அமெரிக்காவுடன் இலங்கை பேச வேண்டும். ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியிருந்தார். இது குறித்து அவர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரீசுடன் தனிப்பட்ட முறையிலும் அதிகாரபூர்வமாகவும் கலந்து உரையாடியுள்ளார்.

கடந்த முறை அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தையும் இந்தியாவே தலையிட்டுப் பலவீனப்படுத்தியது. ஆனால், இம்முறை அவ்வாறு நேரடியாகச் செய்ய முடியாத நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டுவிட்டது.

ஏனென்றால் அதற்கேற்றவாறு இலங்கை நடந்து கொண்டிருக்கவில்லை. கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவுமில்லை. அதை விடவும் தமிழ் மாநிலம் தொடக்கம் ஏனைய மாநிலங்கள் வரையிலும் இலங்கை அரசுக்கு எதிரானதும், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவானதுமான ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பலைகளும் முழுமூச்சில் வெளிப்படத் தொடங்கின. மூவர் தீக்குளித்து மரணமடையும் அளவிற்கு அவை உச்சம் பெற்றிருந்தன.

இதன் காரணமாக வெளிப்படையாக இலங்கைக்குச் சார்பாக நடந்து கொள்ள முடியாத உள்ளக அழுத்தங்களை இந்தியா சந்தித்தது. இந்நிலையில் எப்படியாவது அமெரிக்காவுடன் இலங்கை பேச்சு நடத்தி ஒரு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பியது இந்தியா.

ஆனால், இலங்கையோ நேரடியாக அமெரிக்காவின் காலடியில் விழத் தயாராக இல்லாத நிலையில் இந்தியத் தரப்பால் சுப்பிரமணிய சுவாமி களமிறக்கப்பட்டார். இலங்கை அரசை விட அமெரிக்காவுடன் இணக்கத்தை ஏற்படுத்துவதை இந்தியாவே அதிகம் விரும்பியது. அதற்காகவே சுப்பிரமணிய சுவாமி தெரிவுசெய்யப்பட்டார்.

அவருக்கு அமெரிக்காவுடன் நெருக்கம் அதிகம். அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். அதுமட்டுமன்றி நியூயோர்க்கில் ஐ.நாவில் உதவிப் பொருளாதார அதிகாரியாகவும் பணியாற்றியவர். அத்துடன் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. யின் முகவர் எனவும் கூட ஊடகங்களால் விமர்சிக்கப்பட்டவர். அனைத்தையும் விட விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரோதமான செயற்பாடுகளையே என்றும் மேற்கொள்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில்தான் சுப்பிரமணியசுவாமி இந்தப் பணிக்காக அவசர அவசரமாக விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்தார். அவரைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவும் அலரி மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்குவைத்து அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசிவிட்டுச் சென்றார்.

இதன் பின்னர், திடீரென சுப்பிரமணிய சுவாமி அமெரிக்காவுக்குச் சென்றதாகச் செய்திகள் வெளிவந்தன. அவர் அங்கு அமெரிக்க இராஜதந்திர திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்தித்துப் பேசியதாகத் தெரியவந்தது.

அந்தச் சந்திப்பின் அடிப்படை நோக்கம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை நீர்த்துப்போக வைப்பதுதான், அதிலும் முக்கியமாக சர்வதேச போர்க்குற்ற விசாரணையை அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்துவதாக இருக்கக் கூடாது என்பதேயாகும். அத்துடன் எந்த விசாரணையாக இருந்தாலும் அது உள் நாட்டிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சுப்பிரமணிய சுவாமி வலியுறுத்திக் கூறியுள்ளார். மேலும், ஜெனீவாவில் கொண்டுவரப்படும் தீர்மானம் விடுதலைப் புலிகள் மீண்டெழுவதற்கு வசதியாகிவிடும் என்றும் அவர் அமெரிக்காவுக்குப் பூச்சாண்டி காட்டியுள்ளார்.

அமெரிக்கா கொண்டு வரவிருந்த தீர்மானம் மாற்றங்கள் செய்யப்பட்டு நீர்த்துப் போகாது அப்படியே நிறைவேற்றப்பட்டிருப்பின் உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கும்.

ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஆலோசனைகளுடன் உண்மையைக் கண்டறியும் குழு அமைக்கப்படுமானால் போரின் போது இடம்பெற்ற மீறல்களையும், அதற்குப் பொறுப்பானவர்களையும் மட்டும் அது பட்டியலிடப் போவதில்லை. அத்தகைய விசாரணைகள் போர்க்களத்தில் இலங்கைக்கான இந்தியாவின் ஒத்துழைப்புக்கள் அத்தனையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து விடும் என்பதை இந்தியா நன்கேயறிந்திருந்தது. அத்தகைய நிலை ஏற்படுவதை இந்தியா அறவே விரும்பவில்லை.

அதேவேளை, அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கிறதோ இல்லையோ கடந்த வருடத்தைவிட இம்முறை பெரும்பாலான நாடுகள் ஆதரிக்கப்போகின்றன என்பதும், உறுதியாகிவிட்ட நிலையிலும், இலங்கை மீதான அவநம்பிக்கை சர்வதேச அளவில் வலுவடைந்து விட்ட நிலையிலும், அந்த ஆதரவைப் பயன்படுத்தி அமெரிக்கா எதுவிதத்திலும் தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவிடும் என்றே இந்தியாவும் நம்பியது.

எது எவ்வாறாயினும் இந்தத் தீர்மான விடயத்தில் இலங்கையுடனான உறவைக் கருத்தில் கொண்டு இந்தியா எதிர்த்தாலோ அல்லது நடுநிலை வகித்தாலோ கூட இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு அது சவாலாக அமைந்துவிடும். ஏனெனில் இலங்கை விவகாரத்தில் தலைமை தாங்கும் பாத்திரம் இந்தியாவின் கையில் இருந்து நழுவிப்போய்விடும். எனவே, அரும்பாடுபட்டு முயற்சிகளைத் திரைமறைவில் மேற்கொண்டு தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்து விட்டு 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்பது போல தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துத் தனது இரட்டைப் போக்கு இராஜதந்திரத்தை இத்தடவையும் நிறைவேற்றிவிட்டது இந்தியா.

***

# பெருவாரியான சிங்களவர்கள் இந்தியர்களாம்!

"வட இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட சிங்களவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் தான் இந்தியா கவலை கொள்ள வேண்டும்" என்று டில்லியில் உள்ள அந்நாட்டுத் தூதர் பிரசாத் காரியவாஸம் இந்திய ஊடகங்கள், வடநாட்டுத் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இரகசிய பிரசாரம் செய்து வருகிறார்.

ஜெனீவா ஐ.நா. மனிதஉரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் கடந்த 21-ம் திகதி இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு முன்னதாக, இலங்கைக்கு சாதகமான ஆதரவை இந்திய ஊடகங்கள் மூலம் பெறும் முயற்சியில் பிரசாத் காரியவாஸம் ஈடுபட்டார்.

இதையொட்டி காரியவாஸம் "சிங்களவர்கள் வட இந்திய பூர்வீகவாசிகள் எனக் குறிப்பிட்டு அனுப்பிய மின்னஞ்சல் செய்தி தற்போது வெளியாகியுள்ளது. அதில் 12 சதவீத தமிழ் மக்களுக்காக இந்தியா கவலை கொள்கிறது. ஆனால், இலங்கையில் உள்ள 75 சதவீத சிங்கள சமூகத்தினர் ஒடிசா மற்றும் வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில்தான் இந்தியா கவலைப்பட வேண்டும்" என்று அவர் கருத்துக் கூறியுள்ளார்.

பிரசாத் காரியவாஸத்தின் மின்னஞ்சல் முகவரியில் இருந்து



## கசிந்துள்ள காரியவாஸத்தின் இரகசியப் பிரசாரம்

இலங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட தனியார் ஊடக மக்கள் தொடர்பு நிறுவனத்துக்கு கடந்த 19-ம் திகதி இந்த மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் மூலம் இலங்கைத் தூதரின் மின்னஞ்சல் தற்போது டில்லியில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மின்னஞ்சலின் விவரம் வருமாறு: அசோக சக்ரவர்த்தி ஆட்சி நடைபெற்ற கிறிஸ்து பிறப்பதற்கு 3 நூற்றாண்டுகளுக்கு முன்பே (கி.மு. 300) கலிங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் பதிவாகியுள்ளன. புத்தமதத் தால் ஈர்க்கப்பட்ட அசோகர், தனது மகன் அர்ஹத் மஹிந்தாவையும் மகள் சங்கமித்ராவையும் இலங்கைக்கு புத்தமதச் செய்தியைப் பரப்ப அனுப்பி வைத்தார். இலங்கையில் புத்த நிலையங்களை அவர்கள் நிறுவினர்.

இந்தியாவில் புத்த கயையில் போதி மரத்தடியில் புத்தர் ஞானோதயம் பெற்ற மரத்தின் கன்றை இலங்கையின் அனுராதபுரத்தில் சங்கமித்ரா நட்டார். புனிதம் மிக்க அந்த மரம் இன்றும் பாதுகாக்கப்பட்டு உலகின் மிகப் பெரிய மரமாகத் திகழ்கிறது.

2500 ஆண்டுகளுக்கு முன்பு கலிங்கத்தில் இருந்து எட்டு குடும்பங்களாக அரிஹத் மஹிந்தாவும் சங்கமித்ராவும் வந்த நிகழ்வை இப்போதும் இலங்கை கொண்டாடி வருகிறது.

அந்த வகையில் தற்போது இலங்கையில் உள்ள 75 சதவீத சிங்கள சமூகத்தின் பூர்வீகம் கலிங்கத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் இருந்தும் உருவானதாக நம்பப்படுகிறது. இலங்கையில் உள்ள சிங்கள மக்கள் ஒடிசா, வங்கம் ஆகியவற்றை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

மொகலாயர் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இந்தியாவின் வட மாநிலத்தை குறிப்பாக கலிங்கத்தை சிங்கள மக்கள் தற்போது இணைத்து வருகின்றனர். ஆண்டுக்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்கள் இந்தியாவுக்கு வந்து செல்கின்றனர்.

ஆனால், தமிழ்நாட்டில் இன ரீதியாக தொடர்பில் உள்ள 12 சதவீத இலங்கைத் தமிழர்களுக்காக இந்தியா கவலை கொள்கிறது. ஒடிசா, வட இந்தியாவுடன் வரலாற்றுத் தொடர்பைக் கொண்டவர்கள் சிங்களவர்கள். ஹிந்தி, ஒரியா, வங்காளி ஆகியவற்றுடன் தொடர்புடைய இந்தோ ஆரிய மொழியான சம்ஸ்கிருதத்தை சிங்களவர்களால் பேசவும் எழுதவும் முடியும்.

இந்தியா அவர்களின் பாதுகாப்புக்காகவும், உரிமைக்காகவும்

**சிங்களவர்கள் வட இந்திய பூர்வீகவாசிகள் எனக் குறிப்பிட்டு அனுப்பிய மின்னஞ்சல் செய்தி தற்போது வெளியாகியுள்ளது. அதில் 12 சதவீத தமிழ் மக்களுக்காக இந்தியா கவலை கொள்கிறது. ஆனால், இலங்கையில் உள்ள 75 சதவீத சிங்கள சமூகத்தினர் ஒடிசா மற்றும் வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் தான் இந்தியா கவலைப்பட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.**

கவலைப்பட வேண்டும். இலங்கையில் பிரிவினைவாத சக்திகளை ஒடுக்கி, இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணமாக இருந்த விடுதலைப் புலிகளை அழித்த அதிபர் மஹிந்த ராஜபக்ஷ பாராட்டுக்குரியவர் என்று பிரசாத் காரியவாஸம் மின்னஞ்சலில் கூறியுள்ளார்.

இந்தியாவில் பணியாற்றும் வெளிநாடுகளின் தூதர்கள் உள்நாட்டு அரசியல் நடவடிக்கையில் கலகம் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது.

இந்த நிலையில், டில்லி ஊடகங்கள் வட்டாரத்தில் பிரசாத் காரியவாஸத்தின் மேற்கண்ட மின்னஞ்சல் தகவல் தற்போது வேகமாகப் பரவி வருகிறது. இலங்கை விவகாரம் தொடர்பாகத் தமிழகத்தில் நடைபெற்றுவரும் போராட்டங்கள் தீவிரமாகி வரும் நிலையில், பிரசாத் காரியவாஸத்தின் மின்னஞ்சல் தகவல் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நஞ்சைப் பரப்பும் இலங்கைத் தூதர் பிரசாத் காரியவாஸத்தை இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ கூறியுள்ளார்.

இலங்கையின் நாகரிகத்தைக் காத்து வருபவர்கள் இலங்கைத் தமிழர்கள்; இலங்கை மண் தமிழர்களுக்கான உரிமை. காரியவாஸத்தின் கூற்றுக்கு வரலாற்று ஆதாரம் கிடையாது. இந்தக் கருத்தை வெளியிட்டதற்காக அவரை நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும். இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தையும் மூட வேண்டும். இலங்கைக்கு இனியும் இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்தால், இந்திய ஒருமைப்பாட்டை ஒருபோதும் காப்பாற்ற முடியாது என்று வைகோ கூறியுள்ளார்.

டில்லியில் வைத்து செய்தியாளர்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா கூறியதாவது: தூதர் என்பதை மறந்துவிட்டு அந்த நாட்டு அதிபரின் அரசியல் உதவியாளர் போல் பேசுவதை பிரசாத் காரியவாஸம் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிடுவது அவருக்கு இது முதல் முறையல்ல. சிங்களவரின் பூர்வீகம் பற்றி கருத்து வெளியிட்டு மறைமுகமாக, அந்த சமூகத்தினருக்கு இந்தியா ஆதரவாக இல்லை என்ற கருத்தை பிரசாத் காரியவாஸம் திணிக்க முற்பட்டுள்ளார். அவரது பேச்சும், செயலும் உள்நோக்கம் கொண்டவை என்று சந்தேகிக்கிறோம். அவரை நேரில் அழைத்து மத்திய அரசு விளக்கம் கேட்க வேண்டும் என்று ராஜா தெரிவித்துள்ளார்.

*(நன்றி : தினமலர்)*


**மருத்துவம்**

நரைமுடியை கறுப்பாக்க, 3வாரத்தில் வளரச் செய்ய, உயரத்தை அதிகரிக்க, நிறை குறைக்க, வெண்குஷ்டம், தழும்பு, முகப்பரு நீக்க, முகம் வெண்மையாக, மதுபானம், புகைத் தலை கைவிட ஆங்கில மருந்து (ஊசி மூலமும்).

தொடர்பு - 0715175957 -

# 3 ஆவது அணி அமையத் திட்டம்







மத்திய அரசிலிருந்து தி.மு.க வெளியேறியதை அடுத்து காங்கிரசும் பி.ஜே.பியும் அல்லாத 3 ஆவது அணி அமைப்பதில் எதிர்க்கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. முன் கூட்டியே இந்த நிலைப்பாட்டில் இருந்து வந்த இடதுசாரிகளுக்கு தி.மு.க வெளியேறியது பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்தது போல இது அமைந்துவிட்டது. காலா காலமாக தி.மு.கவானது இடதுசாரிகளுடன் மிகுந்த நெருக்கமாக இருந்து வந்த கட்சியாகும். இடையில் தி.மு.க - பி.ஜே.பியுடனும் காங்கிரசுடனும் மாறி மாறி உறவுகொண்டு மத்திய அரசில் இடம்பெற்று வந்ததால் இடதுசாரிகள் தி.மு.கவை தூர விலக்கி வைத்திருந்தனர்.

இப்போது அந்தத் தடை விலகி விட்டதால் இடதுசாரிகள்-தி.மு.க- ஒரிசா முதல்வர் பட் நாயக்கின் BJD கட்சி, (இவர் பி.ஜே.பியையும், காங்கிரசையும் கடுமையாக எதிர்ப்பவர்) பீஹார் முதல்வர் நிதிஷ்குமார் (இவரும் பி.ஜே.பி அணியில் இப்போதைக்கு இருந்தாலும் நரேந்திரமோடி பி.ஜே.பியின் பிரதமர் வேட்பாளராகத் தெரிவினால் நிச்சயமாக பி.ஜே.பி அணியைத் துறந்து விடுவாரென்பது தெரிந்த விடயமாகும்) ஹரியானாவின் INLD கட்சி, பஞ்சாப்பின் அகாலிதளம் என ஒத்தகருத்துள்ள கட்சிகள் இணைந்து 3 ஆவது அணி அமைக்கத் தயாராகி வருகின்றன. 1989 இல் வி.பி.சிங் தலைமையில் இக்கட்சிகள் ஒரே அணியில் திரண்டு ராஜீவை வீழ்த்தியது நினைவிருக்கலாம். இந்த 3 ஆவது அணி பற்றி காங்கிரஸ் அதிகம் அலட்டிக் கொள்ளாவிடினும் பி.ஜே.பியும், ஜெயலலிதாவும் தான் விழிபிதுங்கி நிற்கின்றனர். மூழ்கும் கப்பலான காங்கிரசுடன் தி.மு.க இருந்தால் தி.மு.கவையும் சேர்த்து மூழ்கடித்து விடலாம் என்ற நப்பாசையில் இருந்த ஜெயலலிதாவின் திட்டத்தில் மண் விழுந்துள்ளது. இதனால் இதுவரை பி.ஜே.பியை எடுத்தெறிந்து வந்த அவர் இனி பி.ஜே.பியுடன் அணிசேர முயற்சிக்கக்கூடும் எனத் தகவல்கள் கூறுகின்றன. இடதுசாரிகள் ஏற்கனவே 3 ஆவது அணி அமைக்கும் திட்டத்தில் இருந்த போதும் அதில் அ.தி.மு.கவை சேர்ப்பதைவிட தி.மு.கவை சேர்ப்பதே இலகுவானதும் நடைமுறைக்கு சாத்தியமானதாகும். ஜெயலலிதாவை சேர்ப்பதாயின் அவர் நேரடியாகப் பிரதமர் பதவியைக் கோருவார். தி.மு.க அந்த மாதிரித் தனக்கு பிரதமர் பதவி வேண்டுமென அழுங்குப் பிடியாக நிற்கப்போவதில்லை. மேலும், வட மாநிலக் கட்சிகள் பலவற்றுடன் நட்பாக இருக்க ஜெயலலிதா தவறிவிட்டார். தி.மு.கவோ காங்கிரசுடன் கூட்டணியில் இருந்த போதும் கூட அந்த வட மாநில கட்சிகளுடன் மறைமுகமாக நல்லுறவைப் பேணி வந்துள்ளது. அவர்களும் பெரிதாக தி.மு.கவை தாக்காமல் காங்கிரசை மட்டுமே தாக்கி வந்தனர். பழையகால நட்பு வேறு தி.மு.கவுடன் இருந்துள்ளது.

ஆனாலும், ஜெயலலிதாவின் தன்னம்பிக்கை சாதாரணமானதல்ல. முலாயம் சிங், ஒரிசா முதல்வர் பட்நாயக், ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திர பாபு நாயுடு ஆகியோருடன் நல்லுறவை அவர் கொண்டுள்ளார். கம்யூனிஸ்ட்களுடன் தி.மு.க இணைந்து அணி அமைத்தால் திரிணாமுல் காங்கிரசுடன் ஜெயலலிதா இணைந்திருக்க முடியும். அதற்கு திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜியுடன் நட்பை ஏற்கனவே வளர்த்திருக்கவேண்டும். ஜெயலலிதா எவரையும் எடுத்தெறிந்தே பழகியவர் என்பதால் அவரால் இந்த விடயத்தில் சாதிக்க முடியவில்லை.

இலங்கைத் தமிழர்களைத் தி.மு.கவும், காங்கிரசும் கொன்று குவித்தன என்ற கோஷத்தை மட்டும் கொண்டு தமிழகத்தின் 40 தொகுதிகளையும் வென்றுவிடமுடியும் என அவர் நம்புவது தர்க்க ரீதியாக சரியானதல்ல என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். வடக்கே நண்பர்கள் இன்று அகில இந்திய ரீதியில் பிரதமர் வேட்பாளராக அவரை முன்னிறுத்தி எங்கும் பிரசாரம் செய்யாவிடில் அவர் நினைத்தபடி பிரதமர் நாற்காலியில் உட்கார முடியாது என்பது மட்டும் நிச்சயம். தமிழகத்தின் உள்ளே மின்சாரத் தடைப் பிரச்சினை பெரு நெருப்பாகப் பற்றி எரிந்த வண்ணமுள்ளது. இலங்கைத் தமிழர் விவகாரத்தை வைத்து இதை ஜெயலலிதா திசை திருப்ப முயன்றாலும் சிக்கல்கள் அவருக்கு இல்லாமல் இல்லை. அதிலும் இலங்கைத் தமிழருக்காக அமைச்சர் பதவிகளைத் துறந்தோம் என மார் தட்டிக் கொள்ளும் தி.மு.கவினர், அ.தி.மு.கவின் பிரசாரத்தினை விழுங்கி விடுவர் எனக் கருதப்படுகிறது. தி.மு.கவின் கூட்டணியும் பலமாக இருக்கும் பட்சத்தில் ஜெயலலிதாவின் திட்டம் தவிடுபொடியாக சகல வாய்ப்புக்களும் உள்ளன. சில லோக்சபா தொகுதிகளில் தி.மு.க கூட்டணி வெல்ல முடியும் என்பது இப்போதே தெளிவாகிவிட்டது. தெற்கே கன்னியாகுமரி தொகுதியில் அ.தி.மு.க மிகவும் பலவீனமாக உள்ளது. கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் கணிசமாக வாழும் இத்தொகுதியில் மட்டுமே கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க வெல்ல முடியாது போயிற்று.

இங்கு அ.தி.மு.க தோற்க பிரதான காரணம் பெரும்பான்மையான இந்து வாக்குகளை தனித்துப் போட்டியிட்ட பி.ஜே.பி அள்ளிச் சென்றதாகும். இது போல நீலகிரி தொகுதியிலும் காங்கிரஸ் தி.மு.க இரண்டும் பலமாக உள்ள அளவுக்கு அ.தி.மு.க பலமாக இல்லை. காங்கிரஸ், தி.மு.க என இருதிசைகளில் வாக்குகள் உடைந்து அ.தி.மு.க - பி.ஜே.பி கூட்டணியும் அமைந்தால் கன்னியாகுமரி, நீலகிரி இரண்டிலும் அ.தி.மு.க தேறிவிடக் கூடும். இவ்வாறே திண்டுக்கல் தொகுதியில் காங்கிரஸ் செல்வாக்கு அதிகம் உள்ளது. காலம் காலமாக அ.தி.மு.கவை ஆட்சிப் பீடமேற்ற உதவிய கோயம்புத்தூர் தொகுதியில் இம்முறை அதிகளவு வளர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. மேலும், சென்னை தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங்களிலும் தினமும் 16 மணி நேர மின்வெட்டு இருப்பதால் கோயம்புத்தூர் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் என்றால் தொழிற்சாலை நகரம் கோயம்புத்தூராகும்.

மின்வெட்டில் கோயம்புத்தூரின் கோபம் ஜெயலலிதா மீது திரும்பியுள்ளது. பெரும்பாலான தொழிற்சாலைகள் மாதக் கணக்காக மூடியே கிடக்கின்றன. இந்த நிலைமை தொடர்ந்தால் கோவையில் அ.தி.மு.க மண் கவ்வுவது நிச்சயமென்று கூறப்படுகிறது.

சென்னையில் மட்டும் ரவுடிகள் தொல்லை குறைந்திருப்பதால் அ.தி.மு.க வெற்றி பெற வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. மற்ற முக்கிய நகரங்களான திருச்சி, சேலம், மதுரை என்பவற்றிலும் அ.தி.மு.கவுக்கு கணிசமான வாக்குகள் கிடைக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகபட்டினம் என்பன காங்கிரஸ் மற்றும் தி.மு.க-கம்யூனிஸ்ட் அணிகளுக்கு கைகொடுக்கக்கூடும். தெற்கே திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் முதலியன காங்கிரசின் பாரம்பரிய கோட்டைகளாக இருந்து பின்னர் படிப்படியாக திராவிட கட்சிகள் வசம் வந்தவை. ஆனாலும், காங்கிரசின் செல்வாக்கு இப்பகுதிகளில் இன்னும் ஓரளவு இருக்கவே செய்கிறது. காமராஜர் இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர் என்பது இதற்கு முக்கியமான காரணம் எனலாம்.

இது ஒருபுறமிருக்க, தி.மு.க ஆதரவை வாபஸ் பெற்றதால் பெரும்பான்மையில் தளர்வுற்ற காங்கிரஸ் கட்சி முலாயம் சிங், மாயாவதி கட்சிகளின் ஆதரவுடன் இப்போதைக்கு ஆட்சி கவிழ்வதை தவிர்த்துக் கொண்டாலும் மிக விரைவில் முலாயம் சிங் யாதவ் ஆட்சியைக் கவிழ்க்கத் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், வேடிக்கை என்னவெனில் ஒருவருடத்துக்கு முன் காங்கிரசுடன் உறவை முறித்து ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜியை முன்னிறுத்துவதையும் தடுக்க முனைந்த மம்தா பானர்ஜி மீண்டும் காங்கிரஸ் மீது கருணைப் பார்வை காட்டத் தொடங்கியுள்ளமையாகும். அவரது மேற்கு வங்காள மாநிலத்தில் பல விடயங்களில் தோல்வி கண்டதும் மத்திய அரசுடன் மோதியதால் மத்திய அரசு நிதி கிடையாததும் மம்தாவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. முதல் தடவையாக முதல்வரான மம்தா அனுபவக் குறைவால் சகல தரப்பின் எதிர்ப்பையும் ஒரு வருடத்துக்குள்ளாகவே சம்பாதித்துக் கொண்டுள்ளதால் மீண்டும் கம்யூனிஸ்ட்கள் எழுச்சி பெற்று வருகின்றனர். இதை உணரத் தொடங்கி உள்ள மம்தா காங்கிரசுடன் இணையாவிடில் லோக்சபா தேர்தலில் தோல்வி தான் என்ற உண்மையை உணர்ந்துள்ளதால் முலாயம் காங்கிரசின் காலை வாரிவிட்டால் இருக்கவே இருக்கிறார் மம்தா என காங்கிரஸ்கள் கூறுமளவுக்கு நிலைமை உள்ளது. இத்துடன் பீஹார் மாநிலத்துக்கு முதல்வர் நிதிஷ்குமார் கோரிய பின்தங்கிய மாநிலம் என்ற சிறப்பு அந்தஸ்தை வழங்குவது மூலம் அவரையும் வளைத்துப் பிடிக்க காங்கிரஸ் முயன்று வருகின்றமை கடந்த வாரங்களில் தெளிவாக வெளிப்பட்ட உண்மையாகும். பி.ஜே.பி. அணியில் தற்போதைக்கு நிதிஷ்குமார் இருந்தாலும் அவர் நரேந்திரமோடியின் பரமவைரி ஆவார். மோடி பி.ஜே.பியின் பிரதமர் வேட்பாளர் எனில் நிதிஷ்குமார் உடனடியாகக் காங்கிரசை ஆதரிப்பார் என்பதும் இது தேர்தல் வரும் வரை ஆட்சி கவிழாமல் இருக்க காங்கிரசுக்கு உதவக் கூடும் என்பதும் கவனிக்கத்தக்கது. மொத்தத்தில் ஒரு மாநிலக் கட்சி காலைவாரினால் இன்னொரு மாநிலக்கட்சியின் தோளில் சவாரி செய்வது என்ற உத்தியே காங்கிரசுக்கு இப்போதைக்குக் கைகொடுத்து வருகிறது எனலாம்.

அபிஜித்




**ம. கலைவாணி, நீர்வேலி.**

கே : நட்பு தூய்மையானது, காதல் புனிதமானது என்ற வாக்கியங்கள் இக்காலத்திற்கு ஏற்றதா பித்தரே..?



ப : நட்பு, காதல், வாழ்க்கை எல்லாமே இப்படித் தான் இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். சில சமயங்களில் அவ்வாறு அமையலாம் இல்லாமலும் போகலாம். எனவே, எதிலும் ஆழ்ந்த நம்பிக்கை, எதிர்பார்ப்பு வைத் திருக்கக் கூடாது. அவ்வாறு வைத்திருந்தால் ஏமாற்றம் ஏற்படும்போது மனம் தாங்காது. ஒவ்வொன்றும் அந்தந்த வயதில் அந்தந்தத் தருணங்களில் அந்தந்த உணர்ச்சி நிலைகளில் புனிதமானதாகவும், தூய்மையானதாகவுமே தோன்றும். ஜென்மத் தத்துவம் அழகைப் பற்றி இப்படிச் சொல்கிறது. 'அழகு நிலையற்றது ஆனால் அழகு என்கிற தத்துவம் நிலையானது'

எனவே நட்பு, காதல் போன்றவற்றையும் இதன் அடிப் படையிலேயே நோக்கலாம்.

**கே. சுகுமார், வத்தளை.**

கே : நன்றி மறப்பது நன்றன்று... இதற்குப் பித்தரின் விளக்கம் என்ன?




ப : இதற்கு வள்ளுவர் கொடுத்துள்ள விளக்கத்தைவிட என்ன உள்ளது? இன்றைய அவசர உலகில் ஒருவர் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பதற்கே பலருக்கு நேரம் கிடைப்பதில்லை. எனக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம் ஆயிரம் ரூபா கடன் தருமாறு கேட் டார். "ஒரு அவசரத்தேவை சம்பளம் எடுத்த வுடன் அதாவது, ஒரு கிழமையில் தந்து விடுவேன்" என்றார். மூன்று மாதங்களாகியும் அவர் பணத் தைத் திருப்பித் தரவில்லை. ஒரு முறை அவ ரிடம் அதனை ஞாபகப்படுத்தி னேன். "ஐயோ நான் மறந்து போனன் நீங்கள் முதலே ஞாபகப்படுத்தியிருக்கலாமல்லோ" என்றார். இதனை ஏன் சொல்கிறேன் என்றால், வாங்கிய கடனை மறப்பதும் நன்றன்று.

**வ. சோதிமாறன், திருகோணமலை.**

கே : வாழ்க்கையில் வெற்றிபெற என்ன செய்ய வேண்டும்?




ப : நாம் ஒரு இலக்கைத் தீர்மானிக்க வேண்டும். அந்த இலக்கை வெற்றி பெறுவது குறித்துக் கனவு காணவேண்டும் (அப்துல் கலாம் கூறியது போல) அடுத்து திட்டமிட வேண்டும். நாளும் பொழுது மாக அதை நோக்கி நகர வேண்டும். இடையூறு கள், தோல்விகள் ஏற்படும்போது சோர்ந்துவிடக் கூடாது. சவால்களை முறியடித்து முன்னேற வேண்டும். செல்லும் பாதை நேர்மையானதாக இருக்க வேண்டும். வாழ்வில் வெற்றி பெறுவது தொடர்பாக 'சுடர் ஒளி'யில் தொடர்ச்சியாக வெளிவரும் பத்தியைத் தொடர்ந்து வாசியுங்கள் அது உங்களுக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கும்.

## மன்னிக்கும் மனப்பான்மை இல்லாவிட்டால்...

**எம். வாசுதேவன், சிலாபம்.**


கே : மன்னிக்கும் மனப்பான்மை இல்லாவிட்டால் உலகம் எப்படியிருக்கும் பித்தரே.



ப : மறத்தல் இயலா விட்டாலும் மன்னித்தல் இன்றியமையாதது. மற்றவர்கள் செய்த தவறை மன்னித்தல் மட்டுமல்ல நாம் செய்த தவறுக்கும் மற்ற வரிடம் மன்னிப்புக் கேட்பது சிறந்த பண்பாடு. உலகில் தவறு செய்யாதவர்கள் என்று எவருமில்லை எனலாம். தவறை உணர்தல், தவறுக்காக வருந்துதல், தவறைத் திருத்திக் கொள்ளுதல், எமது தவறால் எவருக்கும் பாதிப் பேற்பட்டிருந்தால் அவரிடம் மன்னிப்புக் கோருதல் எல்லாம் மனிதருக்குள்ள சிறந்த பண்பாகும். உலகில் இடம்பெறும் போர்களுக்கும், வன்முறை களுக்கும் காரணம் மன்னித்தலற்ற, இரக்கமற்ற மனப்பான்மையே. ஜப்பானின் இலங்கைக்கான சிறப்புத் தூதுவராகப் பணியாற்றிய யகுசி அகாசி எம்மிடம் பகிர்ந்துகொண்ட விடயம் நினைவுக்கு வருகிறது.

அமெரிக்கா ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாக்கியா மீது போட்ட நாசகாரக் குண்டுத் தாக்குதலின் வடுக்கள் இன்னும் மறையாமலிருக்கிறது. ஆனால், நாம் அதனையே மனதில் வைத்துக்கொண்டு செயற்படவில்லை. அமெரிக்காவுடன் பின்னர் நட்புறவை வளர்த்துக் கொண்டோம். அதனூடாக ஜப்பானை பலதுறைகளில் வளர்த்துக் கொண் டோம். தொடர்ந்து பகைமை மனப்பான்மையுடன் இருந்திருந்தால் நாம் இந்தளவுக்கு வளர்ந்திருக்க முடியாது. இவ்வாறு அவர் சொன்னார். இது இன்று தலைமைகளின் சிந்தனைக்கு ஏற்றதாகும்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 567



அனுப்புபவர் பெயர் :..................................................

விலாசம் :..................................................

..................................................

கையொப்பம் :..................................................

### மேலிருந்து கீழ்

1. ஒளியினால் ஏற்படும் வெளிச்சம்
2. இசைக்கருவிகளை மீட்டு
3. சங்ககாலப் பாடல்களில் பொதுவாக வரும் முக்கிய பாத்திரம்
4. வீடு
5. ஓர் முற்கால ஆயுதம்
7. பல மனைவியர்களை மணந்து கொள்வது
10. நீதிமன்ற வழக்கில் நீதிபதி முன்னிலையில் சொல்லப்படுவது
12. இதனைப் படிப்பதால் அறிவு வளரும்
13. ஒரு சிற்றுண்டி வகை
19. பிரஜை

### இடமிருந்து வலம்

1. விட்டுக் கொடுக்காமை
4. வேகவை
6. பிரதிமை
7. சூரியன் உதித்ததிலிருந்து மறையும் வரையுள்ள நேரவேளை
8. பழுக்காத நிலை
9. பாரிய
11. பற்களால் அரை
14. தென்னந்தும்புக்கும் தேங்காய்க்கும் இடையில் இருப்பது
15. இது பாதுகாப்பு தரும்
16. சுனை
17. உரிய
18. தகராறு
20. அற்ப மதிப்புடைய நாணயம்

## போட்டி இல. 564 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** செல்வி அ. பவித்ரா, இல. B-1, அரச விடுதி, சரவணா வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

**2ஆம் பரிசு** ம. பவகீர்த்தனா, இல. 52, சிவபுரம், கிராஞ்சி, பூநகரி.

**3ஆம் பரிசு** ச. ஆரணி, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

## பாராட்டுப் பெறுவோர்

(1) ம. குருச்சந்திரன், இல. 39/24, சிவன் வீதி, திருகோணமலை.

(2) ஆர். டி. அதிஅரமட், இல. 73 A, தல்லு வீதி, பாலமுனை-02.

(3) முருக நடராசன், கணவத்தை, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

(4) எச். அனித்தா, இல. 15 4/5, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை.

(5) ச. விக்டர் செல்வரத்தினம், இல. 14/45, கணேசபுரம், மண்டூர்.

(6) திருமதி மேரி மாக்ரேற் அருளப்பு, இல. 99/17, புதுமுகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

(7) செ. ஜெரோம், இல. 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(8) B. குருஷாமினி, இல. 165/16, பார் வீதி, மட்டக்களப்பு.

(9) ஐ. தாஜிடீன், டீன்ஸ் வீதி, அட்டாளைச்சேனை.

(10) சி. உலகேஸ்வரி, இல. 68/17, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-10.

## சொற்சிலம்பம் போட்டி இல. 567

சொற்சிலம்பம் 567 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டை யில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப் பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 565 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. அசம்பாவிதம், 2. கரி, 3. பாவலன், 4. வடம், 5. தாகம், 8. சகதி, 9. கரம், 10. பகல், 12. மதலை, 13. பாடம், 16. கரும்பு, 18. களவு, 19. உரம், 20. விரை, 21. பலா,

**இடமிருந்து வலம்**

1. அகம்பாவம், 6. சரி, 7. வட, 8. சக, 9. கலம்பகம், 11. பாமரன், 13. கதி, 14. விதம், 15. பால், 17. தலை, 18. கட, 19. உரு, 20. விளம்பரம், 22. விரைவு, 23. லாம்பு,

# சென்னை ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் இல்லை!

சென்னையில் இவ்வாண்டு இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் இலங்கையைச் சேர்ந்த வீரர்களெவரும் பங்கு கொள்ள மாட்டார்கள் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் இலங்கைக்கெதிரான ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, இலங்கை வீரர்கள் சென்னைப் போட்டிகளில் பங்குபற்ற மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியன் பிறீமியர் லீக்கின் 9 அணிகளில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் தவிர்ந்த ஏனைய 8 அணிகளிலும் இலங்கை வீரர்கள் இடம்பெற்றுள்ள நிலையில் சென்னையில் இடம்பெறவுள்ள 10 போட்டிகளிலும் அவ்வீரர்கள் பங்குபற்றுவதைத் தவிர்க்குமாறு இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பில் இணைந்துள்ள வீரர்கள், பார்வையாளர்கள், மைதானங்களில் பணி புரிவோர் ஆகியோரது பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியன் பிறீமியர் லீக் அமைப்புத் தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்து, இங்கிலாந்து டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.



நியூசிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவடைந்துள்ளது. இதன்படி இத்தொடர் 0-0 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

ஒக்லான்டில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி பீற்றர் புல்ற்றனின் 136 ஓட்டங்கள், கேன் வில்லியம்ஸனின் 91 ஓட்டங்கள், டிம் சௌதியின் 44 ஓட்டங்களின் துணையோடு 443 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்டீவன் பின் 6 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும், மொன்டி பனசர், ஜொனதன் ட்ரொட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மற் பிரயரின் 73 ஓட்டங்கள், ஜோ றூட் இன் 45 ஓட்டங்களின் துணையோடு 204 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ட்ரென்ட் போல்ட்ற் 6 விக்கெட்டுக்களையும், டிம் சௌதி 3 விக்கெட்டுக்களையும், நீல் வக்னர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது 2ஆவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி பீற்றர் புல்ற்றனின் 110 ஓட்டங்கள், பிரென்டன் மக்கலத்தின் அதிரடி 53 பந்துகளில் பெறப்பட்ட 67 ஓட்டங்களின் துணையோடு 6 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட், மொன்டி பனசர் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டீவன் ஃபின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

481 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 143 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுக்களை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றபோது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக மற் பிரயர் ஆட்டமிழக்காது 110 ஓட்டங்களையும், இயன் பெல் 75 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 43 ஓட்டங்களையும் பெற்றனர். தவிர, 77 பந்துகளை எதிர்த்தாடிய ஸ்ருவேர்ட் ப்ரோட் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக கேன் வில்லியம்ஸன் 4 விக்கெட்டுக்களையும், நீல் வக்னர், டிம் சௌதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ட்ரென்ட் போல்ட்ற் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# நல்லூர் பிரதேசச் செயலக விளையாட்டுப்போட்டி



நல்லூர் பிரதேசச் செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வுகள் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டார்.

மொத்தப்புள்ளிகள் அடிப்படையில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியதுடன், இரண்டாம் இடத்தினை ஸ்ரீ கலைமதி விளையாட்டுக்கழகமும், மூன்றாமிடத்தினை மணியந்தோட்ட ஐக்கிய விளையாட்டுக்கழகமும் தட்டிச் சென்றன.

# மிஸ்பாவின் தலைமைப் பதவிக்கு ஆபத்தில்லை



பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கின் தலைமைப் பதவிக்கு ஆபத்தில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உறுதிமொழி பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாகா அஷ்ரப் இனால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

38 வயதான மிஸ்பா உல் ஹக் பாகிஸ்தான் அணியின் டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டி அணிகளின் தலைவராகச் செயற்பட்டு வருகிறார். அவரது வயது காரணமாக, அவரது அணித் தலைமை தொடர்பாகக் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணிக்கெதிரான 5ஆவது போட்டிக்கு முன்னதாக வீரர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களைச் சந்தித்த கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப் இந்த உறுதி மொழியை மிஸ்பா உல் ஹக் இற்கு வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் தலைவராக மிஸ்பா உல் ஹக்கே தெரிவுசெய்யப்படுவார் எனவும், எனவே அணித்தலைமைகுறித்தும், அணியில் அவரது இடம் குறித்தும் மிஸ்பா உல் ஹக் கவலையடையாது அணியின் திறமைவெளிப்பாடுகள் குறித்தும் கவனஞ் செலுத்துமாக ஷாகா அஷ்ரப் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அணியிலுள்ள எந்தவொரு வீரரும், அவர் சிரேஷ்ட வீரராகவோ அல்லது கனிஷ்ட வீரராகவோ இருந்தாலும், அணியில் அவர்களது இடத்தை நிரந்தரமாகக் கருதக்கூடாது என அவர் எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# Gmail மின்னஞ்சல் சேவையில் புதிய Composer

முன்னணி மின்னஞ்சல் சேவையை வழங்கிவரும் Gmail ஆனது கடந்த ஒக்டோபர் மாதம் மின்னஞ்சல்களை உருவாக்குவதற்கென புதிய Pop-Up Composer விண்டோவினை அறிமுகப்படுத்தியிருந்தது.

எனினும், இப்புதிய வசதி சில பயனாளிகளுக்குப் பிடித்தமானதாக இருந்த போதிலும் அதிகளவானவர்கள் விரும்பியிருக்கவில்லை. ஆனால், தற்போது இப்புதிய வசதியினை விரும்பியோ விரும்பாமலே, அனைவரும் பயன்படுத்த வேண்டிய நிலமை உருவாகியுள்ளது.

அதாவது தற்போது புதிய மின்னஞ்சல்களை உருவாக்கும்போது Pop-Up Composer விண்டோவினை மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக Gmail மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


புலமைப் பெற்றோர்களே!

இதோ புதுப்பொழிவுடன் வெளிவந்துவிட்டது

உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்கான கையேடு

புலமை 25

உள்ளே...

எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், தரம் 4, 5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள், மேலும் பல தகவல்களுடன்




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



Hero

விற்பனைக்கு பிந்திய சேவை பாசறை

கொழும்பு–காலி–யாழ்ப்பாணம்–மட்டக்களப்பு–கம்பஹா

இன்றிலிருந்து 05-04-2013 வரை மட்டுமே



நிச்சயமாக திருப்திகரமான சேவை

உங்கள் உந்துருளிகளுக்கு நவீன தொழில்நுட்பத்திலான இயந்திரங்களைக் கொண்டு சிறப்பான சேவைகளை பெற்றுக்கொள்ள ஹீரோ மொட்டோகோப் நிறுவனத்தினர் உங்களை அன்புடன் அழைக்கின்றார்கள். எனவே மேற்கூறிய இடங்களுக்கு குறிப்பிட்ட திகதிகளில் விஜயம் செய்து சிறப்பான சேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

சேவையாளர் கொடுப்பனவு கழிவு | உதிரிபாகங்களுக்கு தள்ளுபடி | இலவச உந்துருளி பரிசீலனை | அங்கத்தவர் அட்டைகள்

Hero SERVICE


உங்கள் ஹீரோ ஹொண்டா இப்போது ஹீரோ மொட்டோகோப்

அழையுங்கள் 071 8623388

இல.212, நீர்கொழும்பு வீதி, பேலியகொடை
தொலைபேசி: 011 7444450/7
தொலைநகல்: 011 2933745

Abans AUTO


# ரோபோ தொழில்நுட்பத்தைக் கொண்ட ஜெலி மீன் உருவாக்கம்



Virginia Tech கல்லூரியைச் சேர்ந்த பொறியியல் பிரிவு ஆராய்ச்சியாளர்கள் சிலர் இணைந்து RoboJelly எனப்படும் ரோபோ தொழில்நுட்பத்தைக் கொண்ட, நீரில் நீந்தக்கூடிய ஜெல்லி மீனை உருவாக்கியுள்ளனர்.

சுமார் 1.7 மீட்டர்கள் நீளமான இந்த 'ஜெல்லி பிஸ்' ஆனது 77கிலோ கிராம்கள் நிறை உடையதாகவும் காணப்படுகின்றது.

மேலும், இக்கண்டுபிடிப்பானது கடலடி ஆய்வுகள் மற்றும், கடல் வாழ் உயிரினங்கள் தொடர்பான ஆய்வுகள் போன்றவற்றிற்குப் பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டனில் நடைபெற்ற ஈஸ்ரர் திருவுருவக் காட்சிகள்!







## தாயாகிப் போன மகன்!



ஒரு தாய் தம் பிள்ளைகளை உணவூட்டிப் பராமரிப்பது சாதாரண வழக்கம். ஆனால் இங்கு ஒரு மகன் கரங்களை இழந்த தன் தாய்க்கு உணவூட்டுகிறான்!






## மின்னஞ்சல் சேவையில் புதிய அன்ரோயிட் மொபைல் சாதனங்களை சிறந்த முறையில் பாவிப்பதற்கு...




தற்போது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற இயங்குதளமாக கூகுளின் அன்ரோயிட் மாறிவருகின்றது.

இதன் விளைவாக புதிதாக அறிமுகமாகும் பல்வேறு இலத்திரனியல் சாதனங்களும் அதிகளவில் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு அன்ரோயிட் இயங்குதளத்தினைக் கொண்ட மொபைல் சாதனங்களை வைரஸ்களிடமிருந்து மட்டுமல்லாது பல்வேறு பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட Advanced Mobile Care மென்பொருளின் புத்தம் புதிய பதிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது சிறந்த அன்டிவைரஸாக தொழிற்படுவதுடன் மின்கலத்தினை சரியான முறையில் பாதுகாத்தல், அப்பிளிக்கேஷன்களை முகாமைத்துவம் செய்தல், கணனி விளையாட்டுக்களின் வேகத்தை அதிகரித்தல், போன்ற வசதிகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஏப்ரல் 03 ஆம் திகதி வெளியிடப்பட்டது.